
"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4 : 12)

தேவகாளம்



ஆர்தர் வாக்கிங்டன் பிங்க் 1886 - 1952

பரிசுத்தவான் ஆர்தர் வாக்கிங்டன் பிங்க் 1952-ஆம் ஆண்டு ஸ்டானோவே தீவில் மரித்தபோது அவரது மரணச்செய்தி அந்த தீவிலுள்ள அவரது கொஞ்சம் நண்பர்களுக்கும் மற்றும் சில நாடுகளிலுள்ள சொற்பமான தேவ மக்களுக்கும், "வேத வசனங்களில் போதனைகள்" என்ற அவருடைய பத்திரிக்கை சந்தாதாரர் களுக்குமேயன்றி பிறிதொருவருக்கும் தெரியாது. காரணம், அந்த நாட்களில் அவர் அத்தனை பிரபல்லியமானவர் அல்ல. அவருடைய

Vol. No. 32 மே - ஆகஸ்ட் 2000 No. 5 to 8

பத்திரிக்கையின் சந்தாதாரர்கள் அதிகம் அதிகம் சொல்லப்போனால் ஒரு ஆயிரத்துக்கு உட்பட்டவர்கள் தான். ஆனால் அவர் மரித்து சுமார் 50 ஆண்டுகளுக்கு பின்னான இன்று அவருடைய பெயர் உலகமெங்கும் பரிமளித்து நிற்கின்றது. அவருடைய அருமையான புத்தகங்கள் உலகமனைத்திலுமுள்ள தேவ மக்களால் இன்று மிகவும் விரும்பி வாங்கி வாசிக்கப்படுகின்றது. உலகின் பல மொழிகளிலும் அவருடைய புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அவற்றை வாசிப்போர் மிகுதியும் தேவ ஆசீர்வாதம் பெறுகின்றனர். அந்த தேவ பக்தனை ஆண்டவர் அத்தனை ஆசீர்வாதமாக எடுத்துப் பயன்படுத்த அந்த மனிதனிடம் காணப்பட்ட தேவசீலங்கள்தான் என்ன? தொடர்ந்து நாம் ஜெபத்துடன் வாசிப்போம்.

ஆர்தர் பிங்க்கின் பிறப்பு

தேவ பக்தன் ஆர்தர் வாக்கிங்டன் பிங்க் 1886-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதலாம் தேதி இங்கிலாந்து தேசத்திலுள்ள நாட்டிங்காம் என்ற பட்டணத்தில் பிறந்தார். அவருடைய பக்தியுள்ள தகப்பனார் தாமஸ் கிளமண்ட் பிங்க் என்பவரைக் குறித்து அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. அவர் 38 வயதினனாக இருக்கும் போது நமது ஆர்தர் வாக்கிங்டன் பிங்க் பிறந்தார். மகனின் பிறந்த அத்தாட்சிப் பத்திரத்தில் தகப்பனாரின் தொழில் "தானிய வியாபாரி" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. நாட்டிங்காம் பட்டணத்தின் வியாபாரக் கையேட்டில் தந்தை ஒரு தானிய அரவைக்காரர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் ஒரு கடினமான உழைப்பாளியானதால் அவர் தன் தொழிலில் செழிப்புற்று விளங்கினார் என்று தெரிகின்றது.

தந்தையைக் குறித்த தனயனின் நினைவுகள்

ஆர்தர் பிங்க் 5 வயதினனாக இருக்கும்போது மிகவும் வசதிகள் நிரம்பப் பெற்றதோர் வீட்டில் அவருடைய தந்தை குடியேறினதிலிருந்து அவர் நல்ல பணவசதி உள்ள ஓர் வியாபாரி என்பதை நாம் நன்கு யூகிக்கலாம். அது சம்பந்தமாக ஆர்தர் பிங்க் என்ற அந்த தேவ பக்தன் தன் சொந்த தந்தையைப் பற்றிக் கூறுவதை நாம் கவனிப்போம் :-

"என் தகப்பனார் மிகவும் சுறுசுறுப்பான கடின உழைப்பாளி. அவரைப் போல உழைப்பது எல்லாருக்கும் கூடிய காரியமல்ல. அவர் தன்னுடைய 38 ஆண்டு கால உழைப்பில் 3 நாட்கள் தொடர்ந்து ஓய்வு

எடுத்ததே கிடையாது. அவர் ஒரு தானிய வியாபாரி. தானிய சந்தையில் கொள்முதல், விற்பனை போன்ற காரியங்களை கவனித்து விட்டு வீடு திரும்பும் என் தகப்பனாருக்கு இரவில் நிறைய கணக்கு வேலைகளும், எழுத்து வேலைகளும் இருக்கும். அந்த வேலை ஒவ்வொரு வாரமும் வாரக் கடைசி நாள் சனிக்கிழமை இரவு 11-50 மணி வரை நீடிக்கும்" என்கிறார் ஆர்தர் பிங்க்.

தந்தையைக் குறித்து தனயன் மேலும் கூறுவதைக் கவனிப்போம் :-

"என் தகப்பனாருக்குத் தினமும் வியாபார சம்பந்தமாக நிறைய கடிதங்கள் வரும். ஓய்வு நாளிலும்கூட கடிதப் பட்டுவாடா இருக்கும். ஆனால் என் பக்தியுள்ள தந்தை ஓய்வு நாளில் தனக்கு வரும் கடிதங்களை அன்றைய தினம் திறந்து பார்க்க மாட்டார்கள். எங்கள் வீட்டிற்கு வரும் செய்தித் தாட்கள் ஓய்வு நாளில் வீட்டிற்குள் வரவே கூடாது. போயர் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில் கூட செய்தித் தாள்கள் ஓய்வு நாட்களில் எங்கள் வீட்டிற்குள் அனுமதிக்கப்படவில்லை. நாங்கள் சிறுவர்களாக இருந்த நாட்களில் சனிக்கிழமை இரவிலேயே எங்கள் விளையாட்டுப் பொம்மைகள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு பாலகர்கள் படிக்கக்கூடிய வகையில் எழுதப்பட்ட "மோட்ச பிரயாணம்" "இரத்த சாட்சிகளின் ஜீவிய சரித்திரம்" போன்ற பக்தி விருத்திக்கான நூல்களை நாங்கள் ஓய்வு நாளில் படிக்கச் செய்தனர். இப்படிப்பட்டக் காரியம் எங்கள் வீட்டில் மாத்திரமல்ல மற்ற அநேக கிறிஸ்தவ வீடுகளிலும்கூட அந்நாட்களில் கடைப்பிடிக்கப்பட்டன. ஆனால், எங்கள் வீட்டில் பக்தியின் ஒழுங்கோடு இரட்சகர் இயேசுவுக்குப் புகழ்ச்சியாக மிகவும் பரிசுத்தமாக அது கைக்கொள்ளப்பட்டது. நான் சிறுவனாக இருந்த நாட்களில் என் தகப்பனார் தன்னுடைய சப்பாத்துக்களைப் பாலிஷ் போடும் சமயங்களில் நான் அவரண்டை சென்று சப்பாத்துக்களைப் பாலிஷ் பண்ணுவதற்கு ஏன் இத்தனை நேரமும், கஷ்டமும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று என் தந்தையை நான் கேட்டிருக்கின்றேன். நான் அப்படி கேள்வி கேட்கும் ஒவ்வொரு சமயமும் அவர் என்னைப் பார்த்து, "என்னுடைய இயேசு இரட்சகர் இந்த சப்பாத்துக்களைத் தன் காலில் போட்டுக் கொள்ளுவாரானால் நான் எத்தனை நேர்த்தியாக அவருக்கு பாலிஷ் செய்து கொடுப்பேன். அப்படியே அவர் அவைகளைப் போடப் போகிறார் என்ற எண்ணத்தில்தான் நான் பாலிஷ் செய்கிறேன்" என்று கூறுவார்.

சனிக்கிழமைகளில் என் தகப்பனார் இரவு வெகுநேரம் வரை கண் விழித்திருப்பார் என்று நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். அப்படி அவர் சனிக்கிழமைகளில் நள்ளிரவுக்குப் பின்னர் தன்னுடைய படுக்கைக்குச் சென்றபோதிலும் ஓய்வு நாட்களில் களைப்புடன் தன்னுடைய படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கமாட்டார். ஓய்வு நாளில் பிள்ளைகளாகிய எங்களை அழைத்துக் கொண்டு ஆலயம் சென்று பிரசங்கங்களை நாங்கள் கவனிக்கும்படியாகச் செய்வார். ஓய்வுநாட்களில் பிற்பகலில் அவர் சற்று தூங்கி எழும்பும் பழக்கமுடையவராதலால் பிள்ளைகளாகிய எங்களை ஓய்வுநாள் பள்ளிக்கு அனுப்பமாட்டார். ஆனால் அவர் எங்களைத் தம்மண்டை ஒன்றாகக்கூடி வரச் செய்து வேதாகமத்திலிருந்து சில பகுதிகளை எங்களுக்கு வாசித்துக் காண்பிப்பார். "இரத்த சாட்சிகளின் வரலாறு" மற்றும் "மோட்ச பிரயாணம்" புத்தகங் களிலிருந்தும் சில பக்கங்களை வாசித்துக் காட்டுவார். ஒவ்வொரு நாளும் என் தந்தை குடும்ப ஜெபம் நடத்துவார். இரவில் குடும்ப ஜெபத்திற்கு நாங்கள் உட்கார முடியாத அத்தனை சின்னஞ்சிறுவர்களாக பிள்ளைகளாகிய நாங்கள் இருக்கும்போது எங்கள் பக்தியுள்ள தாயார் எங்களைத் தங்களின் முழங்கால்களுக்கு அருகில் நிறுத்தி எங்களுக்காக ஜெபிப்பார்கள்.

ஓய்வு நாளைக் குறித்த மற்ற என் நினைவுகள் என்னவெனில், பிள்ளைகளாகிய எங்களுக்கு வேதாகமப் பகுதி ஒன்றை வாசித்தே என் தகப்பனார் ஓய்வு நாளைத் தொடங்குவார். அது மாத்திரமல்ல, ஞானப் பாடல்கள் சிலவற்றையும் அவர் பக்தி ததும்பப் பாடிக் களிப்பார். அந்த சின்னஞ்சிறு பிரயாயத்தில் நான் படித்த ஒரு ஆங்கிலப் பாடலின் அடிகள் இன்னும் என் நினைவை விட்டு அகலவே இல்லை. இதோ அந்த வரிகள் :-

கர்த்தர் மகிமைக்காகச் செலவான
கர்த்தரின் பரிசுத்த ஓய்வு நாள்
அள்ளிச் சுமந்து வருமே
அனந்தம் தேவ கிருபைகளை
அவ்வார நாட்கள் அனைத்திலுமே !
(ஆனால்)
தூஷிக்கப்பட்ட ஓய்வு நாளைத்
தொடர்ந்து வரும் பின் நாட்கள்

எத்தனைதான் கோடி கொணர்ந்திடினும்
துயரத்தின் முன்னோடி அதுவேதான்
சந்தேகம் வேறும் உள்ளதுவோ!

நான் 16 வயது இளைஞனாக இருந்தபோது 1902-ஆம் ஆண்டு ஒரு வசந்த கால காலை வேளையில் என் தகப்பனார் தன்னுடைய காலை ஆகாரத்திற்காக சாப்பாட்டு அறையில் அமர்ந்திருந்தார். அப்பொழுது என் தாயாருக்கும், தந்தைக்கும் நடந்த சம்பாஷணையைக் கவனித்தேன். என் தகப்பனார் என் தாயாரைப் பார்த்து, "அன்பே கேட்டாயா செய்தி? இளவரசர் எட்வர்ட் பட்டத்து அரசராக இந்த நாளில் (குறிப்பிட்ட தோர் தேதியிலே) ராஜ கிரீடம் சூட்டப் போகிறாராம். ஆனால் மிகவும் துக்கத்திற்குரிய காரியம் என்னவெனில் செய்தித் தாட்களுக்குக் கொடுக்கப்பட்ட அரண்மனை உத்தரவில் "கர்த்தருக்கு சித்தமானால்" என்ற மேன்மையான எழுத்தைக் குறிப்பிடத் தவறி விட்டார்கள் என்றார். அந்த வார்த்தைகள் நம்முடைய வாலிபனாகிய ஆர்தர் பிங்க்கின் உள்ளத்தில் ஆழமாகக் கிரியை செய்தது. காரணம், அவருடைய தகப்பனார் சுட்டிக்காட்டிய வார்த்தையின்படி எட்வர்ட் இளவரசரின் பட்டாபிஷேகம் குறிக்கப்பட்ட நாளில் நடைபெறவில்லை. காரணம், திடீரென்று அவருக்கு குடல் அழர்ச்சி நோய் உண்டாயிற்று. அதின் காரணமாக இளவரசரின் முடி சூட்டுவிழா ஒத்திவைக்கப்பட்டது.

ஆர்தர் பிங்க் ஜீவ தேவனைவிட்டு அஞ்ஞானியான பரிதாபம்

ஆர்தர் பிங்க்கின் பாலிய காலம் மற்றும் வாலிப பருவத்தின் நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்து நமக்கு எதுவும் தெரியவில்லை. வீட்டில் எத்தனை பக்தி வளர்ப்பில் வளர்க்கப்பட்ட போதிலும் காலம் செல்லச் செல்ல அவருடைய வாழ்வில் பரிசுத்தத்தின் மாறுதல்கள் எதுவும் நடைபெறவில்லை. அவரைப்போல அவரது சகோதரன் பிராங்க் மற்றும் சகோதரி லூயிசும் கர்த்தருடைய அன்பிலிருந்து வெகு தூரமாகத்தான் விலகிச் சென்றனர். நம்முடைய ஆர்தர் ஆண்டவருடைய அன்பிலிருந்து தூரமாக விலகிச் சென்றது மாத்திரமல்ல அவருடைய அவிசுவாசம் வளர்ந்து கிறிஸ்தவ மார்க்கத்திலிருந்தே வழிவிலகி நமது இந்திய நாட்டின் சென்னைப் பட்டணத்தை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் "பிரம்ம ஞான சபை" என்ற ஒரு சாத்தானின் மதப்பிரிவில்

சேர்ந்து கொண்டார். அந்த மதத்தினரின் கொள்கைகள் அந்திக் கிறிஸ்துவின் போதனைகளாகும். மனிதன் தன் நல்வினை, தீவினைக்குத் தக்கதாக திரும்பத் திரும்ப பிறந்து கொண்டே இருப்பான் என்ற துர்ப்போதனையும் அதில் இடம்பெற்றிருந்தது.

ஆர்தர் அந்த பிரம்ம ஞான சபையின் தீவிர அங்கத்தினனாக இருந்தார். லண்டன் பட்டணத்திலிருந்து அந்த சாத்தானின் சபை "லூசிபர்" என்ற பத்திரிக்கையையும், இந்தியாவில் சென்னையிலிருந்து "பிரம்ம ஞானி" என்ற பத்திரிக்கையையும் வெளியிட்டது. எப்படி ஆர்தர் அந்த சாத்தானின் தந்திர வலையில் சிக்கினார் என்பது நமக்குப் புரியவில்லை. அந்த மதக் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட அவர் சீக்கிரமாக அதின் தீவிரமான தொண்டராகவும் மாறினார். அவர் தன்னுடைய 20 வயது இளைஞனான அந்நாட்களில் அந்த மார்க்க சம்பந்தமான கூட்டங்களில் அடிக்கடி கலந்து கொண்டு சாத்தானின் கொள்கைகளைப் பிரசங்கித்தார். அவருடைய பேச்சு சாதுர்யத்தைக் கவனித்த அந்த சபையின் தலைவி "அனி பெசன்ட்" என்பவர் அவருக்கு உயர் பட்டத்தை அளித்து அவரை எப்படியும் இந்தியாவுக்கு அழைத்து வர ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். ஆர்தருக்கு நல்ல குரல்வளம் இருந்ததால் கூட்டத்தினரை கவர்ச்சிக்கும் மேலான திறன் அவரிடமிருந்தது. அவரும் சாத்தானின் அந்த சபையின் பிரதிநிதியாக இந்தியாவிற்கு வர ஆயத்தமாயிருந்தார்.

தந்தையின் கதறலும், தனயனின் இரட்சிப்பும்

இவை யாவற்றையும் அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்த ஆர்தர் பிங்க்கின் பக்தியுள்ள தந்தை தாமஸ் பிங்க் கர்த்தருக்குள் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தார். நம்முடைய ஆர்தர் பிங்க் ஒவ்வொரு நாளும் தன்னுடைய அந்திக்கிறிஸ்து கூட்டங்களில் பேசிவிட்டு இரவில் வெகு நேரத்திற்குப் பின்னர்கூட வருவது வழக்கமாக இருந்தது. ஆனால், அவரின் தகப்பனார் தாமஸ் பிங்க் மிகவும் பொறுமையுடன் மகனின் வரவுக்காக ஒவ்வொரு நாள் இரவும் காத்திருந்து தன்னுடைய மகன் படுக்கைக்கு செல்லும்போது அவருக்கு "குட் நைட்" என்ற இரவு வந்தனத்தைக் கூறுவதுடன் அந்த வந்தனத்துடன் சேர்த்து ஒரு தேவ வசனத்தையும் சொல்லி அனுப்பி வைப்பார். 1908-ஆம் ஆண்டில் ஒரு நாள் ஆர்தர் பிங்க் தம்முடைய வழக்கமான இரவுக் கூட்டத்தில் கலந்து

கொண்டு சொற்பொழிவு ஆற்றிவிட்டு இரவு வந்தார். வந்த அவர் துரிதம் துரிதமாகத் தன் தந்தையைக் கடந்து மேல் மாடிக்குச் சென்றார். மகனின் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்த அவருடைய தகப்பனார் தாமஸ் பிங்க் "குட் நைட்" சொன்னதுடன் அத்துடன் சேர்த்து "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு, அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி 14 : 12) என்று சொல்லி அனுப்பினார். மேல் மாடிக்குச் சென்ற நம்முடைய ஆர்தர் பிங்க் தன்னுடைய பிரம்ம ஞான சபையின் வருடாந்திரக் கூட்டத்தில் பேசுவதற்காகத் தன் அறையின் கதவைப் பூட்டிக் கொண்டு சொற்பொழிவுக்கான குறிப்புகளை எழுதும்படியாக முயற்சித்தார். அது ஒரு முக்கியமான மகா சபைக் கூட்டமாகும். ஆனால் தந்தை சொன்ன மேற் குறிப்பிட்ட நீதிமொழிகள் 14 : 12-ஆம் வசனம் அவருடைய இருதயத்தில் ரீங்காரமிட்டுக் கொண்டு அவரை எழுதவொட்டாமல் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தது. அவரால் தன்னுடைய மனதை ஒருமுகப்படுத்தி குறிப்புகளை எழுத இயலவில்லை. அதைக் குறித்து சார்லஸ் என்ற சகோதரனும் எல்சி பிரஸ்ஸல் என்பவரும் சொல்லுவதைக் கேட்போம் :-

"மேல் மாடி அறைக்குச் சென்ற ஆர்தர் பிங்க் " பிரம்ம ஞான சபை" கூட்டத்திற்கு சொற்பொழிவு குறிப்புகள் எழுத முடியாமற் போகவே, சரீர களைப்பின் காரணமாக அது இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டு நன்றாகக் குளித்து விட்டுத் தன் வேலையைத் தொடங்கினார். ஆனால் "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு, அதின் முடிவோ மரண வழிகள்" என்ற தேவ வசனம் திரும்பத் திரும்ப அவருடைய காதண்டையிலே ஒலிக்கவே அவர் திகைத்து நின்றார். கடைசியாக, ஆர்தர் இனி தான் எந்த நிலையிலும் தன் ஆண்டவரைப் புறக்கணிக்க முடியாது என்பதைத் திட்டமாக உணர்ந்து தேவனுடைய இரக்கத்திற்காக ஜெபத்தில் கெஞ்சத் தொடங்கினார். அந்த மேல்மாடியின் அறையில் ஆர்தர் பிங்க் மூன்று நாட்கள் வெளியே வராமல் கர்த்தருடைய இரட்சிப்புக்காக கதறினார். கீழே அவருடைய பக்தியுள்ள தாயும், தகப்பனும் தங்கள் அருமை மகனை இரட்சிப்பின் பாத்திரமாக மாற்றிவிட வேண்டுமென்று ஒத்தாசையின் பர்வதத்தை நோக்கிய வண்ணமாக ஜெபித்துக் கொண்டிருந்தனர். மூன்றாவது நாள் பிற்பகலில் ஆர்தர் பிங்க் கர்த்தருடைய இரட்சிப்பின் பாத்திரமாக, தேவ சமூகப் பிரசன்ன ஒளி நிறைந்த முகத்துடன் தம்முடைய பெற்றோரண்டை வந்தபோது அவருடைய தகப்பனார் கர்த்தரில் களிகூர்ந்து "கர்த்தருடைய

பரிசுத்த நாமத்திற்குத் துதி உண்டாவதாக. என் குமாரன் இரட்சிப்பைக் கண்டடைந்தான்" என்று ஆரவாரித்தார். அல்லேலூயா.

கர்த்தரின் பைத்தியக்காரன்

ஆர்தர் பிங்க் பேசுவதாக இருந்த அந்த பிரம்ம ஞான சபை கூட்டத்தில் அவர் பேசவே செய்தார். முன்பு போல சாத்தானின் தத்துவங்களைப் பேசாமல் வேத புத்தகத்தின் தேவனைக் குறித்து இப்பொழுது பரிசுத்த ஆவியானவரின் நிறைவுடன் பேசினார். கூட்டத்தினரிடையே ஒரு முணங்கல் உண்டாயிற்று. ஆர்தருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றனர் கூட்டத்தினில் பலர். பித்தம் சிரசில் ஏறிப் பிதற்றுகிறான் என்றனர் மற்றும் பலர். போதிய ஓய்வு எடுத்தால் பழைய நிலைக்கு ஆர்தர் வந்துவிடுவான் என்று கூறினர் வேறு சிலர். அந்த இரவில் ஆர்தர் மெய்யான தேவனையும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் மாத்திரமே உள்ளதான பூரண இரட்சிப்பையும் குறித்து ஆணித்தரமாகப் பேசினார். அந்த இராத்திரியில்தானே அவர் சாத்தானின் சபையான பிரம்ம ஞான சபையிலிருந்தும் அதின் அனைத்துப் பொறுப்புகளிலுமிருந்தும் ராஜினாமா செய்து விட்டார். அவர் தன்னுடைய இரட்சிப்பைக் குறித்துப் பின்னர் பேசும்போது "ஆண்டவர் என்னை என்னுடைய படுக்கை அறையிலே 1908-ஆம் ஆண்டு சந்தித்தார். அவர் என்னை சந்தித்த மாத்திரத்திலே தம்முடைய ஊழியக்காரனாகவும் என்னைத் தெரிந்து கொண்டார்" என்று கூறினார்.

கர்த்தரின் பாதங்களே மாசிறந்த வேதாகம கல்லூரி

அன்பின் ஆண்டவர் ஆர்தர் பிங்க்கை அவருடைய படுக்கை அறையில் தம்முடைய அடியானாக மாற்றியபின் ஆர்தர் 1910-ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று அங்கு சிக்காகோ நகரத்திலுள்ள மூடி வேதாகம கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் வேதாகம கல்வி பயிலுவதற்காகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார். ஆனால் தேவ பக்தனான அவருக்கு சாது சுந்தர்சிங்கைப் போல இறையியல் கல்லூரி வாழ்க்கை ஒத்துப்போகவில்லை. 6 வாரங்கள்தான் அவர் அங்கிருந்தார். பின்னர் கல்லூரி தலைவரின் அனுமதியுடன் தனது இறையியலை விட்டு விட்டு கர்த்தரின் பாதங்களில் கற்றுக் கொள்ளும் இறையியலே மா சிறந்தது என்று வெளியே வந்து தேவ ஊழியம் செய்யத் தொடங்கினார்.

ஆர்தர் பிங்க்கின் வல்லமையான தேவ ஊழியம்

தன்னுடைய ஊழியத்தின் ஆரம்ப 20 ஆண்டு காலத்தை நான்கு நாடுகளான இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்றவற்றில் ஆர்தர் சுற்றித் திரிந்து பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கங்கள் ஒவ்வொன்றிலும் பாவம், சிலுவை, நரகம் போன்ற இரட்சண்யத்தின் கருப்பொருட்கள் இடம் பெற்றிருக்கும். அவர் எந்த ஒரு சபைப் பிரிவிலும் இருக்க விரும்பவில்லையாதலால் சபைகளில் அவரை தேவ ஊழியர்கள் ஏற்றுக் கொள்ள அதிகமாக விரும்பவில்லை. அதைக் குறித்து நம்முடைய தேவபக்தன் கவலை கொள்ளவுமில்லை, கண்ணீர் வடிக்கவுமில்லை. ஆயினும் அவர் அங்கீகரிக்கப்பட்டு தேவச் செய்தியைக் கொடுத்த இடங்களிலெல்லாம் கர்த்தர் வல்லமையாகக் கிரியை செய்தார். அவருடைய கூட்டங்களில் அநேகர் ஆண்டவரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். அவர் தேவ செய்தியைக் கொடுக்கும்போது அவருடைய முகம் 18ஆம் நூற்றாண்டு வல்லமையான பரிசுத்த தேவ மனிதன் மர்ரே மச்செயினின் தேவ பிரசன்னத்தின் ஒளி நிறைந்த முகம் போல காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஒரு சமயம் அவர் ஒரு கூடாரக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்ததை கூடார முகப்பில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த ஒரு உயர்ந்த ரோமன் கத்தோலிக்க மனிதன் (கார்டினலின் உதவியாள்) அங்கேயே மனந்திரும்பி அந்த மேடையிலேயே சாட்சி சொன்னார்.

எனினும் வர, வர ஆர்தர் பிங்குக்கு தனிப்பட்ட சபைகளிலே பிரசிங்கிக்க எதிர்ப்புகள் கடுமையாக இருந்தபடியால் அவர் காலப்போக்கில் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட பிரசங்கியானார். ஒரு தடவை அவ்விதமாக அவர் எல்லாராலும் கைவிடப்பட்டு அவரும் அவருடைய பரிசுத்த மனைவி வீரா பிங்க்கும் தன்னம் தனியாக ஒரு ஓய்வு நாளில் தனித்தவரானார்கள். ஆனால் அந்த தேவ பக்தன் அதையிட்டு கொஞ்சமும் விசுவாசத்தில் தளர்ச்சியடைந்து போகவில்லை. 25ஆம் சங்கீதத்தை இருவரும் வாசித்துத் தியானித்து அன்று நிறைவான தேவ சமாதானம் பெற்றுக்கொண்டார்கள்.

பின் நாட்களில் ஆர்தர் பிங்க் ஆண்டவருடைய வெகு திட்டவட்டமான உணர்த்துதலின்படி "வேத வசனங்களில் போதனைகள்" என்ற அருமையான ஆவிக்குரிய மாதாந்திர பத்திரிக்கையை எழுதி வெளியிட்டார். உலகத்தின் பல்வேறு

நாடுகளிலுள்ள கிறிஸ்தவ மக்கள் அதை வாங்கி வாசித்து மிகுதியும் கர்த்தருக்குள் தேவ ஆசீர்வாதம் பெற்றனர். அவர் அதை 30 ஆண்டு காலம் எழுதி வெளியிட்டார். பலர் அதை வேத புத்தகத்திற்கு அடுத்தபடியாக நேசித்தார்கள். போர் முனையிலிருந்த இரட்சிக்கப்பட்ட சிப்பாய்கள் அதை தினத் தியானமாக வாசித்துப் பயன் பெற்றனர். அவருடைய செய்திகள் முற்றும் வேத வசனங்களின் பூச்சரம் போன்ற கோர்வையாகவேதான் இருந்தன. நாள் ஒன்றுக்கு 12 மணிநேரம் அந்தப் பத்திரிக்கைக்காக ஆர்தர் பிங்க் பாடுபட்டார். எப்பொழுதும் வாசிப்பு, எப்பொழுதும் ஜெபம், எப்பொழுதும் எழுத்துத்தான் அவருடைய தேவப்பணியாக இருந்தது.

30 ஆண்டு காலமும் ஒரு பைசாகூட கடன் இல்லாமல் அவர் அந்தப் பத்திரிக்கையை எழுதி வெளியிட்டார். பத்திரிக்கை சம்பந்தமான பில்களை 48 மணி நேரத்தில் அவர் கட்டி விடுவார். பத்திரிக்கை ஊழியத்திற்குத் தேவைப்படும் பணத்திற்கு அவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமான விதத்திலோ தம்முடைய பத்திரிக்கையில் ஒரு போதும் விளம்பரம் எழுதவில்லை. அப்படித் தன்னுடைய தேவையைத் தெரிவிக்க வேண்டிய ஒரு சிறிய அவசியம் கூட அவருக்கு எழும்பவில்லை. **(God's work done in God's way will never lack God's supplies)** "கர்த்தருடைய ஊழியம், கர்த்தர் விரும்பும் விதத்தில் செய்யப்படுமானால் கர்த்தருடைய ஒத்தாசை தாழ்ச்சியின்றி தப்பாமல் அதற்குக் கிடைக்கும்" என்ற ஹட்ஸன் டெயிலர் என்ற தேவ மனிதனின் வார்த்தையை அவர் அப்படியே விசுவாசித்து தேவ ஆசீர்வாதம் பெற்றார். 30 ஆண்டு காலமும் தன்னுடைய பத்திரிக்கை ஊழியத்தை மிகுந்த ஜெபத்துடன் செய்தார். ஏதோ பத்திரிக்கை மாதந்தோறும் வெளிவர வேண்டுமே என்ற தட்டிக்கழிப்பான கடமைக்காக அவர் அதை ஏனோதானோ என்று செய்யாமல் ஒரு செய்தியை பல மணி நேரங்கள் தேவ சமூகத்தில் காத்திருந்து கர்த்தர் கொடுத்த பரத்தின் தூதுகளை எழுதினார். அத்தனை ஆழமான ஆவிக்குரிய மன்னாவான தேவ சத்தியங்களை அவர் எழுதினபோதிலும் அவருடைய பத்திரிக்கையின் சந்தாதாரர்கள் ஓராயிரம் பேர்கள் மாத்திரமே என்பது உங்களுக்கு பெரும் வியப்பை அளிக்கலாம். அந்த எண்ணிக்கையைக்கூட பாதுகாப்பது என்பது அவருக்குக் கடினமானதாகத்தான் இருந்தது. சந்தாதாரர்களின் குறைவான எண்ணிக்கையைக் குறித்து அவர் மனம் கலங்கவில்லை. "உலகத்தின் மாயாபுரிச் சந்தைச் சரக்குகளில் மயங்கிக் கிடக்கும் பெயர் கிறிஸ்தவ

மக்களுக்கு என் பத்திரிக்கையால் யாது பயனும் கிட்டப்போவதில்லை. இயேசு இரட்சகரை மெய்யன்புடன் நேசிக்கிறவர்களுக்கும் பரம கானான் பாக்கிய வாழ்வுக்கு ஏங்கித் தவிக்கும் மெய் பக்தர்களுக்கும்தான் அது ஆசீர்வாதம் அளிக்கும்" என்று கூறினார்.

தன்னுடைய பத்திரிக்கையை ஏராளமான பூர்வ கால பரிசுத்த வான்களின் புத்தகங்களை ஆழ்ந்து வாசித்துத் தியானித்து எழுதினார். அவரிடத்தில் 750 புத்தகங்களிருந்தன. அவற்றை அவர் மிகவும் கருத்தோடும், தியானத்தோடும் வாசித்துப் பயன்படுத்திக் கொண்டார். ஏராளமான புத்தகங்களை வாசிக்காதபடி வீட்டில் வாங்கிச் சேர்ப்பதை அவர் வன்மையாக எதிர்த்தார். மனித வாழ்நாட் காலம் மிகவும் குறுகியது. அந்த குறுகிய காலத்தில் ஆத்துமாவை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் குறிப்பிட்ட நலமான புத்தகங்களை ஆழ்ந்த ஜெப சிந்தனையோடு வாசித்து நடைமுறை வாழ்வுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலெழுந்த வாரியாக ஒரு பிரயோஜனமும் இல்லாமல் ஏராளம் புத்தகங்களை வீணாக வாசித்துக்கொண்டு போவதைவிட கொஞ்சமான பக்தி நிறைந்த புத்தகங்களை மெதுவாக, நிதானமாக, ஜெபத்துடன் வாசித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுதல் விரும்பப்படத்தக்கது என்று சொல்லுவார். "மோட்ச பிரயாணம்" புத்தகத்தை எல்லாரும் கட்டாயமாக வாசிக்க வேண்டும் என்று விரும்பினார்.


அவருடைய அருமையான பத்திரிக்கை ஊழியத்துடன் அவர் மேற்கொண்ட மற்றொரு தேவ ஊழியம் கடிதம் எழுதுதலாகும். அநேகமாக தனக்கு வரும் எல்லா கடிதங்களுக்கும் அவர் தவறாது பதில் எழுதிவிடுவார். ஆர்தர் பிங்க் ஒரு அசாதாரணமான கடிதம் எழுதுவோன். தம்முடைய சொந்தக் கரத்தாலேயே 1946ஆம் ஆண்டு வரை அவர் 20,000 கடிதங்கள் எழுதியிருந்தார். அவருடைய கடிதங்கள் அவற்றை வாசிப்போருக்குக் கர்த்தரின் கடிதங்களாக இருந்தன. ஆவிக்குரிய ஆலோசனைகள், ஆறுதலான அரவணைப்பின் வார்த்தைகள், பூமிக்குரிய வாழ்வுக்கான ஞானமுள்ள புத்திமதிகள், சந்தேகத்திற்கான விளக்கங்கள் போன்ற பற்பலவிதமான நிலைகளில் அவருடைய கடிதங்கள் அமைந்திருக்கும்.

பின் வந்த நாட்களில் அதாவது ஆர்தர் பிங்குடைய மரணத்திற்குப் பின்னர் அவருடைய "வேத வசனங்களில் போதனைகள்"

என்ற அவருடைய பத்திரிக்கைகளில் அவர் எழுதி வந்த செய்திகளை பல்வேறு கிறிஸ்தவ நூல் வெளியீட்டாளர்கள் புத்தகங்களாக வெளியிட்டனர். இங்கிலாந்து தேசத்திலுள்ள "பானர் ஆப் ட்ரூத்" என்ற கிறிஸ்தவ நூல் ஸ்தாபனத்தார் மாத்திரமே நம்முடைய ஆர்தர் பிங்க் தேவ பக்தனின் செய்திகளை புத்தகங்களாக அச்சிட்டு 1,60,000 புத்தகங்களை விநியோகித்திருக்கின்றனர். மற்ற ஸ்தாபனத்தார் அச்சிட்டவை எத்தனையோ லட்சங்கள் இருக்கலாம். இன்று அந்தப் புத்தகங்கள் உலகமெங்குமுள்ள தேவ மக்களால் மிகவும் விரும்பி வாசிக்கப்படுகின்றன. பல்வேறு மொழிகளில் அவருடைய புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

தேவ பக்தனுக்கேற்ற சிறந்ததோர் பரிசுத்த மனையாட்டி

ஆர்தர் பிங்க் இங்கிலாந்து தேசத்தவர். ஆனால் அவர் மணம் புரிந்தது அமெரிக்க நாட்டின் கெண்டகி மாநிலத்துப் பெண்மணி.



கர்த்தாவின் மெய்யான பரிசுத்த பாத்திரம். தன்னுடைய கணவனின் பரிசுத்த தேவ பணியில் தோளோடு தோள் கொடுத்து அவருக்கு உதவி செய்தார்கள். நல்ல வேத அறிவுள்ளவர்கள். வீரா என்ற அந்த அம்மையாரின் உதவியின்றி ஆர்தர் பிங்க் ஆண்டவருக்காக அத்தனை மகத்துவமானதோர் தேவ பணி ஒரு போதும் ஆற்றியிருக்க முடியாது.

பத்திரிக்கைக்கான செய்திகளை அச்சிடுவதற்கு அழகாகப் பிழையின்றி டைப் செய்து கொடுப்பது நம்முடைய வீராபிங்க் அம்மையார்தான். அவர்களேதான் வாசகர்களின் முகவரிகளையும் டைப் செய்து வெட்டி ஒட்டி மேல் உறை சுற்றி அனுப்புவார்கள். அப்படி அவர்கள் 30 ஆண்டு காலமும் செய்தார்கள். அவர்களே சமையல் வேலையையும் பார்த்துக் கொண்டு புருஷனுக்கு செய்யவேண்டிய அனைத்துப் பணிவிடைகளையும் செய்தார்கள். அத்தனை நெருக்கமான பணிகளுக்கு மத்தியிலும் தன்னுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சிக்காக தனி ஜெபம், வேத வாசிப்பு போன்ற பரிசுத்த காரியங்களிலும் கண்ணும் கருத்துமாக நடந்து கொண்டார்கள். ஆர்தர் பிங்க்குடைய சுகத்திலும், துக்கத்திலும், பாடுகளிலும் வீரா பிங்க் தன் கணவனுடன் கரங்கோத்து நின்றார்கள். ஆர்தர் பிங்க் தனது மனைவி வீரா பிங்க்குடன் இணைந்து நிற்கும் படத்தை நீங்கள் காணலாம்.

அழகிய ஸ்டானோவே தீவு

ஆர்தர் பிங்க் தம்முடைய ஜீவிய காலத்தின் கடைசி ஆண்டுகளையும், நாட்களையும் ஸ்டானோவே என்ற அழகான சின்ன தீவில் தான் செலவிட்டார். அங்குதான் அவருக்குக் கர்த்தரின் பரம அழைப்பும் வந்தது. ஸ்டானோவே தீவில் ஆர்தர் பிங்க்கும், வீரா பிங்க்கும் 1944 ஆம் ஆண்டு ஆரம்ப முதல் 1952 ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் தேதி வரை வாழ்ந்த வாடகை வீட்டை நீங்கள் பார்க்கலாம். இங்கிருக்கும்போதுதான் ஆர்தர் பிங்க் தனது 66ஆம் வயதில் மரணம் அடைந்தார். அந்தத் தீவைக் குறித்து தனக்கு எழுதும் படியாக ஒரு



கர்த்தருடைய பிள்ளையான சகோதரி வீரா பிங்க் அம்மையாருக்கு எழுதியபோது அந்த பரிசுத்த அம்மையார் எழுதிய வர்ணனையைப் பாருங்கள்.

"எங்களுடைய சின்னத் தீவான ஸ்டானோவே பற்றி நீங்கள் எழுதும்படியாகக் கேட்டிருந்தீர்கள். நல்லது, அது மிகவும் சிறிய இடங்களில் ஒன்றுதான். ஆனால் பல விதத்திலும் முக்கியமான ஒரு இடம். மீன் பிடித் தொழிலுக்கு எங்கள் தீவு பெயர் போனது. நார்வே, ஐஸ்லாந்து, சீத்லாந்து போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து அழகான மீன்கள் நிறைந்த படகுகள் எங்கள் தீவின் துறைமுகத்திற்கு வருகின்றன. நீங்கள் நினைப்பது போல அத்தனை நடுநடுங்க வைக்கும் குளிர் இங்கில்லை. இந்த இடத்தின் தட்பவெப்ப நிலை மிகவும் மனோகரமானது. குளிர் காலத்தில் கொஞ்சம் பனிப்பொழிவும், பனிக்கட்டியும் விழுவதுண்டு. ஆனால் குளிர் காலம் நீண்ட நாட்களுக்கு நீடிப்பதில்லை. ஏராளமான மழையும், மிகுந்த காற்றும் இங்குண்டு. சில சமயங்களில் இங்கு வீசுகின்ற காற்று நம்முடைய ஆடைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு போவதைப்போல வீசும். ஆயினும் நம்முடைய ஆடைகளுக்கு எவ்விதமான சேதாரமும் இராது. நிரம்ப மழையாலும் மிகுந்த காற்றுகளாலும் நன்கு தாக்கப்படும் இந்த ஸ்டானோவே தீவு சரீர சுகத்திற்கு மிகவும் உகந்தது.

இந்த தீவின் மக்கள் பக்தி நிரம்பியவர்களாவார்கள். இந்த தீவில் 9 கிறிஸ்தவ கோயில்கள் உள்ளன. இந்த தீவு அமெரிக்கா நாட்டின் பெரிய கிராமம் ஒன்றைவிட சற்று பெரியது. இங்கு கேய்லிக் என்ற மொழி பேசுகின்றனர். அந்த கேய்லிக் மொழியில் ஒரு வார்த்தைகூட எங்களுக்குத் தெரியாது. ஆயினும் நாங்கள் கர்த்தருக்குள்ளான அவருடைய பரிசுத்த பணியைச் செய்து கொண்டு காலை முதல் மாலை வரை சமாதானமாக எங்கள் வாழ்நாள் காலத்தைக் கொண்டு செல்லுகின்றோம். எனக்குப் படிப்பதற்குப் போதுமான நேரம் கிடைக்கின்றது. தற்சமயம் மத்தேயு ஹென்றி என்ற பரிசுத்தவான் எழுதிய ஒரு அருமையான புத்தகத்தை நான் வாசித்துக் கொண்டிருக்கிறேன்" என்று எழுதியுள்ளார்கள்.

ஆர்தர் பிங்க்கின் பரிசுத்த குணசீலங்கள்

ஆர்தர் பிங்க் ஸ்டானோவே என்ற மேலே நாம் பார்த்த தீவில் 12ஆண்டு காலம் வாசம் பண்ணினார். அங்குதான் அவர் இறுதியில் மரித்தார். ஸ்காட்லாந்து தேசத்தின் ஒரு மூலையில் அந்த அழகிய தீவு உள்ளது. அங்குள்ள லீவிஸ் தெருவில் 29-ஆம் வீட்டில் உள்ள மேல் மாடியில் அவரும், அவருடைய மனைவி வீரா பிங்க் அம்மையாரும் வாழ்ந்தார்கள். அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமானதல்ல. அது வாடகை வீடுதான். ஆர்தர் பிங்க் ஆடம்பரத்தை விரும்பாதவர். அதை வெறுப்பவர். அவருடைய வீட்டில் எந்த ஒரு ஆடம்பரப் பொருட்களுமே இருக்கவில்லை, அவர் ஒருக்காலும் தனக்கென்று ஒரு காரை வைத்திருந்ததில்லை. கர்த்தருடைய பரிசுத்த பணம் வீண் விரயமாவதை அந்த தேவ பக்தன் பொறுத்துக் கொள்ள மாட்டார். எவ்வளவுக்கெவ்வளவு சிக்கனமாக இருக்க முடியுமோ அவ்வளவுக்கு சிக்கனமாக இருந்து அந்தப் பணத்தை சுவிசேஷ ஊழியங்களுக்குச் செலவிட்டார். அவருடைய வீட்டில் காய்கறியில் டர்னப்பின் உச்சிப் பகுதி முதல் ஆப்பிள் பழத்தின் தோல் வரை வீசி எறியப்படாமல் பயன்படுத்தப்பட்டது.

அந்த மெய் தேவ பக்தனுக்கு ஆண்டவர் மக்கள் செல்வத்தைக் கொடுக்கவில்லை. அதையிட்டு அவராவது, அவருடைய மனைவி வீரா பிங்க் அம்மையாராவது கவலை கொள்ளவில்லை. "உன்னைக் கட்டப் போய்தான் எனக்குக் குழந்தைகள் இல்லாமல் போயிற்று" என்று கணவன் மனைவியைப் பார்த்தும், மனைவி கணவனைப் பார்த்தும் தமிழ்நாட்டின் பக்தியுள்ள கிறிஸ்தவ குடும்பங்களில்கூட நடக்கின்ற சண்டை சச்சரவுகள் எல்லாம் அந்த பரிசுத்தவானின் குடும்பத்தில் எழும்பவில்லை. "கர்த்தரின் சித்தம் எங்கள் பாக்கியம்" என்ற பூரண மன நிறைவுடன் அவர்கள் மிகுந்த சமாதானத்தோடு வாழ்ந்தனர். அந்த தீவிலுள்ள ஒரு அழகிய பறவையை அவர்கள் பாசத்துடன் வளர்த்தார்கள். "டிக்கி" என்ற அந்த அழகிய செல்லப் பறவை அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதாக இருந்தது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் அவர் மிக உறுதியான விசுவாசமுடையோனாயிருந்தார். "நான் ஆண்டவருடைய கிருபையால் உலகமெங்கும் பயணம் செய்திருக்கின்றேன். நான் அந்த நாடுகளில் எத்தனையோ கர்த்தருடைய பிள்ளைகளை சந்தித்திருக்கின்றேன். அவர்களில் எந்த ஒருவரும் "நான் என் ஆண்டவர்பேரில் என்

முழுமையான விசுவாசத்தை வைத்தேன். அவர் என் நம்பிக்கைக்குத் துரோகம் செய்து விட்டார்" என்று என்னிடம் கூறினதே கிடையாது. என்று அவர் கூறினார். "ஆம், தேவன் எல்லா நம்பிக்கைக்கும் மிகவும் பாத்திரமானவர். அவரை நாம் முற்றுமாக நம்பலாம்" என்று அவர் சொல்லுவார்.

அந்த விசுவாசத்தின் நம்பிக்கையை ஆர்தர் பிங்க் தன்னுடைய வாழ்க்கையிலும் செயல்படுத்திக் காண்பித்தார். இங்கிலாந்து தேசத்திலுள்ள ஹோவே என்ற இடத்தில் ஆர்தர் பிங்க்கும் அவருடைய மனைவியும் இருந்தபோது இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. இராக்காலங்களில் ஜெர்மானிய விமானங்கள் அவர் இருந்த ஹோவே பட்டணத்தை குண்டு வீசித் தாக்கின. அவர் இருந்த வீட்டிலும் குண்டுகள் வந்து விழுந்தன. ஒரு சமயம் விமானத்திலிருந்து சுடப்பட்ட எந்திரத் துப்பாக்கியின் குண்டுகள் அவர்கள் படுத்திருந்த இடத்திற்கு நான்கு அடி உயரத்தில் துளைத்துக் கொண்டு சென்றன. அந்த சம்பவத்தைக் கேள்விப்பட்ட அவருடைய நல்லதோர் ஆவிக்குரிய சகோதரன் அவர்கள் இருவரையும் அமெரிக்காவிலுள்ள அட்லாண்டா என்ற தங்களுடைய வீட்டிற்கு உடனே வந்து பத்திரமாகத் தங்கிக் கொள்ள அன்புடன் அழைத்தனர். ஆனால் நம்முடைய ஆர்தர் அப்படி ஜெர்மானிய குண்டுகளுக்குப் பயந்து உடனே தப்பி ஓட விரும்பவில்லை. தன்னை அழைத்த கிரீன் என்பவருக்கு "நாங்கள் உங்கள் அழைப்புக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி தெரிவிக்கின்றோம். தற்சமயம் நாங்கள் உங்களண்டை வர விரும்பவில்லை. காரணம், அப்படி நாங்கள் அங்கு வராமலிருப்பது கர்த்தருக்கு ஒரு மகிமையான சாட்சியாக இருக்கும். ஏனெனில், சங். 91 : 1 - 11 ன்படி தேவன் ஆபத்துக் காலத்திலே எங்களைப் பாதுகாப்பதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். மேலும் இந்த இடத்திற்கு எங்களை அழைத்துக் கொண்டு வந்தது கர்த்தர் ஒருவர்தான். அவருடைய



ஆலோசனைக்கு விரோதமாக நாங்கள் நடக்க விரும்பவில்லை. நாங்கள் ஆண்டவரின் பாதுகாவலின் கரங்களில் பத்திரமாக இருக்கின்றோம். அவைகள் மிகவும் நல்ல கரங்கள். அவரன்றி அணுவும் அசையாது" என்று எழுதிவிட்டார். இதற்கிடையில் அவரிருந்த வீட்டைச் சுற்றி எத்தனையோ மக்கள் குண்டு வீச்சுக்குப் பலியானார்கள். ஆனால் நம்முடைய தேவ பக்தன் அசையவே இல்லை. என்னே, அவருடைய ஆழ்ந்த விசுவாசத்தின் நம்பிக்கை!

அவருடைய 30 ஆண்டு கால எழுத்துப் பணியிலும் அவர் ஒரு முறைகூட சுகயீனமாகப் படுத்ததில்லை. மருந்தைப் பயன்படுத்த அவர் மிகவும் அஞ்சினார். அது தன்னுடைய சரீரத்திற்கு மாறுதலான பின் விளைவுகளைக் கொண்டு வந்து தன்னுடைய ஆண்டவரின் ஊழியத்தைப் பாதிக்கும் என்று எண்ணினார்.

ஆர்தர் பிங்க் கர்த்தருடைய வேதத்தில் சிறந்த தேர்ச்சியுடையோனாயிருந்தார். வசனங்களுக்கு வசனம் ஒப்பிட்டுக் காண்பித்து அவற்றை வியாக்கியானப்படுத்துவதில் அவர் மகா பாண்டித்தியம் பெற்றிருந்தார். கர்த்தருடைய வேத புத்தகத்தை தினந்தோறும் மணிக்கணக்காக அவர் வாசித்துத் தியானித்தார். "கர்த்தருடைய வேத புத்தகம் சோம்பேறி களுக்காக எழுதப்பட்டதல்ல" என்று அவர் கூறுவார். 1932-ஆம் ஆண்டு வரை வேதாகமத்தை அவர் 50 தடவைகள் வாசித்து முடித்திருந்தார். எஞ்சியிருந்த அவருடைய 20 ஆண்டு கால வாழ்வில் இன்னும் எத்தனையோ தடவைகள் அவர் அதை வாசித்திருக்கலாம். அந்த 1932-ஆம் ஆண்டு வரை கிறிஸ்தவ புத்தகங்களில் 10 லட்சம் பக்கங்கள் அவர் படித்திருந்தார். தன்னுடைய கண்களுக்குக் கண்ணாடி பயன்படுத்தாமல் மிகவும் சிறிய எழுத்துக்களைக்கூட அவர் கஷ்டமின்றி வாசித்து விடுவார். ஆர்தர் பிங்க் தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தை தியானத்தோடு வாசிக்கும் படத்தை நீங்கள் காணலாம்.

ஆர்தர் பிங்க்கின் பரிசுத்த வாழ்வைக்குறித்து அவருடைய மனைவியான வீரா பிங்க் அம்மையார் எழுதும்போது "அவர் தற்கால நூற்றாண்டு பரிசுத்தவான் அல்ல. அவர் பியூரிட்டான் என்ற மெய் தேவ பக்தர்களின் பரம்பரையுடன் சேர்க்கப்பட வேண்டியவர். 200 அல்லது 300 ஆண்டு காலங்களுக்கு முன்பாக பக்த சிரோன்மணிகள் வாழ்ந்த அதே வாழ்வைத்தான் ஆர்தர் பிங்க் வாழ்ந்து கொண்டிருந்தார்" என்று குறிப்பிட்டார்கள்.

மெய்யான தேவ பக்தர்கள் பண ஆசையை வெறுத்ததுபோல நம்முடைய ஆர்தர் பிங்க் தேவ பக்தனும் பண ஆசையை பூரணமாக வெறுத்துத் தள்ளினார். தம்முடைய பத்திரிக்கைக்காக வரும் பணத்தை பத்திரிக்கைக்காகவே அவர் செலவிட்டார். பத்திரிக்கைக்குத் தேவையான பணத்திற்காக அவர் கர்த்தருடைய சமூகத்தில் அடிக்கடி மிகவும் பாரத்தோடு ஜெபிக்க வேண்டியதாயிருந்தது.

ஆர்தர் பிங்க் மாபெரும் ஜெப வீரன். தினமும் அதிகமான மணி நேரங்களை அவர் கர்த்தருடன் செலவிட்டார். தான் கர்த்தருக்காக எழுதும் எழுத்து ஊழியத்தை குறிப்பாக தன்னுடைய "வேத வசனங்களில் போதனைகள்" என்ற தன்னுடைய பத்திரிக்கையின் ஆசீர்வாதங்களுக்காக அவர் நீண்ட மணி நேரம் ஜெபிப்பார். "ஆ, என்னுடைய கிறிஸ்தவ பத்திரிக்கையானது இத்தனை ஆயிரம் பிரதிகள் அச்சாகி வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கிறது" என்று மற்ற கிறிஸ்தவ பத்திரிக்கை ஆசிரியர்கள் கூறும் வார்த்தைகள் நம்முடைய ஆர்தருக்குப் பிடிக்காத வார்த்தைகளாகும். அவர் புகழை முற்றும் விரும்பாதவர். பெரிய எண்ணிக்கைகளில் அவர் கொஞ்சமும் நாட்டம் கொள்ளாதவர். தன்னுடைய தரமான தேவ பத்திரிக்கையை தாகமும் தவனமும் கொண்ட கொஞ்ச ஆத்துமாக்கள் வாசித்து ஆவி ஆத்துமாவில் பயன்பெற்றால் போதுமானது என்ற மன நிறைவு கொண்டவர். அதின் காரணமாக ஒரு சமயம் ஒரே ஆண்டில் பத்திரிக்கையில் விருப்பமற்ற ஒழுங்காக சந்தா செலுத்தாத 350 சந்தாதாரர்களை தம்முடைய முகவரி பதிவேட்டிலிருந்து அகற்றிவிட்டார். தம்முடைய பத்திரிக்கைக்கான செய்திகளை முழங்கால்களிலிருந்தே அவர் தயாரித்தார். எலியா தீர்க்கனைப் பற்றிய செய்தியை தம்முடைய பத்திரிக்கையில் எழுதிக் கொண்டிருந்த சமயம் தன்னுடைய ஆவிக்குரிய நண்பர் ஒருவருக்கு "நான் இன்றைய தினம் அநேக மகிழ்ச்சியான மணி நேரங்களை சூரைச்செடியின் கீழ் செலவிட வேண்டியதாயிருந்தது " என்று எழுதினார்.

அவருடைய ஊழியத்தில் அவருக்கு வழிகாட்டும் நட்சத்திரங்களாக இரண்டு தேவ வசனங்கள் இருந்தன. ஒன்று "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய். நீ போகிற பாதாளத்திலே செய்கையும், வித்தையும், அறிவும் ஞானமும் இல்லையே" (பிரசங்கி 9 : 10) மற்றொன்று "கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்,

இரத்தம் சிந்தாதபடிக்குத் தன் பட்டயத்தை அடக்கிக் கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன்" (ஏரேமியா 48 : 10)

ஆண்டவருடைய பரிசுத்த ஊழியத்தை தினமும் அயராது செய்து கொண்டு வந்தபடியால் பின் நாட்களில் அவர் இரவில் தூக்கமின்றி பெரிதும் கஷ்டப்பட்டார். நாளின் கடினமான தேவப் பணிக்குப் பின்னர் அவருக்கு ஓய்வு எடுக்க இயலாததாகத் தெரிந்தது. பின்னர் யாரோ ஒரு தேவப்பிள்ளை பற்பல வர்ணங்களில் அமைந்திருக்கும் பல்வேறு நாடுகளின் தபால் தலைகளை சகோதரன் பிங்க் அவர்கள் தன்னுடைய நாளின் கடினமான வேலைகளுக்குப் பின்னர் பார்த்தால் அவருடைய மனம் சற்று உற்சாகம் கொண்டு இரவில் இளைப்பாறுதல் கிடைக்கும் என்று சொல்லவும் அதற்கு உதாரணமாக இங்கிலாந்து தேச ஐந்தாம் ஜார்ஜ் அரசரும் அவ்விதமாகவே கடினமான பகற்கால அரச அலுவல்களின் காரணமாக இரவில் சரியாகத் தூங்கமுடியாமற் போகவே தபால் தலைகளைப் பார்த்து தன் மனதிற்கு சற்று சந்தோஷத்தின் மாற்றத்தைக் காணவே இரவில் தூங்கினதையும் குறிப்பிட்டு சொல்லவே ஆர்தர் பிங்க்குடைய அருமை மனைவி வீரா பிங்க் ஏழைக்குழந்தைகளின் உதவிக்காக பல்வேறு நாடுகளிலிருந்து கொண்டுவந்த அழகான பற்பல வண்ணங்களில் உள்ள தபால் தலைகளைக் கொண்டு ஆல்பம் செய்து கொடுத்தார்கள். அவர் அதைப் பார்த்து களைப்புற்றிருந்த தன்னுடைய மனதிற்கு சற்று குதூகலத்தைப் பெற்றார்.

ஸ்டானோவே தீவில் ஆர்தர் பிங்க் இருந்த நாட்களில் மாலை தோறும் அவர் உலாவச் செல்லுவது வழக்கம். அப்பொழுது அந்த தீவில் பலமாகக் கடற்காற்று வீசிக் கொண்டிருக்கும், சில சமயங்களில் மணிக்கு 90 மைல் வேகத்தில் கூட கடற் காற்று வீசும். ஆர்தர் அந்தக் காற்றிலும் கூட நடந்து போவார். தெருவில் யாரிடமும் தேவையற்ற விதத்தில் அவர் பேசவே மாட்டார். அவர் பேசுவதாக இருந்தால் அது கர்த்தரைப் பற்றியதாகவும் அந்த ஆத்துமாவின் நலனில் அக்கரை உடையதாகவும் மாத்திரம் இருக்கும். "உங்களுடைய பழையவைகள் எல்லாம் ஒழிந்து விட்டனவா? நாளை உங்களை நான் சந்திக்கும்போது நீங்கள் என்னுடைய இந்த கேள்விக்கான பதிலை உங்களுடன் கொண்டு வாருங்கள்" என்று ஒரு சமயம் ஒரு கிறிஸ்தவ மனிதனைப் பார்த்துக் கூறினார்.

பரிசுத்தவானின் மரணமும் பூவுலக யாத்திரையின் கடைசி நாட்களும்.

ஆர்தர் பிங்க் 66 வயதை அடைந்தபோது அவருடைய சரீர சுகம் பாதிப்பு நிலையை அடையத் தொடங்கியது. அவர் ஒருவித சோகை நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டார். திடீரென்று அவருடைய எடை குறைந்தது. அவருடைய பரிசுத்தமான, தேவ கிருபை நிறைந்த மாட்சியை உணர்ந்த மக்கள் அவருடைய அந்த வயதின் நாட்களில் ஏராளமான கடிதங்களை அவருக்கு எழுதினார்கள். அவைகள் எல்லாவற்றிற்கும் பதில் எழுத அவரால் கூடாமற் போயிற்று. அதைக் குறித்து அவர் தம்முடைய நண்பன் ஒருவருக்கு "முதுமைப் பருவத்தின் பெலவீனங்களை அதிகமாக உணருகின்றேன். அதினுடைய நெருக்குதலின் காரணமாக என்னுடைய கடிதப் போக்குவரத்தைக் கணிசமாகக் குறைக்க வேண்டியதாகிறது" என்று எழுதினார்.

அவருடைய இரத்த சோகை நோய் அவருக்கு அதிக வேதனையைக் கொடுத்த போதிலும் கிட்டத்தட்ட தம்முடைய கடைசி நாட்கள் வரை அவர் மருந்தை உட்கொள்ளவே இல்லை. ஆஸ்பத்திரி மருந்துகள் தன்னுடைய மனதை மந்தப்படுத்தி தன் அருமை இரட்சகருக்கான தன்னுடைய பணியை முடிக்கவிடாமல் செய்து விடும் என்று அவர் அஞ்சினார்.

மாபெரும் தேவ மனிதன் ஜாண் கால்வினைப் போன்று ஆர்தர் பிங்க் தம்முடைய வாழ்வின் கடைசி நாட்களில் வேதாகம புருஷனான "யோசுவா" வைக் குறித்து தம்முடைய பத்திரிக்கையில் விளக்கம் எழுதி வந்தார். அநேக ஆண்டுகளுக்கு முன்பாக அவர் எழுதிய தாவீதின் ஜீவிய விருத்தாந்தம் என்ற செய்தியில் அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்:-

> "தாவீது தன்னுடைய மரணத்திற்கான எல்லா ஆயத்தங்களையும் எந்த ஒரு மனக் குழப்பமுமின்றி மிகவும் சிறப்பாக ஒழுங்குசெய்து வைத்திருந்தார். தன்னுடைய மரணம் எல்லாவற்றிற்கும் முடிவு உண்டாக்கப் போவதில்லை என்பதை அவர் நன்கறிந்தார்" என்று எழுதினார்.

தாவீதைக் குறித்து தான் எழுதினவாறே ஆர்தர் தம்முடைய

மரணத்தைக் குறித்தும் எல்லா ஆயத்தங்களையும் முன்கூட்டியே செய்து கொண்டார். அதைக் குறித்து ஜேம்ஸ் மாக்ளின் என்பவர் எழுதுகிறார்.

"ஆர்தர் பிங்க் தன்னுடைய காரியங்கள் எல்லாவற்றையும் மரணத்திற்கு முன்னர் ஒழுங்குப்படுத்திக் கொண்டார். தன்னுடைய மனைவி வீரா பிங்க் அம்மையாரிடம் தன்னுடைய அடக்க ஆராதனையைக் குறித்தும், அதில் பங்கு பெறவேண்டிய மக்களைக் குறித்தும் அவர் விபரமாகப் பேசினார். ஆர்தர் தம்முடைய வீட்டை விட்டுக் கடைசியாக வெளியே சென்றது 1952ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதியாகும். கடை வீதிக்குச் சென்ற அவர் திரும்பி வரும்போது ஒரு விமானத் தபால் கவரையும் வாங்கி வந்தார். அதை அவர் தன்னுடைய மனைவியின் கரங்களில் கொடுத்து "நான் ஆண்டவருடைய பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்ததும் என்னுடைய மரணச்செய்தியை எல்சிக்கும், ஸ்டான் பிரசல்லுக்கும் எழுதி இந்தக் கவரில் வைத்து அனுப்பிவிடு" என்று கூறினார். 1952-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் நாள் ஆர்தர் பிங்க் தம்முடைய எழுத்துக்களில் குறிப்பிட்ட மிகவும் பரவசத்துடன் வாஞ்சித்த கீழ்க்கண்ட வரிகளில் குறிப்பிடப்பட்ட மோட்சானந்த மகிமைக்குள் பிரவேசித்தார்.

"நானும் என் நேசர் இயேசுவும்
பேரானந்த மகிமை ஒளிப்பிரளயத்தில்
முடிவற்ற மோட்சானந்தம் பகிர்ந்திடுவோம்.
அன்பர் வாழும் வீட்டில் நானும் சதா வாழ்வேன்
அவரும் என்னுடனே என்றுமாய்த் தங்கிடுவார்".

அவருடைய சரீர அடக்கம் ஜூலை மாதம் 17-ஆம் தேதி இருந்தது. "அது மிகவும் ஒரு எளிமையான நிகழ்ச்சி" என்கின்றார் ஜேம்ஸ் மாக்ளின். "ஆர்தர் பிங்க் வைக்கப்பட்டிருந்த பிரேதப் பெட்டி விலையுயர்ந்த ஒன்றல்ல அதே சமயம் அடிமட்டமான ஒரு பெட்டியுமல்ல. வேதாகமத்தில் அப்போஸ்தலர் 8-ஆம் அதிகாரத்தில் 2-ஆம் வசனத்தில் "தேவ பக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம் பண்ணினார்கள்" என்று குறிப்பிட்டவாறு ஆர்தர் பிங்க் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருடைய பக்தியுள்ள நண்பர்களில் 8 பேர் அவருடைய சரீரத்தை பட்டணத்திற்கு வெளியே உள்ள சாண்ட்விக்

கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்தார்கள். வேத வாக்கியங்களை மற்றவர்களுக்குப் போதித்த அந்த தேவ பக்தனின் அடக்கம் வேத வசனங்களின் ஒழுங்கில் அமைந்திருந்தது. அவருடைய அடக்கத்திற்குச் சென்று திரும்பிய நாங்கள் அவருடைய வீட்டிற்கு வந்து 23-ஆம் சங்கீதத்தைப் பாடினோம். அதின் பின்னர் ஒரு வேத பகுதி வாசிக்கப்பட்டது. அதையடுத்து ஜெபம் ஏறெடுத்த பின்னர் ஆர்தர் பிங்க் குடியிருந்த வாடகை வீட்டின் சொந்தக்கார தேவ பக்தியுள்ள அம்மையார் அளித்த தேநீர் பானத்துடன் நாங்கள் ஸ்தோத்திரத்துடன் கலைந்து சென்றோம்" என்கின்றார் முதலில் குறிப்பிட்ட மாக்ளின்.

ஆர்தர் பிங்க் தம்முடைய பத்திரிக்கைக்கான பல மாதங்களுக்குத் தேவையான செய்திகளை முன்கூட்டியே எழுதி வைத்துவிடுவார். எனவே, அவர் மரித்தவுடன் அவருடைய அருமையான பத்திரிக்கையும் நின்றுவிடவில்லை. அவருடைய தேவ பக்தியுள்ள மனைவி வீரா பிங்க் அம்மையார் பிங்க் மரிப்பதற்கு முன்பு எழுதி வைத்த அவருடைய செய்திகள் முடியும் வரை பத்திரிக்கையைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தார்கள். அவர் மரித்து 3 மாதங்களுக்குப் பின்னர் அதாவது செப்டம்பர் மாதப் பத்திரிக்கையில் "மகிமைக்குட்பட்ட ஆர்தர் பிங்க்கின் கடைசி நாட்கள்" என்ற தலைப்பில் வீரா பிங்க் கீழ்க் கண்டவாறு எழுதியிருந்தார்கள்.

"என் கணவர் மரிப்பதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே அவருடைய தேக சுகம் குன்றிப் போனதை எண்ணி நான் மிகவும் சஞ்சலமுற்றேன். ஒவ்வொரு தடவையும் நான் அதை அவருக்குச் சுட்டிக் காட்டும் பொழுதெல்லாம் அவர் என்னைப் பார்த்து "என் அன்பே, அது விருத்தாப்பியத்திற்குரியது. அப்படி இருப்பதற்காகத் தேவனுக்குத் துதி செலுத்துவோம். பூலோக வாழ்வின் ஆரம்பத்திலல்ல அதின் கடைசி விழிம்பில் இருப்பதற்காக நான் கர்த்தருக்குத் துதி செலுத்துகின்றேன். வாழ்வை இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிற தேவனற்ற வாலிபர்களுக்காக நான் மனதார துக்கிக்கின்றேன். தேவ மக்களுக்கு இது ஒரு பயங்கரமான காலமாகும். வருகிற நாட்கள் அவர்களுக்கு இன்னும் இருள் சூழ்ந்த காலமாகவே இருக்கும். எனினும், தேவன் தம்முடையவர்களை அறிவார். அவர் அவர்களை காத்துக் கொள்ளுவார்" என்று கூறினார். அநேக சமயங்களில் அவர் மட்டுக்கு மிஞ்சி களைப்புடன் காணப்பட்டார். அந்த சமயங்களில் நான் அவரைத்

தேவையான ஓய்வு எடுத்துக் கொள்ளும்படியாகவும், அப்படியானால் ஆண்டவருக்குப் புதுப் பெலத்தோடும், நல்ல உற்சாகத்தோடும் வேலை செய்ய முடியும் என்று கூறுவேன். அதற்கு என் கணவர் "பகற் காலம் இன்னும் இருக்கும் போதே நாம் வேலை செய்து விட வேண்டும். ஏனெனில், ஒருவரும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. என்னுடைய பரலோக அழைப்பு தேவனிடமிருந்து வரும்போது நான் என் தேவப்பணியில் இருப்பதையே தேவன் கண்டு கொள்ள நான் விரும்புகிறேன்" என்பார். ஒவ்வொரு நாள் காலையிலும் நடப்பதற்காக வெளியே செல்லுவார். அந்த ஒரு நேரத்தைத் தவிர்த்து மற்ற நேரங்களில் எல்லாம் அவர் ஆண்டவருடைய பணியில் மூழ்கியிருப்பார்.

நாங்கள் கடைசியாகத் தங்கியிருந்த ஸ்டானோவே என்ற தீவுக்கு கர்த்தர் கொண்டு வந்தமைக்கர்க அவர் எப்பொழுதும் ஆண்டவரை ஸ்தோத்திரித்தார். அந்த இடத்தில் நாங்கள் தொடர்ச்சியாக 12 ஆண்டு காலம் ஒரு வீட்டில் வாடகை கொடுத்துத் தங்கியிருந்தோம். கர்த்தருடைய பரிசுத்த ஓய்வு நாளை கனப்படுத்தி அதை நேசிக்கின்ற மக்கள் மத்தியில் வாழ்வதை என் கணவர் பெரிதும் விரும்பினார். அவர் ஓய்வுநாளை நேசித்தார். அது அவருக்குப் பரிசுத்தமும், பக்தி வினயமுமான நாளாகும். அந்த கர்த்தருடைய நாளை நேசிக்கும் தேவ மக்களை எல்லாம் அவர் கனம் பண்ணினார்.

நாங்கள் கடைசியாகத் தங்கியிருந்த ஸ்டானோவே தீவு என் கணவருக்கு மிகவும் பிடித்தமான அமைதியான இடம். அங்கு அவர் தன்னுடைய ஆண்டவரின் பணிகளையும், தேவ தியானத்தையும் தீவிரமாகச் செய்தார். எந்த நிலையிலும் தான் அந்த இடத்தை விட்டு நகரப் போவதில்லை என்றும், கர்த்தர் தன்னை மகிமையில் எடுக்கும் நாள் வரை அந்த இடத்திலேயே மாத்திரம் இருக்கப் போவதாக ஒரு தடவைக்கும் அதிகமாக அவர் என்னிடம் கூறியிருக்கின்றார்.

ஒரு நாள் இரவு என் கணவருக்கு திடீரென்று வாத ஜன்னி வந்து விட்டது. சில நிமிட நேரத்திற்கு அது நீடித்தது. அதின் தாக்குதலுக்குப் பின்னர் அவர் என்னை நோக்கி "நான் வெகு சீக்கிரமாகக் கர்த்தருடைய மகிமையில் இருப்பேன். என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. அந்த 103ஆம் சங்கீதத்தில் நான் மிதப்பது போன்ற அத்தனை மகிழ்ச்சி என்னை

ஆட்கொண்டிருக்கின்றது" என்று கூறினார். அவருடைய மரணத்திற் கேதுவான சுகயீனத்தை எண்ணி நான் அழுவதை ஒரு நாள் அவர் கவனித்து விட்டார். "என் அன்பே, நீ ஏன் அழுகிறாய்? வெகு சீக்கிரமாக நான் மேலோக இன்ப வீட்டைச் சென்றடையப் போவதை எண்ணி நீ கர்த்தருக்குள் ஆனந்தம் அல்லவா கொள்ளுதல் வேண்டும்?" என்றார். "நான் எனக்குள்ளேயே என் நிலை எண்ணி அழுகின்றேன். நீங்கள் மரித்தபின்பு நான் தனிமையில் அல்லவா விடப்படுவேன். நீங்கள் மரித்து, பாழுலகத்தின் பாடுகளிலிருந்து விடுதலை பெற்று செல்லுவது உங்களுக்கு நல்லது என்பதை நான் மனதார உணருகின்றேன். ஆனால், என் தனிமையை நான் எண்ணுகையில் தான் திகில் அடைகின்றேன்" என்றேன். அதற்கு அவர் மிகுந்த பொறுமையுடன் "அன்பின் இரட்சா பெருமான் இது கால பரியந்தம் ஆச்சரியமான விதத்திலே நமக்கு நல்லவராக இருந்து இத்தனை நீண்ட ஆண்டு காலங்களும் நம்மைப் பாதுகாப்பாக வழி நடத்தி வந்திருக்கின்றார். உன்னுடைய மகா தேவை மணி நேரத்தில் அவர் உன்னை ஒரு போதும் கைவிடார்" என்று கூறினார்.

வாத ஜன்னி வந்த இரவிலிருந்து என் கணவர் தன்னுடைய காரியங்களை எல்லாம் வெகுநீண்ட பிரயாணம் செல்லும் ஒரு மனிதன் தன்னுடைய காரியங்கள் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்துவது போல ஒழுங்குபடுத்தத் தொடங்கினார். எந்த எந்த காரியங்களை எப்படி எப்படி செய்ய வேண்டும், எந்த எந்த காரியங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற எல்லா விபரங்களையும் அவர் எனக்குத் தெளிவாகக் கூறினார். முக்கியமாக அவர் எழுதி வந்த "வேத வசனங்களில் போதனைகள்" என்ற பத்திரிக்கையில் தான் எழுதி வைத்த எல்லா குறிப்புகளையும், செய்திகளையும் வெளியிட்ட பின்னர் அந்தப் பத்திரிக்கையை நிறுத்திவிடும்படிக் கேட்டுக் கொண்டார். தன்னுடைய மரணத்தின் மணி நேரம் நெருங்கி வருவதை அறிந்த அவர் தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அதிகமாகத் தேவச் செய்திகளை எழுதினார். "கர்த்தர் நல்லவர், அவர் எப்பொழுதும் நலமே செய்வார்" என்பதே சதா அவருடைய உதடுகளில் காணப்பட்ட வார்த்தைகளாகும். அந்த இறுதி நாட்களில் அவர் தன்னை முற்றுமாக ஆண்டவரின் திருவுளச் சித்தத்திற்கே ஒப்புவித்தார். அநேக தடவைகள் அவர் "கர்த்தர் தம்முடைய பார்வைக்கு நலமானதை எனக்குச் செய்வாராக" என்று கூறினார்.

அந்நாட்களில் ஒருநாள் நாங்கள் இருவரும் கர்த்தர் எங்களுக்குக் கடந்த காலங்களிலும் தற்போதும் செய்து வந்த, செய்து வருகிற காரியங்களை நினைவுகூர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். கர்த்தர் எங்களின் மோட்ச பிரயாண பரதேசி வாழ்க்கையில் செய்த காரியங்களை மீண்டும் நினைவுபடுத்திய போது எங்கள் உள்ளங்கள் களிகூர்ந்தன. என் கணவர் என்னைப் பார்த்து "அன்பே, தேவன் நமக்கு எல்லாக் காரியங்களையும் நேர்த்தியாகச் செய்தார்" "ஆம் என் நேச மனைவியே, எல்லாக் காரியங்களையும் அவர் நமக்குச் சிறப்பாகச் செய்தார். கொஞ்ச காரியங்களை மாத்திரமல்ல" என்றார் அவர்.

புதன்கிழமை காலையில் என் கணவர் மரித்தார். அதற்கு முந்திய நாள் செவ்வாய் காலையில் அவர் கட்டிலில் படுத்திருந்தார். நான் இதர வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தேன். அவர் என்னைப் பார்த்து "இருள் கடந்து சென்றுவிட்டது. மெய்யான ஒளி பிரகாசிக்கின்றது. அந்த ஒளி அதிகதிகமாகப் பிரகாசித்து பூரணமான நிலையை நோக்கி கடந்து சென்று கொண்டிருக்கின்றது" என்றார். பின்னர் அவர் தன்னுடைய கரத்தை மேலே தூக்கி "எனக்கு முன்பாக எல்லாம் மகிமை நிறைந்ததாக இருக்கின்றது. இம்மானுவேலரின் நாட்டில் மகிமை வாசம் பண்ணுகின்றது" என்று கூறினார். "உங்களுக்கு எல்லாம் அதிக மாட்சியாக இருக்கின்றதா?" என்று நான் அவரிடம் கேட்டபோது அவர் என்னைப் பார்த்து "உன்னுடைய சந்தேகங்களையும், பயங்களையும் அப்பால் வைத்துவிட்டு ஆண்டவர் இயேசுவில் உன் பூரண நம்பிக்கையை வைக்கும் பட்சத்தில் நான் அனுபவிக்கும் பாக்கியங்கள் உனக்கும்கூடத்தான் கட்டாயம் இருக்கின்றன" என்று துரிதமாகப் பதில் அளித்தார்.

பின்னர் படுக்கையிலிருந்து எழுந்து நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிக்கையில் அச்சிடப்பட வேண்டிய தேவ செய்திகளை அவர் தன்னுடைய வாயினால் சொல்ல நான் அவற்றை தாளிலே எழுதினேன். அந்த நாளின் பெரும்பாலான நேரம் அவ்வண்ணமாகவே அவர் சொல்லிக் கொண்டே இருந்தார். கடைசியாகத் திடீரென்று தன்னை எடுத்துப் படுக்கையில் கிடத்தும்படியாகக் கூறினார். எப்படி நான் அவரை தூக்கிக் கிடத்தினேனோ எனக்குத் தெரியாது. ஆனால் தேவ பெலத்தால் நான் அப்படிச் செய்திருந்தேன். கொஞ்ச நேர இளைப்பாறுதலுக்குப் பின்னர் அவர் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து

பேப்பரையும், பென்சிலையும் கொண்டு வரச் சொன்னார். "நான் சொல்லாமல் விட்டு விட்ட கடைசி நான்கு வரிகளையும் கூறிவிடுகின்றேன். நான் பூலோகத்தை விட்டுக் கடந்த பின்னர் அவற்றை டைப் செய்து அச்சிற்கு அனுப்பி விடு" என்று சொல்லி விட்டு "என் வேலை முடிந்தது. என் ஓட்டம் முற்றுப் பெற்றது. இரட்சகரண்டை நான் செல்ல ஆயத்தமாக இருக்கின்றேன்" என்ற வார்த்தைகளுடன் படுக்கையில் படுத்த அவர் திரும்பவுமாக கட்டிலிலிருந்து எழும்பவே இல்லை. ஆனால் கட்டிலில் மிகுந்த மன மகிழ்ச்சியோடும் எப்பொழுதும் தேவனைத் துதித்துக் கொண்டுமிருந்தார். அவருடைய வாய் அடிக்கடி 23-ஆம் சங்கீதத்தைக் கூறிக் கொண்டே இருந்தது.

அவர் தன் படுக்கையில் படுத்தவாறே ஒரு தடவை "தேவன் வாக்குத்தத்தம் பண்ணின எல்லா நன்மையான காரியங்களும் நிறைவேறின. ஒரு நன்மையான காரியம்கூட நிறைவேறாமல் தடைபட வில்லை" என்றார். மற்றொரு தடவை "தேவன் என் பாவங்களுக்குத் தக்கதாக எனக்குச் செய்யாமலும் என் அக்கிரமங்களுக்குத் தக்கதாக எனக்கு சரிக்கட்டாமலும் என்னை விட்டுவிட்டார்" என்று சொன்னார். பிறிதொரு தடவை தன்னுடைய சரீரத்தின் கொடிய உபாதையில் "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள். அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்றார். என் கணவரின் முகம் அடிக்கடி தேவப் பிரசன்னத்தின் ஒளியால் பிரகாசிப்பதை நானும் எனக்கு உதவியாக அருகிலிருந்த மற்றொரு அன்பான சகோதரனும் கவனித்தோம். பரலோக மகிமையின் காட்சிகளை அவர் கண்டு கொண்டிருக்கிறார் என்று நாங்கள் இருவரும் எங்களுக்குள்ளாக நிச்சயப்படுத்திக் கொண்டோம். நாங்கள் கடைசியாக அவருடைய வாயிலிருந்து கேட்ட வார்த்தைகள் "வேத வாக்கியங்கள் எல்லாம் தாமாகவே விளக்கம் சொல்லி புரிய வைத்துவிடும்" என்பதே. அதற்கப்பால் அவருடைய வாயிலிருந்து எந்த ஒரு வார்த்தையும் புறப்படவில்லை. அப்படியே அவருடைய ஜீவன் அமைதியாகப் பிரிந்து சென்றுவிட்டது. இப்படியாக என் பரிசுத்தவானாகிய கணவர் தான் அத்தனை அருமையாக நேசித்தவரும் , அந்தப் பரம எஜமானனுக்காகத் தன் ஜீவ காலம் முழுவதிலும் தொண்டு செய்த அந்த அருமை ஆண்டவரிடம் சதா காலமும் சுகித்து வாழ்ந்து இருக்கும்படியாகக் கடந்து சென்றுவிட்டார்.

"அவன் சர்வவல்லவர் மேல் மனமகிழ்ச்சியாயிருப்பானோ? அவன் எப்பொழுதும் தேவனை தொழுது கொண்டிருப்பானோ?"
(யோபு 27 : 10)

கர்த்தர் இயேசு இரட்சகருக்குள் எனக்கு மிகவும் அன்பான தேவ பிள்ளைகளே,

"யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறு கூட்டமே, பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கின்றேன்" என்று திருவுளம் பற்றிய நம் சர்வவல்ல கர்த்தரின் வல்லமையுள்ள நாமத்தில் நான் உங்களை வாழ்த்துகின்றேன்.

தேவ எக்காள இந்த இதழின் மூலமாக திரும்பவும் ஒரு விசை உங்களோடு இடைபட தேவன் அளித்த மேலான அன்பின் தயவுக்காக அவருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன்.

இந்த இதழ் உங்கள் கரங்களில் கிடைக்கும்போது சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் தேவ ஊழியத்தின் பாதையில் வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருப்போம். ஆண்டவர் இயேசுவின் நாமத்தை தங்கள் வாழ்வில் ஒரு தடவை கூட கேள்விப்பட்டிராத மக்கள் வாழ்கின்ற இந்தியாவின் கடையாந்திர பகுதிகளுக்கு தேவனுடைய சுவிசேஷத்துடன் நாங்கள் கடந்து செல்லுகின்றோம். இந்த தேவ ஊழியங்களுக்காக நாங்கள் மிகுதியும் ஜெபித்து வந்திருக்கின்றோம். ஜெப நிலையிலேயே நாங்கள் ஆத்தும பாரத்தோடு வடக்கு நோக்கி பயணப்பட்டு போய்க் கொண்டிருக்கிறோம். "மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும் " (ஏசா 55 : 10, 11) என்ற தேவ வசனத்தின் மேல் எங்கள் முழுமையான நம்பிக்கையை வைத்து முன் செல்லுகின்றோம்.

தேவனுடைய வார்த்தைகளை எங்களிடமிருந்து பெறும் மக்கள் உள்ளங்களில் கர்த்தர் பேசும்படியாக நீங்கள் ஜெபிப்பதுடன், தேவனுடைய பிரசுரங்களை ஆவலோடு வாங்கிப் படிக்க கூடிய தவனமுள்ள மக்களை கர்த்தர் காண்பித்து, அவர்களண்டை எங்களை வழிநடத்திச் செல்லும்படியாகவும் நீங்கள் அவசியம் ஜெபிக்க வேண்டும். அத்துடன் நாங்களும் தைரியத்தோடும் ஒரு ஆத்துமாவின் விலைக்கிரயம் யாது? என்பதனையும், ஒரு நஷ்டப்பட்ட ஆத்துமா முடிவில்லாத நித்தியத்தில் என்றுமுள்ள சதா காலங்களிலும் அனுபவிக்கக்கூடிய அக்கினி கடலின் அகோர கஸ்திகளின் கடுமை எத்தகையது என்பதனையும் மனதில் கொண்டு தேவனுடைய ஊழியங்களை கண்ணீரோடு நிறைவேற்ற எங்களுக்காக ஜெபியுங்கள்.

தேவனுடைய சுவிசேஷத்தை தொலைதூரமான இடங்களுக்கு எடுத்துச் செல்லும் நாங்கள் இருவரும் இளவயதின் வாலிபர்கள் அல்ல என்பதை நீங்கள் அன்பாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தர் எங்களுக்கு நல்ல சரீர சுகத்தையும், பிரயாணங்களில் மற்றும் தங்கும் இடங்களில் தேவ பாதுகாவலைத் தரவும், புசிக்கும் ஆகாரங்கள், குடிக்கும் தண்ணீர் எங்கள் சரீரங்களுக்கு ஒத்துக் கொள்ளவும், கடுங்குளிர், மழை போன்ற கால நிலை மாற்றங்கள் எங்களுக்கு இடையூறு செய்யாதிருக்கவும், முழுமையான தேவ பிரசன்னத்தால் நாங்கள் நிறைந்து எலியாவின் ஆவியின் பெலத்தோடு கர்த்தருக்கு ஊழியம் செய்ய மறவாது மன்றாடி வாருங்கள். உங்கள் உருக்கமான ஜெபங்கள் எங்களுக்கு அத்தியந்த அவசியமாகும். அதற்கான பிரதி பலன் பரலோகத்தில் உங்களுக்கு கட்டாயம் உள்ளது.

தேவ எக்காளத்தின் சமீபத்திய வெளியீடுகள் உங்களில் பலருக்கும் மிகுந்த தேவ ஆசீர்வாதமாக இருந்ததை உங்களின் கடிதங்களின் வாயிலாக அறிந்து கர்த்தருக்குள் சந்தோசம் அடைகின்றேன். எல்லா துதி, கனம், புகழ்ச்சி நம் நேச இரட்சகர் இயேசு ஒருவருக்கேதான்.

தேவ எக்காளத்தை இதுகாறும் படித்து வந்ததின் காரணமாக தன்னை சந்திக்கப் போகும் மரணத்தை சந்தோசமாக வரவேற்று தனது ஆண்டவரண்டை மிகுந்த தைரியமாக செல்லும் பாக்கியம் தனக்குள்ளது என்று ஒரு விருத்தாப்பியரான தேவ பிள்ளை எனக்கு கடிதம் எழுதி

இருக்கின்றார்கள். என் உள்ளம் கர்த்தருக்குள் ஆனந்த பரவசம் அடைகின்றது. தேவ எக்காளத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் தாங்கள் நேருக்கு நேர் எதிர்கொள்ளப் போகும் தங்கள் மரணத்தை மிகுந்த மனமகிழ்ச்சியோடு அரவணைத்து ஏற்று தங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டுள்ள நித்திய பேரின்ப வாசஸ்தலங்களை ஆனந்தக் களிப்போடு சுதந்தரிக்க வேண்டுமென்பதே எனது உள்ளத்தின் இடைவிடாத கதறுதலாகும்.

தேவ எக்காளத்தில் எழுதப்படும் எல்லா தேவ செய்திகளும், பரிசுத்த பக்தர்களின் வாழ்க்கை வரலாறுகளும், அனுபவ சாட்சிகளும் அதை மட்டுமே மையமாக வைத்து எழுதப்படுகின்றது என்பதை உங்களில் பலர் நன்கு அறிவீர்கள்.

உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள், செல்வச் செழிப்பின் காரியங்கள் இந்த எளிய பத்திரிக்கையில் இடம் பெறுவதை நான் எப்பொழுதுமே விரும்பினதில்லை. காரணம், இந்த நாசபுரியை கடந்து சென்ற நம் அருமை நேச கர்த்தரும் (மத் 5 : 8-10) அவரது அடியார்கள் அனைவரும் உலகம் அளித்த ஆசீர்வாதங்களை தங்களது முழு பெலத்தோடு அப்பால் புறக்கணித்து தள்ளி துக்கம் நிறைந்தவர்களாகவும், பாடு அனுபவித்தவர்களுமாக இந்த மாயாபுரி சந்தையை விட்டு விலகிச் சென்றவர்களாவார்கள். அது அப்படியே இருக்கட்டும்.

சில மாதங்களுக்கு முன்பாக எனக்கு வந்த ஒரு கடிதத்தில் ஒரு அன்பான சகோதரி "எனக்கு 10 நிமிட நேரம் கூட ஜெபிக்க முடியவில்லையே " என்று விசனத்துடன் எழுதியிருந்தார்கள். அந்த வரி எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்காக ஒரு நிமிடம் ஜெபம் செய்வதாக இருந்தாலும் 10 நிமிடங்கள் அவர்களுக்கு போதாது. அப்படியிருக்க அவர்கள் அவ்விதமாக குறிப்பிட்டிருந்தார்கள்.

10 நிமிட நேரத்தை தங்கள் ஆண்டவர் இயேசுவுடன் பூலோகத்தில் செலவிட இயலாதவர்கள், பரலோக இன்ப வீட்டில் ஆண்டவர் இயேசுவோடு முடிவில்லாத யுகா யுகங்களாக எப்படி ஆனந்தித்து வாழப்போகின்றார்கள்?

அவன் எப்பொழுதும் தேவனைத் தொழுது கொண்டிருப்பானோ?

தேவனுடைய தாசனாகிய யோபு நமக்கு முன்பாக ஒரு சத்தியத்தை வைக்கின்றார். அது என்னவெனில் "தேவனை எல்லாராலும் எப்பொழுதும் தொழுது கொண்டிருக்க முடியாது" என்பதே அந்த சத்தியமாகும்.

இந்த அற்புதமான சத்தியம் யோபு 27 : 10 ஆம் வசனத்தில் உள்ளது. யாரால் எப்பொழுதும் தேவனை தொழுது கொண்டிருக்க முடியாது? என்ற கேள்விக்கு பக்தனாகிய யோபுவே அதே அதிகாரத்தின் 8ஆம் வசனத்தில் நமக்கு ஒரு திட்டமான பதிலையும் தருகின்றார். அதாவது மாயக்காரனால் எப்பொழுதும் தேவனை தொழுது கொண்டிருக்க முடியாது என்பதே அது. மாயக்காரன் என்ற வார்த்தை தேவனற்றவன் என்ற ஆங்கில வார்த்தையின் தமிழ் வடிவமாக உள்ளது. உண்மைதான், தேவனற்ற ஒரு மனிதனால் தேவனை எப்பொழுதும் தொழுது கொண்டிருக்க இயலாது.

சுருங்கச் சொல்லப் போனால், தனது பாவங்களுக்காக மனங்கசந்து அழுது பிரலாபித்து பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றிராத ஒரு மறுபடியும் பிறவாத மனிதனால் தேவனை எப்பொழுதும் தொழுது கொண்டிருக்க முடியாது. ஆண்டவர் இயேசுவை தனது இதய நாயகனாக ஏற்ற ஒரு மனிதன் மாத்திரமே சதா அவரது பாதங்களண்டை அமர்ந்து அவரை தொழுது கொண்டிருக்க முடியும்.

ஒரு மெய்யான தேவ பிள்ளை ஆண்டவர் இயேசுவோடு எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் ஜெப ஐக்கியத்தில் நிலைத்திருக்க முடியும். சங்கீதக்காரர் அதைக் குறித்துப் பேசும்போது "எனக்கோ தேவனை அண்டிக் கொண்டிருப்பதே நலம்" (சங் 73 : 28) என்று சொல்லுவார். எந்த நேரமும் தனது ஆத்தும மணவாளனாம் இயேசுவை அண்டிக்கொண்டு இருக்க ஒரு கர்த்தருடைய பிள்ளைக்கு இயலும்.

பக்த சிரோன்மணி - சாது சுந்தர்சிங் தனது நேரத்தின் பெரும்பகுதியை தன் ஆண்டவர் இயேசுவோடு ஜெபத்தில் செலவிட்டுக் கொண்டிருந்தார். எப்படி ஒரு மீனுக்கு தான் உயிர் வாழ தண்ணீர் எத்தனை தேவையோ அத்தனை தேவையாக இயேசு அவருக்கு இருந்தார். அந்த பரலோக ஐக்கியம் அவருக்கு ஜீவ சுவாசமாயிருந்தது. கொஞ்ச

நேரம் அந்த ஐக்கியம் தடைபட்டாலும் அதை அவரால் தாங்கிக் கொள்ள கூடாது போயிற்று.

அதின் காரணமாகத்தான் அவர் தனது நண்பர்களின் கூட்டத்திலிருந்தும், மகிழ்ச்சியான விருந்து மேஜைகளிலிருந்தும் சற்று நேரம் நழுவிச் சென்று தனது கர்த்தரோடு கொஞ்ச நேரம் ஐக்கியம் கொண்டு ஜெபிக்கவும், அவரது பரலோக உறவை பசுமையாக காத்துக் கொள்ளவும் பேராவல் கொண்டார். சுந்தரின் இவ்வித செயல்கள் மற்றவர்களுக்கு வேடிக்கையாகவும், புதுமையாகவும் தெரிந்தது. ஆனால், அவருக்கும் அவரது ஆண்டவருக்கும் உள்ள பரலோக உறவு மீனுக்கும் தண்ணீருக்கும் உள்ள அத்தனை வலிமையான உறவு என்பது அவர்களுக்குத் தெரியாது..

பூவுலகில் ஆரம்பமாகும் பரலோகம்

தனது பாவங்களற கழுவப்பட்ட ஒரு மறுபடியும் பிறந்த தேவ பிள்ளைக்கு மோட்ச வாழ்வு இந்த பூமியிலேயே ஆரம்பித்துவிடுகின்றது என்று பக்த சிரோன்மணி சாது சுந்தர்சிங் "திருவடி உபதேசம்" என்ற தமது புத்தகத்தில் எழுதி இருக்கின்றார். எத்தனை உண்மையும், சத்தியமுமான வார்த்தை அது. "நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வை காண்பாய்" (சங் 128 : 5) என்று சங்கீதக்காரர் மேற்கண்ட சுந்தரின் வார்த்தையை முத்திரை குத்திப் பேசுவார்.

யார் ஒருவர் ஆண்டவருடைய பரிசுத்த குடும்பத்தில் பிறந்துவிட்டார்களோ அவர்களுக்கு தேவனுடைய பரலோக ராஜ்யம் லூக்கா 17 : 21ன் படி இந்த பூலோகத்திலேயே ஆரம்பமாகிவிடுகிறது. மோட்சத்தின் முன் ருசி இங்கேயே கிடைத்து விடுகின்றது. இயேசு எங்கேயோ அங்கு மோட்சம் உண்டு. அதின்படி அவர்கள் தேவனின் பாதங்களில் அமர்ந்து மணிக்கணக்காக அவரோடு ஒன்று சேர்ந்து விடுகின்றார்கள். அந்த பரிசுத்த பாதங்கள் மாத்திரம் தான் அவர்களது களிகூருதல். உண்ண இருந்தாலும், இல்லாவிடினும், உடுக்க இருந்தாலும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. கர்த்தரின் பரிசுத்த பாதங்கள் மாத்திரம் அவர்களுக்கு இருந்தால் போதுமானது. எப்படி மரியாள் தனது நேசரின் பாதங்களண்டை ஆனந்த களிப்போடு அமர்ந்திருந்தாளோ அவ்வண்ணமாக அந்த பரிசுத்த மக்களும் அமர்ந்து கொள்ளுவார்கள்.

உலகப்பிரகாரமான மாயையின் ஆசீர்வாதங்களை கேட்டுக் கொண்டே இருப்பது அவர்கள் ஜெபம் அல்ல. தங்கள் பரலோக நேச தகப்பனுடைய பாதங்களண்டை சும்மா அப்படியே அமர்ந்திருந்தாலே அது அவர்களுக்கு போதுமானது. மோட்ச பேரானந்தம் அவர்கள் மேல் இறங்கி வந்து விடுகின்றது. கர்த்தருடைய பிரசன்னத்தால் அவர்கள் நிறைந்து விடுகின்றனர். அவர்களை அழுத்திப் பாரப்படுத்துகின்ற உலகப்பாரங்கள் எல்லாம் தாங்களாகவே செட்டைகளை அடித்துக் கொண்டு கிளம்பி விடுகின்றன. முழங்காலூன்ற ஆரம்பித்த கொஞ்ச நேரத்துக்கு பற்பலவிதமான உலக எண்ணங்களும், கவலைகளும் அவர்களை சூழ ஆரம்பித்தாலும் தேவனுடைய பிரசன்னம் பரத்திலிருந்து அவர்கள் மேல் இறங்கியதும் பகலவனைக் கண்ட பனி போல உலக எண்ணங்கள் தானாக விலகிவிடுகின்றன.

ஒரு புது மணப்பெண் தனது மணவாளனுடன் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தனிமையில் இருந்து ஆனந்தித்து உறவாடுவது போல ஒரு தேவ பிள்ளையும் தனது ஆத்தும மணவாளனாம் இயேசுவோடு தனிமையில் இருந்து உறவாடி மகிழும்.

ஆண்டவரின் பாதங்களில் அமர்ந்துவிட்டால் நேரம் போவதே தெரியாது. கண்களை மூடி விழித்தது போல இருக்கும், அதற்குள்ளாக ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் மெதுவாக கடந்து சென்றிருக்கும். கடந்து சென்ற ஆண்டுகளில் நான் உபவாசத்துக்காக இங்கு கோத்தகிரியில் உள்ள "குயின்ஸ் ஹில்ஸ்" என்ற ஒரு மிஷனரி பங்களா லாட்ஜில் அறை வாடகைக்கு எடுத்து ஜெபிப்பது உண்டு. மூன்று நாட்கள் உபவாசிக்க அறைக்குள் வேதாகமம், பாட்டுப் புத்தகத்துடன் சென்றால் உபவாசம் முடிந்துத்தான் வெளி உலகுக்கு வருவேன். மூன்று நாட்கள் கர்த்தருக்குள் ஆனந்தமாக கடந்து சென்றிருக்கும். உபவாசத்தை முடிக்கவே மனம் வராது. தேவனுடைய பிரத்தியட்சமான பிரசன்னத்தை முழுமையாக அடைந்து ஆனந்திப்பேன். எல்லா மகிமையும் ஆண்டவருக்கே.

பேருந்துகளில் பிரயாணம் பண்ணும்போதும் ஆண்டவர் இயேசுவோடு என் இருதயம் இடைப்பட்டுக் கொண்டே இருக்கும். கோத்தகிரிக்கும் மேட்டுப்பாளையத்துக்கும் இடைப்பட்ட தூரம்

33 கி.மீ ஆகும். கோத்தகிரியில் பேருந்தில் ஏறி அமர்ந்து சற்று தூரம் சென்றதும் கண்களை மூடினால் பேருந்து மேட்டுப்பாளையம் சென்றடைந்த பின்னர்தான் கண்களை திறப்பேன். நேச இரட்சகரோடு இருதயத்தில் சம்பாஷித்துக்கொண்டும், தேவனுடைய வசனங்களை தியானித்துக் கொண்டும் சென்று கொண்டிருப்பேன். கர்த்தருடைய பரிசுத்த அன்பில் வளர்ந்து அவரை நேசிக்கும் பரிசுத்த தேவ மக்கள் யாவரின் அனுபவமும் இதுவாகத் தான் இருக்கும்.

ஆண்டுதோறும் மேற்கொள்ளும் நீண்ட வடஇந்திய இரயில் பயணங்களிலும் இராக் காலங்களில் இரயில் பெட்டியில் முழங்காலூன்றி ஜெபித்துக் கொண்டே இருப்பேன். பகற் காலங்களில் அப்படி அமைதியாக ஜெபிக்க இயலாது. அப்படி இராக்காலங்களில் முழங்காலுன்றி ஜெபிக்க வசதியாக அன்பின் தேவனும் ரயில்களில் அடித்தள படுக்கை வசதியை (லோயர் பெர்த்) தப்பாமல் தந்துவிடுவார். ரயிலின் ஒட்டத்துக்கும் இரயில் பெட்டிக்குள் நிலவும் இராச் ஜாம அமைதிக்கும் தேவனோடு இருதயத்தை ஏறெடுக்கும் ஜெப மணி நேரங்கள் ஆனந்த பரவசமாக இருக்கும்.

ஒரு மறுபடியும் பிறந்த மெய்யான பரிசுத்த தேவ பிள்ளைக்கு ஜெபம் இல்லாமல் உயிர் வாழ இயலாது. தாயின் கர்ப்பத்தில் உருவாக்கு முன்னே தன்னை அறிந்தவரும் (எரே 1 : 5) உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தன்னை தெரிந்து கொண்டவரும் (எபே 1 : 4) தனது கருவை தாயின் வயிற்றில் கண்டவருமான (சங் 139 : 16) தன் அன்பின் கர்த்தரோடு அந்த தேவ பிள்ளை செடியும் கொடியும் போல ஒன்றிணைந்துவிடும். (யோவான் 15 : 5)

எப்படி ஒரு புதிதாக பிறந்த சிசுவுக்கு அதின் தாய் இல்லாமல் அதற்கு உயிர் வாழ்வு இல்லையோ அப்படியே ஒரு கர்த்தருடைய பிள்ளைக்கும் ஆண்டவருடைய இடைவிடாத ஐக்கியம் இல்லாமல் ஜீவன் இல்லை. அது ஆண்டவருக்கும் நன்கு தெரியும். ஆகவேதான் "எருசலேமின் குமாரத்திகளே, எனக்கு பிரியமானவளுக்கு மனதாகும் மட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலும் இருக்கும்படி உங்களுக்கு ஆணையிடுகிறேன்" (உன் 2 : 7) என்று ஆத்தும மணவாளனாம் இயேசு கூறினார்.

எப்பொழுதும் தேவனை தொழுது கொண்டிருக்கும் ஆத்துமாவே தேவனுக்கு பிரியமானவன்

தானியேல் தீர்க்கத்தரிசியை குறித்து "பிரியமான புருஷன்" என்று தேவன் அழைப்பதை நாம் பார்க்கலாம். (தானி 10 : 19) காரணம், அவர் எப்பொழுதும் தேவனை தொழுது கொண்டிருந்தார். அதை தடை செய்ய இந்த உலகத்தில் எந்த ஒரு மனிதனாலும் கூடாது போயிற்று. தன்னை சிங்க கெபியில் போடவேண்டுமென்ற கட்டளை பத்திரத்தில் ராஜாவாகிய தரியு கையெழுத்து வைத்து விட்டார் என்பதை தானியேல் பக்தன் அறிந்தும் தனது வழக்கமான ஜெபத்தை அவர் நிறுத்தவே இல்லை. தன் வீட்டுக்குள்ளே போய் எருசலேமுக்கு நேராக பலகணிகளைத் திறந்து தினம் மூன்று வேளையும் முழங்காற்படியிட்டு, ஜெபித்து, ஸ்தோத்திரம் செலுத்தினார். ஜீவனோ, மரணமோ எது வந்தாலும் ஆண்டவருடைய ஐக்கியத்திலிருந்து அவரை பிரிக்க இயலாது. மரணம் தனது செட்டைகளை தனக்கு முன்பாக விரித்துப் படுத்திருந்த போதிலும் தீர்க்கன் அதைக்கண்டு சற்றும் கலக்கமடையவில்லை. "என் தாசனாகிய யோபு" என்று தேவனால் அருமையாக அழைக்கப்பட்ட யோபு பக்தன் தனது அனுபவத்தைக் குறித்துப் பேசும்போது "கர்த்தர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13 : 15) என்று சொல்லுவார். ஆம், கர்த்தர் என்னைக் கொல்லச் சித்தம் கொள்ளுவதாக இருந்தாலும் நான் அவரை எப்பொழுதும் தொழுது கொண்டே இருப்பேன் என்றார். ஆண்டவரை எப்பொழுதும் தொழாமல் அவருக்கு இருக்க முடியவில்லை.

கர்த்தருடைய இருதயத்துக்கு ஏற்றவனாகவும், பிரியமானவனுமாக இருந்த தாவீது ராஜாவும் எப்பொழுதும் தேவனை தொழுது கொண்டிருந்தவர்தான். "உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் எப்பொழுதும் உம்மை துதித்துக் கொண்டிருப்பார்கள்" (சங் 84 : 4) என்று அவர் தனது சொந்த பரிசுத்த அனுபவத்தை எழுதி வைத்தார். "காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி காத்திருப்பேன்" (சங் 5 : 3) என்ற அவர் "அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன்" (சங் 55 : 17)

என்று கூறி இரா ஜாமங்களிலும் (சங் 119 : 148) தன் ஆண்டவரை நோக்கி கூப்பிடுவதாக சொல்லுகின்றார். ஆம், தாவீது ராஜா எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபித்துக் கொண்டே இருந்தார். அவர்தான் ஆண்டவருடைய இருதயத்துக்கு பிரியமானவனாக விளங்கினார்.

உன்னதப்பாட்டு புஸ்தகத்தில் மணவாளனாம் தேவன் மணவாட்டியாம் விசுவாசியை "என் பிரியமே" என்று அழைப்பதை நாம் பார்க்கலாம். (உன் 6 : 4) தேவன் தமது மணவாட்டியை அப்படி அழைப்பதற்கு ஒரு காரணம் உண்டு. அவள் தனது கண்களால் அவரை வெற்றி கொண்டு விட்டாள். "உன் கண்களை என்னைவிட்டுத் திருப்பு, அவைகள் என்னை வென்றது" (உன் 6 : 5) என்று மணவாளன் அதை கூறுவதை நாம் காணலாம்.

பரலோகத்தின் தேவனாகிய தம்மை இரவும் பகலும் நோக்கிக் கொண்டிருக்கும் கண்களை உடைய பரிசுத்த தேவ மக்கள்அவருக்கு பிரியமானவர்கள். சங்கீதக்காரனாம் தாவீது ராஜா அவருடைய உள்ளத்துக்கு பிரியமானவன், காரணம், தாவீது அரசனின் கண்கள் எப்பொழுதும் தன் கர்த்தரையே நோக்கிக் கொண்டிருந்தன. "என் கண்கள் எப்பொழுதும் கர்த்தரையே நோக்கிக் கொண்டிருக்கிறது" (சங் 25 : 15) என்றும், "வேலைக்காரரின் கண்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப் போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப்போலவும்..... எங்கள் கண்கள் கர்த்தரை நோக்கியிருக்கிறது" (சங் 123 : 2) என்றும் அவர் கூறுவார்.

எந்த ஒரு பரிசுத்தவானுடைய வாழ்க்கை சரித்திரத்தையும் நீங்கள் எடுத்து வாசித்துப் பாருங்கள். அந்த மனிதர் தேவனால் வல்லமையாக எடுத்துப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார் என்றால் அந்த பரிசுத்தவானுடைய தனிப்பட்ட ஜெப வாழ்க்கை மிகவும் வல்லமையுள்ளதாக இருந்திருப்பதை நாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல காணலாம். எப்பொழுதும் ஜெபத்தின் மூலமாக தேவனோடு ஐக்கியம் கொண்டிருப்பவர்களே, தேவனுக்கு பிரியமானவர்கள். அவர்களை தேவன் தமது நாமத்துக்கு மகிமையாக எடுத்து பயன்படுத்துவார்.

எப்பொழுதும் தேவனை தொழுது கொண்டிருக்கும் ஆத்துமாவை பாதுகாக்கும் தேவன்.

கர்த்தருடைய தாசனாகிய மோசே தான் மரணமடையுமுன்னே ஆசீர்வாதம் கூறியபோது பென்யமீனைக் குறித்து "கர்த்தருக்கு பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான், அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவர் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார்" (உபா 33 : 12) என்று கூறினார்.

"அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி" என்ற வார்த்தை நம்மை மகிழ்ச்சிப்படுத்துவதாக இருக்கின்றது. கர்த்தருக்கு பிரியமானவனை கர்த்தர் எந்நாளும் காப்பாற்றுவதாக தேவனுடைய வசனம் பேசுகின்றது. எத்தனை புடமிடப்பட்ட சத்தியமான வார்த்தைகள்!

கர்த்தருக்கு பிரியமான பிள்ளையான காலஞ்சென்ற எனது பரிசுத்த தகப்பனாரை அன்றைய தினம் மத்தியானம் கொலை செய்துவிட அந்தக் கொலைகாரன் தனது வீச்சு அரிவாளை அன்று அதிகாலையே வெகுவாக தீட்டி கூர்மைப்படுத்தினான். அதைக் கூர்மைப்படுத்த எவ்வளவு நேரம் செலவிட்டானோ நமக்குத் தெரியாது. ஒரே வெட்டில் எனது தகப்பனாருடைய தலை கழுத்திலிருந்து துண்டாக விழ வேண்டுமல்லவா? ஆ, எத்தனை கூர்மையாக அதை அவன் தீட்டி விட்டான். அது பளபளவென்று இப்பொழுது மின்னுகின்றது.

தீட்டப்பட்ட கூர்மையான அரிவாளை தனது இடுப்பில் தொங்க வைத்தவனாக எங்கள் ஊரைக்கடந்து வெகு தூரம் வடக்கே சென்று, அங்குள்ள தேரிக்காட்டில், ரஸ்தாவுக்கு ஓரமாக உள்ள ஒரு உயரமான பனை மரத்தில் ஏறி அவன் வசதியாக அமர்ந்து கொண்டான். எனது பரிசுத்த தந்தையின் வரவை அவன் ஆவலோடு எதிர் நோக்கி இப்பொழுது பொறுமையோடு காத்திருக்கின்றான். அவன் காத்திருப்பதின் காரணம் என்னவெனில், அப்பாவை வெட்டிக் கொன்று அவர்களிடமிருந்து பணத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதே அவனது எண்ணம்.

தனது சைக்கிள் பயணத்துக்கு முன்பாக தான் எப்பொழுதும் தொழுது ஸ்தோத்திரிக்கும் தனது நேச கர்த்தருக்கு முன்பாக தன்னை தாழ்த்தி ஒப்புவித்து ஜெபித்துவிட்டு தனது பலசரக்கு கடைக்குத் தேவையான சாமான்களை பக்கத்திலுள்ள நாசரேத் என்னும் ஊரில் வாங்க தன்னுடன் கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொண்டு எனது

தகப்பனார் சைக்கிளில் புறப்படுகின்றார்கள். எனது தகப்பனார் சைக்கிளை மிதித்து அழுத்தி ஊரைக் கடந்து தேரிக்காட்டு ரஸ்தாவில் வந்து கொண்டிருந்த நேரத்தில் தானே கொலைகாரன் மடமடவென்று பனைமரத்திலிருந்து கீழே இறங்கி அப்பாவை போகவிடாதவாறு ரஸ்தாவின் மையத்தில் வந்து தனது வலது கரத்தில் அரிவாளை பிடித்த நிலையில் குரூரமான பார்வையுடன் நின்று கொண்டிருந்தான். உடனே எனது தகப்பனார் தனது சைக்கிளிலிருந்து இறங்கி அவன் பெயரைச் சொல்லி "பாண்டி நீ ஏன் இப்படி நின்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டிருக்கின்றார்கள். அவன் அதற்கு பதில் ஒன்றும் சொல்லாமல் தனது கையை அசைத்து எனது தந்தையை போகும்படி அனுமதித்திருக்கின்றான். அவனது இந்த செயல் எனது தந்தைக்கு மிகவும் ஆச்சரியத்தை அளித்திருக்கின்றது. அவனது முகம் பேய் அறைந்தவனுடைய முகத்தைப் போல அத்தனை கொடூர விகாரமாக அப்பொழுது காணப்பட்டதாக பின்னர் எனது தகப்பனார் எங்களிடம் சொன்னார்கள். அத்துடன் அவனது கரத்திலிருந்த அரிவாளும் சூரிய வெளிச்சத்தில் பளிச்சிட்டு மின்னியதாக கூறினார்கள்.

எனது தந்தையை வழிமறித்த சம்பவம் நடந்து 2 அல்லது 3 நாட்கள் இடைவெளிக்குள்ளாக அதே கொலைகாரன் பாண்டி, பால் மோர் விற்க எங்கள் ஊருக்கு பக்கத்து ஊரிலிருந்து வந்த இள வயதுள்ள சில மாத கர்ப்பிணியான வாணிப பெண்ணை (இடைச்சி பெண்ணை) அவள் அணிந்திருந்த நகைகளை அபகரித்து எடுக்கும் பொருட்டாக ஒரு நாள் காலையில் எங்களது ஊருக்கு தெற்குப்பக்கம் ஒரு மறைவான இடத்தில் வைத்து கண்டம் துண்டமாக வெட்டி வீசி நகைகளை எடுத்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டான். இறுதியில் அவன் பிடிபட்டான். சில ஆண்டுகளுக்கு பிறகு அவன் மதுரையில் தூக்கிலிடப்பட்டான்.

எனது தகப்பனார் சந்திக்க வேண்டிய கோர மரணத்தை அந்த இடைச்சி பெண் சந்தித்தாள். அந்த பயங்கர மரணத்தை தேவன் எனது தந்தைக்கு ஏன் அனுமதிக்கவில்லை? அதின் காரணம், எனது தந்தை எப்பொழுதும் தேவனை தொழுது கொண்டிருந்தார்கள். அவர்களது வாழ்வே ஜெப வாழ்க்கையாக இருந்தது. கர்த்தருக்கு பிரியமானவனாக ஜீவித்த எனது தந்தையின் வாழ்வின் எல்லைக்குள் உபாகமம் 33 : 12ன் படி தேவன் வாசமாயிருந்தார். அந்த சர்வ வல்ல தேவன் அவர்களை அன்று பாதுகாத்தார். தன்னுடைய கரத்தை ஓங்கி அப்பாவை வெட்டி வீழ்த்த

கொலைஞன் மனதார விரும்பினாலும், அந்த வலது கரம் செயலிழந்து போகத்தக்கதாக கர்த்தர் அவனது கரத்தை அந்த நேரம் கட்டிப்போட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கர்த்தரை எப்பொழுதும் தேடி தொழுது கொண்டிருந்தவர்களுக்கு கிடைத்த பாக்கியம் அது.

ஒரு நாட்டின் அரசனும் (சவுலும்) அவனது படைகளும் ஒன்று சேர்ந்து தன்னந்தனியனான தாவீதை கொல்ல எவ்வளவோ வகை தேடி பிரயாசப்பட்டபோதினும் அது கடைசி வரை இயலாத காரியமாக போய் விட்டது. தனக்கு முன்பாக அறையில் உட்கார்ந்திருந்த தாவீதை தனது கரத்திலிருந்த ஈட்டியை அவன்மேல் எறிந்து கொல்ல சவுல் அரசன் முயன்றபோதும் கர்த்தர் தமது தாசனை பாதுகாத்துக் கொண்டார். சவுலுடைய வாழ்நாட்காலம் முழுமையிலும் அவன் தாவீதுக்கு பிராண பகைஞனாக இருந்து அவனை கொல்ல வகை தேடியும் முடியாது போய்விட்டது. ஏன் எனில் தாவீது தேவனுக்கு பிரியமானவனாக இருந்து தன் கர்த்தரை எப்பொழுதும் ஜெபத்தின் மூலமாக தேடிக் கொண்டிருந்த படியால் கர்த்தர் அவனது எல்லைக்குள்ளே வாசம்பண்ணி எந்நாளும் அவனைக் காப்பாற்றி வந்தார்.

தானியேல் தீர்க்கனும் எப்பொழுதும் தேவனைத் தேடும் கர்த்தருக்கு பிரியனாக இருந்தமையால் நொடிப்பொழுதில் பீறிப் போடக்கூடிய கொடிய சிங்கங்களின் பற்களுக்கும், பட்சிப்புக்கும் விலக்கிக் காக்கப்பட்டார்.

யாக்கோபு என்ற நமது முற்பிதாவும் நமது தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவராக காணப்பட்டு அவர் எப்பொழுதும் கர்த்தரை தேடிவந்த காரணத்தால், பழிவாங்க வேண்டும் என்ற திட்டமான தீர்மானத்திலிருந்த தனது சகோதரனாகிய ஏசாவின் உள்ளத்தை மாற்றி கர்த்தர் யாக்கோபை தனது கண்ணின்மணி போல காத்துக் கொண்டார். தீமை செய்ய தீர்மானித்திருந்த தனது மாமனாகிய லாபானுடைய கரங்களுக்கும் கர்த்தர் யாக்கோபை விலக்கி காத்துக் கொண்டார்.

1983ஆம் ஆண்டு தேவ ஊழியத்தின் பாதையில் நான் பூட்டான் தேசம் சென்றிருந்தபோது பாரூ என்ற பூட்டானிய கிராமத்தில் ஒரு இரவை நான் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. 7500 அடி உயரத்தில் அமைந்துள்ள அந்த இடத்தின் குளிர் மகா பயங்கரமாக இருந்தது. என்னை தங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்வார் யாரும் இல்லை. அங்குள்ள ஒரு குறிப்பிட்ட வீட்டினரிடம் நான் எவ்வளவோ கெஞ்சி

கேட்டும் இடம் தர மறுத்து நின்றனர். இறுதியில் தெரு நாய்கள் கூட்டம் படுத்திருந்த ஒரு சிறிய தகர கொட்டகையில் அன்று இரவு படுக்க தீர்மானித்து எனது சாமான் பையை மேற்கண்ட வீட்டில் வைத்துவிட்டு சற்று தொலைவில் தகர கொட்டகையில் படுத்திருந்த நாய்களை எல்லாம் துரத்திவிட்டு எனது பையை எடுத்துக் கொண்டு வருவதற்காக திரும்ப நான் அந்த பூட்டானிய வீட்டுக்கு வந்தபோது அந்த வீட்டினர் என்மேல் கருணை கொண்டு தங்கள் வீட்டினுள் அந்த இரவில் படுக்க எனக்கு இடம் தந்தனர். எனினும், என் வசம் போதுமான குளிர் ஆடைகள் இல்லாததால் இரவு முழுவதும் தூக்கமில்லாமல் குளிரில் நடுநடுங்கிக்கொண்டே படுத்திருந்தேன். குளிர் ஒரு பக்கம், வீட்டின் உட்புற கூரையில் கயிறுகள் கட்டி உலர வைத்திருந்த பச்சை இறைச்சியின் கடுமையான நாற்றம் ஒரு புறம் என்னை வாட்டினது.

மேற்கண்ட பூட்டானிய குடும்பத்தினர் எனக்கு தங்கள் வீட்டினுள் இராத்தங்க அன்று இடம் தர கடைசி வரை மறுத்திருந்தால் நான் அந்த நாய்கள் படுத்திருந்த தகரக் கொட்டகையில் கட்டாயம் படுத்து இரவோடு இரவாக கடுங்குளிரில் விரைத்து மாண்டு போயிருப்பேன்.

அடுத்த நாள் காலையில் நான் பார்த்தபோது வெண் பனி பூமியின் பரப்பையே முற்றுமாக மூடி மறைத்திருப்பதை கண்டேன். தாயின் வயிற்றில் என்னை தனக்கென தெரிந்து கொண்ட அன்பின் கர்த்தர் அன்று என்னை நூறு சதவித நிச்சயமான மரணத்திலிருந்து பாதுகாத்தார். ஏனெனில் தேவ பெலத்தால், தேவனது அனாதி கிருபையால், நான் எப்பொழுதும் ஆண்டவரை தேடிக் கொண்டிருப்பதால் அவர் என்னை அற்புதமாக பாதுகாத்துக் கொண்டார். அந்த கல் நெஞ்சினரான பூட்டானிய புத்த மக்களுக்கு கடைசி நிமிடம் தந்தி செய்தியை அனுப்பி எனக்கு அவர்கள் வீட்டில் அந்த கடுங்குளிர் இரவில் தங்க இடம் கொடுக்க கிருபை செய்தார். இயேசு அப்பாவுக்கு ஸ்தோத்திரம்.

தேவ மக்களே, எப்பொழுதும் ஜெபத்தின் மூலமாக தேவனைத் தொழுது கொண்டிருங்கள்.

ஒரு தேவ பிள்ளை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தேவனோடு ஜெபத்தில் தரித்திருக்க முடியும். காரணம், அந்த தேவ பிள்ளை இந்த உலக வாழ்க்கைக்கு பின்னர் தனது ஆண்டவர் இயேசுவோடு முடிவில்லாத நித்திய காலமாக பரலோகத்தில் வாழப்

போகின்றது. அந்த பரலோக வாழ்க்கை அதற்கு இங்கேயே தொடங்கிவிடுகின்றது. நமது ஆதி தாய் தந்தையர் தங்கள் தேவனாகிய கர்த்தரோடு ஏதேன் பூங்காவிலே பகலின் குளிர்ச்சியான வேளைகளில் எல்லாம் கொஞ்சி குலாவி மகிழ்ந்து கொண்டே இருந்தனர். அந்த பரலோக இன்ப வாழ்க்கை, பாவம், அவர்களுடைய வாழ்வில் குறுக்கிடும் வரை தொடர்ந்தது.

இப்பொழுதும், நாம் நமது ஆண்டவரோடு ஐக்கியம் கொண்டு வாழ முடியவில்லை என்றால் அது நமது பாவங்களாகும். நம்மில் மறைந்திருக்கும் தேவனுக்கு பிரியமற்ற பாவங்களை பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையால் கண்டு பிடித்து அதை நாம் நம் வாழ்வின் எல்லையிலிருந்து அப்புறப்படுத்துவோமாக.

ஒருக்கால் அது தேவன் அருவருக்கக்கூடிய பெருமை, மேட்டிமை, கோபம், மூர்க்கம், வீண் சந்தேகங்கள், கபடம், மாய்மாலம் போன்றவையாக இருக்கலாம். அல்லது விபச்சார மயக்கம் நிறைந்த (மத் 5 : 28, 2 பேதுரு 2 : 14) நமது கண்களின் பார்வையாக இருக்கலாம். அல்லது எப்பொழுதும் வயிறு புடைக்க உண்டு கொண்டிருக்கக் கூடிய ஆகார மோகமாக இருக்கலாம். அல்லது வாங்கிய கடன்களை கொடாத பாவமாக இருக்கலாம். நமக்கு தங்கள் மனதறிய தீங்கிளைத்த மக்கள் மேல் நாம் கொண்டுள்ள மன்னிக்க இயலாத மனக்கசப்பின் ஆவியாக அது இருக்கலாம். ஆண்டவர் இயேசுவை விட நாம் அதிகமாக நேசிக்கும் கணவன், மனைவி, பிள்ளைகள், சிநேகிதர்கள் போன்றவர்களாக அந்த பாவம் இருக்கக் கூடும். அல்லது கொடிய பண ஆசை மற்றும் உலக மாயைகளை (டிவி. சினிமா, அசுத்தமான நாவல்கள், கதைப்புத்தகங்கள் படித்தல், அரசியல் பற்று போன்றவை) குறித்த நமது அளவற்ற பற்று பாசமாக இருக்கலாம். தேவனுக்கு கொடுக்கப்பட வேண்டிய தாலந்துகள் காலம், செல்வம், போன்றவற்றை நாம் நமக்கென எடுத்து வைத்திருக்கும் தவறாக இருக்கலாம். அந்த பாவக் குற்றங்களை தேவ சந்நிதியில் நாம் கேட்டு விசாரித்து அவைகளை நாம் நம்மிலிருந்து விலக்கும்போது தேவனுக்கும் நமக்குமுள்ள பரிசுத்த ஐக்கியம் சீராகி நமது ஜெப வேளை ஆனந்த காலமாக மாறுகின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாம் நமது கடந்த கால பாவங்களுக்காக மனங்கசந்து அழுது தேவனிடமிருந்து நமது பாவ மன்னிப்பையும், இரட்சிப்பின் நிச்சயத்தையும் பெற்று யோவான் 3:3 ன்படி

கட்டாயம் மறுபடியும் பிறந்து தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தின னாகியிருத்தல் வேண்டும். மறுபடியும் பிறந்து புது சிருஷ்டிப்பின் அனுபவம் இல்லாமல் (2 கொரி 5 : 17) எவரும் தேவனுடைய பரம வீட்டை சென்றடைய முடியாது. மறுபடியும் பிறவாதவர்களுக்கு தேவனுடைய சமூகத்தில் நீண்ட நேரம் ஜெபத்தில் தரித்திருக்க இயலாது. ஆண்டவருடைய பாதங்கள் அவர்களுக்கு பேரானந்தம் அளிக்காது.

எப்பொழுதும் தேவனை தொழுது கொண்டிருப்போர் அடையும் பாக்கிய சிலாக்கியங்கள்

தங்களைவிட்டு எடுபடாத நல்ல பங்காகிய கர்த்தரின் பாதங்களில் தினமும் மணிக்கணக்கான நேரம் செலவிடும் தேவ மக்களை தேவப் பிரசன்னம் சூழ்ந்து கொள்ளுகின்றது. தேவனோடு 40 நாட்கள் சீனாய் மலையில் ஒன்று கூடி இருந்துவிட்டு கீழே இறங்கி வந்த மோசேயின் முகத்தில் தேவ மகிமை பிரகாசித்தது போல கர்த்தரோடு அதிகமான நேரத்தை ஜெபத்தில் செலவிடும் தேவப் பிள்ளைகளையும் கர்த்தாவின் சமூக பிரசன்னம் நிரப்பி விடுகின்றது.

அவர்களின் இருதயம் தேவ சமாதானத்தால் நிரம்பி வழிகின்றது. யார் அவர்களை நிந்தித்தாலும், தூஷித்தாலும், உண்மைக்கு புறம்பான காரியங்களை அவர்களுக்கு விரோதமாக பேசினாலும் அவர்களுடைய உள்ளம் அதினால் கொஞ்சம் கூட கலக்கம் அடைவதில்லை. அந்த வார்த்தைகள் அவர்களின் இருதயத்தில் எந்த ஒரு சலனத்தையும் ஏற்படுத்தக்கூடாமல் போய்விடுகின்றது. அவர்கள் தங்கள் ஆண்டவரைப்போல தங்கள் வாயைத் திறவாமல் அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஆட்டுக்குட்டியைப்போல அமைதியாகி விடுகின்றனர்.

அந்த தேவ மக்களின் தூக்கம் இன்பமாக இருக்கும். வாழ்வில் பாடுகள், பிரச்சினைகள், போராட்டங்கள் எத்தனை எத்தனையோ இருந்தபோதினும் அவர்கள் படுத்து நித்திரை செய்ய ஆரம்பித்துவிட்டால் எந்த ஒரு கவலையின் எண்ணமும் அவர்களை அண்ட இயலாமற் போய்விடுகின்றது. "சமாதானத்தோடு படுத்துக் கொண்டு நித்திரை செய்வேன்" (சங் 4 : 8) என்று சங்கீதக்காரனோடு சேர்ந்து கூறக்கூடியவர்களாகிவிடுகின்றனர்.

இந்த தேவ மக்களுடைய காரியங்களை எல்லாம் கர்த்தர் தமது தாசனாம் தாவீதுக்கு முடித்துக் கொடுத்தது போல (சங் 138 : 8) முடித்துக் கொடுக்கின்றார். "எங்கள் கிரியைகளை எல்லாம் எங்களுக்காக நடத்தி வருகிறவர் நீரே" (ஏசா 26 : 12) என்று இந்த தேவ ஜனங்கள் ஆர்ப்பரிப்போடு கூறுவார்கள்.

ஒரு மனிதன் தன் பிள்ளையை சுமந்து கொண்டு போவது போல தேவன் இந்த தமது அன்பு மக்களை அவர்களுடைய வாழ்நாட் காலம் முழுவதும் தூக்கிச் சுமந்து கொண்டு செல்லுகின்றார் (உபா 1 : 31)

தமது சமூகத்தில் தினமும் அதிகமான மணி நேரங்களை ஜெபத்தில் செலவிடும் இந்த தமது அருமை மக்களை கர்த்தர் தமது மோட்ச இன்ப வீட்டுக்கு ஒவ்வொரு நாளும் பரிசுத்தப்படுத்தி பக்குவப்படுத்துகின்றார். நாள்தோறும் அவர்களை தமது சாயலுக்கு ஒப்பாக மாற்றி வருகின்றார். ஒரு காலத்தில் இவர்களில் தாராளமாக காணப்பட்ட பாவ அசுசிகளை எல்லாம் தேவன் கழுவி சுத்திகரித்து இவர்களை பரிசுத்தர்களாக மாற்றுகின்றார். மரண யோர்தானை இவர்கள் கடப்பதற்கு முன்பாக தம்முடைய மோட்ச சந்நிதானத்திலே இந்த தேவ மக்கள் மிகுந்த தைரியத்தோடும், ஆனந்தக் களிப்போடும் தம்மை சந்திக்கக் கூடிய பூரண தகுதியுடைய மக்களாக யூதா 24ஆம் வசனத்தின்படி மாற்றி விடுகின்றார்.

"உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருப்பதற்காக சந்தோசப்படுங்கள்" (லூக் 10 : 20) என்ற தங்கள் நேச கர்த்தரின் வார்த்தைகளின்படி இந்த தேவ மக்கள் தாங்கள் சென்றடையப் போகும் பரலோகத்தையும், அதின் அதிபதியாம் தங்கள் அன்பு நேசரையும், தங்களுக்காக ஆயத்தம் செய்து வைக்கப்பட்டுள்ள மனுஷனுடைய இருதயத்தில் வைத்து கற்பனை செய்து நிதானிக்க முடியாத மோட்சானந்த மாமகிமைகளையும் (1 கொரி 2 : 9) தினமும் தியானித்து களிகூர்ந்து வருகின்றனர்.

இதை கருத்தோடு வாசிக்கும் கர்த்தருடைய அன்பான பிள்ளையே, தினமும் சில மணி நேரங்களை ஆண்டவருடைய பரிசுத்த பாதங்களில் இரா ஜாமங்களிலும், விடிபகலிலும், பகற் காலங்களிலுமாக செலவிட்டுப்பார். அதின் மாட்சியே உனக்கு தனியாக தெரியும். கர்த்தருடைய பிரசன்னம் உன்னை சூழ்ந்திருப்பதையும், நீ கையிட்டுச் செய்யும் அனைத்து காரியங்களிலும், உனது தேவ ஊழியங்களிலும்,

உனது போக்குவரத்துகளிலும் தேவனுடைய வழிநடத்துதலும், ஆசீர்வாதமும் நிரம்பி வழிவதை நீ காண்பாய்.

"எந்த ஒரு கிறிஸ்தவனும் தனது அதிகமான நேரத்தை தன் ஆண்டவரோடு தினமும் ஜெபத்தில் செலவிடாதபட்சத்தில் அவன் பரலோகம் சென்றடைவது முற்றும் கடினமான காரியம்" என்று 18ஆம் நூற்றாண்டு பரிசுத்தவான் வில்லியம் ஜால்மர்ஸ் பர்ன்ஸ் என்ற ஒரு பெரிய பரிசுத்த பக்தன் கூறியுள்ளார். ஒரு கிறிஸ்தவனுக்கு ஆழமான ஜெப வாழ்க்கை இல்லையேல் அவனுடைய வாழ்வில் பரிசுத்தம் கிடையாது. பரிசுத்தம் இல்லையேல் பரலோகமும் கிடையாது. (எபி. 12 : 14)

தேவ மைந்தனாம் நம் அருமை ஆண்டவர் இயேசு இரட்சகருக்கே "மிகவும் வியாகுலத்துடன் கூடிய அதிக ஊக்கமான ஜெபமும் (லூக் 22 : 44) "இரா முழுவதும் ஜெபிக்கும் ஜெபமும்" (லூக் 6 : 12) அத்தியந்த தேவையாக இருந்திருக்கும்போது நாம் ஜெபியாதிருப்பதும், 5 நிமிடம் அல்லது 10 நிமிடம் ஜெபிக்கும் ஜெபமும் நம்மை நிச்சயமாக நரக பாதாளத்துக்கே வழிநடத்திச் செல்லும்.

கர்த்தர் தாமே நம் மேல் கிருபையாக மனதுருகி நாம் எப்பொழுதும் ஜெபித்துக்கொண்டிருக்கத்தக்கதான ஜெப ஆவியையும், விண்ணப்பத்தின் ஆவியையும் நம் மேல் ஊற்றி நம்மை வல்லமையுள்ள ஜெப மாந்தர்களாக்குவாராக.

சகோதரனே, சகோதரியே வாழ்க்கையின் நோக்கம் இன்னதென்று அறியாமல் திகைக்கிறாயா? நீ உலகத்தில் வைக்கப்பட்டிருப்பதன் ஒரே நோக்கம் முதலில் " இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்ற அனுபவத்தை (கலா. 2 : 20) அடைவதும், அதற்கப்பால், நித்திய நரகத்துக்கு நேராய்ச் சென்று கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும் பார்த்து "சகோதரனே, சகோதரியே உனக்குப் புதிய எருசலேமின் மகிமையான நித்திய வாழ்வை அளிப்பதற்காக ஈனச் சிலுவையில் நீசனைப் போல் தொங்கி மரித்த நேச மீட்பரண்டை வா" என்றழைப்பதுமே. **இதைத் தவிர வேறெவ்வித வாழ்க்கையும் இறுதியில் பயனற்றதும், பாழுமாகவே முடியும்.**

பரதேசியின் மோட்ச பிரயாணம் - 19

ஆனந்தமலை சேருதல்

அப்புறம் அவர்கள் இருவரும் **ஆனந்தமலை** சேருமட்டும் பேசிக் கொண்டே வழிநடந்தார்கள். (ஆனந்தமலை : இது கிறிஸ்தவர்கள் தங்கள் விருத்தாப்பிய வயதில் சிலதரம் அனுபவிக்கிற அமைதலையும் களிப்பையும் குறிக்கிறது. அவர்கள் தங்கள் உடன் கிறிஸ்தவர்களோடு தேவ அன்பையும், தங்களுக்கு முன்னே இருக்கும் சொல்லொண்ணா மகிமையையும் பற்றிச் சம்பாஷிக்கிறார்கள்) ஆனந்த மலை நாடு முழுவதும் முன்னே சொன்ன மலை அதிபரை சேர்ந்தவைதான். அவர்கள் அந்த மலைமேல் இருந்த தோட்டங்களையும், நந்தவனங்களையும், கொடிமுந்திரிகைப் பந்தல்களையும், நீர் ஊற்றுகளையும் பார்க்கும்படியாக ஏறிப்போனார்கள். அவர்கள் போய் நீராடி, குடித்து அங்குள்ள திராட்சக்குலைகளைப் பிடுங்கித் தின்றார்கள். அந்த மலை மேலேயே ராஜபாதையின் ஓரமாய் இடையர் தங்கள் மந்தைகளை மேய்த்துக் கொண்டு நின்றார்கள். பிரயாணிகள் இருவரும் அவர்கள் அண்டையில் போய், இளைப்படைந்த வழிப்போக்கர் ஆயாசத்தோடு வழியில் வரத்துப்போக்காய் இருக்கிறவர்களுடன் பேசும்போது, தங்கள் தடியின்மேல் சாய்ந்துக் கொள்ளுகிறதுபோல் சாய்ந்து நின்றுகொண்டு, இந்த மலையின் மேல் மேய்ந்து கொண்டிருக்கின்ற ஆடுகள் யாருடையவைகள் என்று கேட்டார்கள்.

இடையர் : இவை அனைத்தும் மனுவேலர் மண்டலத்தைச் சேர்ந்த மலைகள். அவருடைய தேசத்து ஆட்களுடைய பார்வையில்தான் இது இருக்கிறது. ஆடுகளும் அவருடையவைகள்தான். அவைகளுக்காக அவர் தமது ஜீவனையும் கொடுத்திருக்கிறார் என்று மறுமொழி சொன்னார்கள்.

கிறிஸ்தியான் : உச்சிதப்பட்டணம் போகும் பாதை இதுதானா?

இடையர் : இதுதான், இதுதான். நீங்கள் நேர் பாதையில் தான் இருக்கிறீர்கள்.

கிறி :- உச்சிதப்பட்டணம் இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றது?

இடையர் : அதில் சேரத்தகாதவர்களுக்கு வெகு தூரம் தான்.

கிறி :- வழி ஷேமமா? மோசமா?

இடையர் :- ஷேமமாய் நடந்து போகிறவர்களுக்கு ஷேமம்தான், மோசம் பண்ணப் பார்க்கிறவர்களுக்கு மோசம்தான் (ஓசி 14 : 9)

கிறி : வழியில் இளைப்படைந்து போகிற பிரயாணிகளுக்கு உதவியாக முசிப்பாற்றும் சத்திரம் சாவடி ஏதாவது உண்டா?

இடையர் : இந்த மலை அதிபர், இவ்வழி வரும் பிரயாணிகளைத் தகுந்தபடி பராமரிக்க வேண்டும் என்று எங்களுக்கு கண்டிப்பாய் உத்தரவு கொடுத்திருக்கிறார். ஆகையால் இம்மலையின் பாக்கியம் எல்லாம் உங்களுக்கு முன்பாக வைக்கப் பட்டிருக்கிறது (எபி. 13 : 2) என்று சொன்னார்கள்.



பின்னும் நான் என் சொப்பனத்தில் கண்டது என்ன வென்றால் மற்ற இடங்களில் உள்ளவர்கள் இவர்களைப் பார்த்து :- எங்கேயிருந்து வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்? இந்த வழியாய் வந்த வகை எப்படி? இம்மட்டும் இந்த வழியாய் வரும்படி செய்த பிரயத்தனங்கள் எவை? என்று கேட்டாற்போலவே, இந்த இடையரும் பல கேள்விகளை அவர்களிடத்தில் கேட்டார்கள். அதற்கு சொல்லவேண்டிய உத்தரவை அவர்கள் முன்போலவே சொன்னார்கள். ஏனெனில் இவ்விதமாய் இந்த மலைக்கு வந்து சேருகிற பிரயாணிகள் மெத்தக் கொஞ்சம்பேராய் மாத்திரம் இருந்தார்கள். ஆனால் அவர்கள் சொன்ன மாறுத்தரங்களைக் கேட்ட இடையர் சந்தோசப்பட்டு, மட்டற்ற அன்பு பாராட்டி, நீங்கள் ஆனந்த மலை வந்து சேர்ந்தது, ஆனந்த மலைவாசிகள் அனைவருக்கும் ஆனந்தமே என்று சொன்னார்கள்.

அப்புறம் அறிஞன், ஞானப்பியாசி, விழிப்பாளி, கபடின்மை என்று பேர் வழங்கப்பட்ட நான்கு **இடையரும்** பிரயாணிகளைக் கைப்பிடித்துக் கூட்டிக்கொண்டு தங்கள் கூடாரத்துக்குக் கொண்டு போய் அச்சமயத்தில் தயாராக இருந்த பண்டபதார்த்தங்களை அவர்கள் உண்டு களிக்கச் செய்தார்கள். (இடையர் என்பது, ஆடுகளுக்காகத் தமது ஜீவனைவிட்ட பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவின் உத்தம ஊழியக்காரரைக் குறிக்கிறது. மேய்ப்பரின் நாமங்கள் கிறிஸ்துவின் மந்தையின் மேய்ப்பராகிய குருக்களுக்கு இருக்கவேண்டிய பிரதான லட்சணங்களைக் குறிக்கிறது) மேலும் அந்த இடையர் பிரயாணிகளைப் பார்த்து :- நாம் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆகும்படியாகவும், ஆனந்த மலையின் மகத்துவங்களை நீங்கள் கண்டு களிகூரும்படியாகவும், எங்களுடன் சில காலம் தங்கியிருந்தால் நலமாய் இருக்கும் என்று சொன்னார்கள். பிரயாணிகளும் அதற்கு பூரண மனதோடு சம்மதித்தார்கள். இதற்குள்ளாக இரவில் வெகு நேரம் ஆகிவிட்டதால் அவரவர் தனித்தனியே இளைப்பாறும்படி பிரிந்து விட்டார்கள்.

பொழுது விடிந்த உடனே, அந்த இடையர் கிறிஸ்தியானையும், திடநம்பிக்கையையும் கூப்பிட்டு :- நீங்கள் எங்களோடு ஆனந்த மலைமேல் ஆனந்தத்தோடு உலாவும்படி வாருங்கள் என்று அழைத்ததை நான் என் சொப்பனத்தில் கண்டேன். அப்படியே அவர்கள் கூடப்போய் அங்கும் இங்கும் உலாவி எங்கும் பாராத காட்சிகளை அம்மலையின் எத்திக்கிலும் கண்டார்கள். அப்புறம் அந்த இடையர் : நாம் இந்த பிரயாணிகளுக்குச் சில அதிசயங்களைக் காட்டுவோம் என்று அவர்கள் எல்லாரும் தீர்மானித்த பின்பு, அவர்கள் பிரயாணிகளை ஒரு உயர்ந்த பறம்பின் மேல் கூட்டிக் கொண்டு போனார்கள். அதற்குத் **தப்பறைப்பறம்பு** என்று பெயர். (தப்பறைப் பறம்பு என்பது, கிறிஸ்தவர்கள் ஒப்புக் கொள்ளும் மோசமான கோட்பாடுகளை அல்லது வேதப்புரட்டலை குறிக்கிறது. இதன் முடிவு நாசமாய் இருக்கும்) தப்பறைப்பறம்பின் ஒரு பக்கம் செங்குத்தாய் இருந்தது. அதின் அடித்தரையை உற்றுப்பார்க்கும்படி இடையர் சொன்னார்கள். கிறிஸ்தியானும், திடநம்பிக்கையும் எட்டிப் பார்க்கவே, அதன்மேல் இருந்து விழுந்த பலர் உடல் வேறு தலைவேறாகச் சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறதைக் கண்டார்கள். இதன் இரகசியம் என்ன என்று கிறிஸ்தியான் கேட்டான். அதற்கு இடையர் :- சரீர உயிர்த்தெழுதலைப் பற்றி இமநேயும் பிலேத்தும் போதித்த உபதேசத்துக்கு செவிக்கொடுத்தவர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டது இல்லையா?

என்று கேட்டார்கள். ஆம், ஆம், கேள்விப்பட்டிருக்கிறோம் என்றார்கள். அப்புறம் இடையர்கள் சொல்லுகிறார்கள் : இந்த மலையின் அடியில் சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறவர்கள் அவர்கள்தான். இவ்வளவு செங்குத்தான பறம்பை எப்படித் தொட்டு ஏறலாம்? இவ்வளவு வழுக்கலான மலையை எப்படி நெருங்கலாம் என்று மற்றவர்கள் எச்சரிப்பு அடையும்படி, நீங்கள் பார்க்கிற வண்ணம் அவர்கள் இந்நாள் மட்டும் புதைக்கப்படாமல் கிடக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

அப்புறம் இடையர் அவர்களை வேறொரு மலைமேட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனதாக நான் என் சொப்பனத்திலே கண்டேன். அதற்குச் **சாவதான மலை** என்று பேர். (சாவதான மலை என்பது, மற்றவர்களுக்குச் சம்பவித்திருக்கிற காரியங்களை உணர்ந்து கொண்டு அவர்கள் எச்சரிப்பு அடையவேண்டியது என்று உணர்த்துகிறது) சாவதான மலையிலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால் பார்க்கும்படி இடையர் சொன்னார்கள். அப்படியே பிரயாணிகள் பார்த்தபோது, அங்கே காணப்பட்ட கல்லறைகளுக்கு ஊடே பலர் இங்கும் அங்கும் உலாவிக்கொண்டு நிற்கிறதாகத் தெரிந்தது. அவர்களில் சிலர் வேளாவேளைகளில் கல்லறைகள் மேல் இடறி விழுந்து விழுந்து திரிந்தாலும், அங்கிருந்து வெளியேற வழி தெரியாமல் தட்டுக்கெட்டு தடுமாறுகிறதினாலும் அவர்கள் அனைவரும் குருடராய் இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்தார்கள். இதன் தாற்பரியம் என்னவென்று கிறிஸ்தியான் கேட்டான்.

அதற்கு இடையர் சொல்லுகிறார்கள் : நீங்கள் வழியிலே இம்மலைக்கு வெகு சமீபமாகவே ராஜபாதைக்கு இடதுபுறமாக விலகுகிறதற்கு ஒரு படிக்கட்டு வழி இருக்கிறதே, அதைக் கண்டீர்களா என்று கேட்க, அவர்கள் கண்டோம் கண்டோம் என்றார்கள். அப்புறம் இடையர் : அந்தப் படிக்கட்டுப் பாதை அகோர பயங்கர ராட்சதனுடைய அரண்மனையாகிய சந்தேகத் துருக்கத்துக்குப் போகிறது. அதோ கல்லறைகளுக்குள் உலாவுகிற அவர்கள், உங்களைப் போலவே ஒரு காலத்தில் உத்தம மோட்ச பிரயாணியாகி அந்தப்படிக்கட்டுப் பாதை மட்டும் வந்தார்கள். அந்த இடத்துக்கு சமீபமாய் உள்ள ராஜபாதையானது மகா கரடுமுரடாய் இருந்ததையிட்டு அவர்கள் படிக்கட்டுப் பாதையில் ஏறி, அகோர பயங்கர ராட்சதன் கையில் அகப்பட்டு, சந்தேக துருக்கத்தின் சிறைச்சாலையில் அடைபட்

டிருந்தார்கள். சில நாள் பொறுத்து ராட்சதன் அவர்கள் கண்களைப் பிடுங்கிப் போட்டு, "விவேகத்தின் வழியை விட்டுத் தப்பி நடக்கிற மனுஷன், செத்தவர்களின் கூட்டத்தில் தாபரிப்பான்" என்று ஞானி சொல்லிய வாசகம் நிறைவேறும்படியாக இவ்வண்ணம் கல்லறைக்கு ஊடே கண்ணற்ற கபோதிகளாக அலையும்படி விட்டுவிட்டான் என்று சொன்னார்கள். அதைக் கேட்ட கிறிஸ்தியானும், திடநம்பிக்கையும் ஒருவரையொருவர் கூர்ந்து பார்த்து கண்ணீர்விட்டு அழுதார்களே அல்லாமல் வேறொன்றையும் இடையருக்கு சொல்லவில்லை.

அதற்கு அப்பால் நான் என் சொப்பனத்தில கண்டது என்னவென்றால், அந்த இடையர் பிரயாணிகளை ஒரு பள்ளத்தாக்குக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். அங்கே ஒரு மேட்டின் பக்கத்தில் ஒரு கதவு இருந்தது. அந்தக் கதவைத் திறந்து உள்ளே பார்க்கும்படியாக சொன்னார்கள். பார்க்கவே, காரிருளும் கனத்த புகையுமே அங்கே இருந்ததாகக் கண்டார்கள். அதுவும் அன்றி, அதனுள்ளே நெருப்பு இரைகிற இரைச்சலும், வேதனைப்படுகிறவர்களுடைய கூக்குரலும் கேட்டார்கள். அதோடு கந்தக நாற்றத்தையும் முகர்ந்தார்கள். இதன் பொருள் என்ன? என்று கிறிஸ்தியான் கேட்டான். அதற்கு இடையர் : நரகத்துக்கு இது ஒரு குறுக்கு வழி. மாயக்காரர் போகிற வழி இதுதான். ஏசாவைப் போல் தங்கள் முதற்பிறப்பு சுதந்திரத்தை விற்கிறவர்களும், அலெக்சாந்தரோடு கூடிச் சுவிசேஷத்தைத் தூஷிக்கிறவர்களும், அனனியா, சப்பீராளோடே கூடிப் பேசி பித்தலாட்டம் செய்கிறவர்களும் போகிற வழி இதுதான் என்று சொன்னார்கள்.

திடநம்பிக்கை : அப்போது, திடநம்பிக்கை மேய்ப்பரைப் பார்த்து : இவர்கள் ஒவ்வொருவரும் எங்களைப் போல் மோட்ச பிரயாணிகளின் வேஷம் பூண்டிருந்தார்களோ? என்று கேட்டான்.

இடையர் : ஆம், ஆப்
பூண்டிருந்தார்கள் என்று இடைய

திடநம்பிக்கை : இவர்கள் தள்ளப்படு முன்னே இந்த வேஷத்தோடு எவ்வளவு தூரம் பிரயாணம் செய்திருந்தார்கள்?

இடையர் : சிலர் இம்மலை மட்டும் வந்ததுண்டு, சிலர் இதுவரையில் வரவில்லை என்று சொன்னார்கள்.

அது கேட்ட பிரயாணிகள் இருவரும், வல்லமையுள்ளவர் வல்லமை தரும்படியாக நாம் வேண்டுதல் செய்வது எவ்வளவோ அவசியம் என்று சொல்லிக் கொண்டார்கள்.

இதற்குள்ளாக பிரயாணிகள் தாங்கள் பயணப்பட ஆசைப்பட்டார்கள். இடையரும் அப்படியே செய்யுங்கள் என்று ஆலோசனை சொன்னார்கள். அந்தப்படியே அவர்கள் எல்லாரும் ஏகமாய் கூடி அந்த மலைகளின் கடைசி மட்டும் வந்தார்கள். அப்புறம் இடையர் : நாம் உச்சித பட்டணத்தின் அலங்கார வாசலை இவர்களுக்கு இங்கிருந்து காட்டுவோம், இவர்கள் அதை நமது தூரதிருஷ்டிக் **கண்ணாடியினால்** கண்டுகொள்ளுகிறார்களா பார்ப்போம் என்று பேசிக் கொண்டார்கள். (கண்ணாடி, இது வேதாகமத்தைக் குறிக்கிறது. விசுவாசம் என்னும் கைகளால் அதை ஏந்திக் கொண்டு ஆத்துமாவின் கண்கள் வழியாக பார்க்க வேண்டியது. ஆனால், அவிசுவாசத்திற்கு ஏதுவான திகைப்பும் பயமும் கைகளை ஆடும்படியாகச் செய்து கண்களை மங்கலாக்குகின்றன.) உச்சிதப்பட்டணத்தின் அலங்கார வாசலை பார்க்க வேண்டும் என்பது பிரயாணிகளுக்கு மிகுந்த சந்தோசமான செய்தியாய் இருந்தபடியால், அவர்களும் அதைக்காட்டும்படியாக இடையரிடம் விரும்பிக் கேட்டார்கள். அதற்காக அவர்களை ஒரு உயர்ந்த மலைச்சிகரத்தின் மேல் கூட்டிக்கொண்டு போனார்கள். அதற்கு **தெளிவுசிகரம்** என்று பேர். அங்கே போய் ஒரு கண்ணாடியைக் கொடுத்து இதன் வழியாய்ப் பாருங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அதை வாங்கி அப்படியே நோக்கி நோக்கிப் பார்த்தார்கள். என்றாலும் சற்றுமுன் இடையர் அவர்களுக்குக்காட்டின பயங்கரக்காட்சி அப்போதும் அவர்கள் மனதை வாதித்தபடியினாலே கை ஆடினதால், திடமாய் கண்ணாடியைப் பிடித்து அதன் வழியாக அவர்களால் பார்க்க கூடாமற் போயிற்று. எப்படியும் அவர்கள் அந்த வாசலையும் அங்குள்ள சில மகத்துவங்களையும் கண்டதாக உணர்ந்துகொண்டு,

அந்தரங்கமானதை
அறிவித்தார் மேய்ப்பர்
மற்றவர்களுக்கதை
மறைவாக வைத்தார்
ஆழ்ந்து மறைந்ததான
அந்தரங்க மேதோ

ஆனந்த மலையதிபர்
தெளிவிப்பார் நீ போ

என்று பாடிக் கொண்டு பயணம் போனார்கள்.

அவர்கள் புறப்பட்ட சமயத்தில், மேய்ப்பரில் ஒருவன் இனி அவர்கள் நடக்கப் போகும் பாதையைக் குறித்துப் பல விஷயங்களையும் எழுதிய ஒரு சீட்டைக் கொடுத்தான். வேறொருவன் முகஸ்துதிக்கு இடங்கொடுக்கக் கூடாது என்று எச்சரித்தான். இன்னொருவன் மயக்கபூமியில் சுகம் என்று தூங்கிவிடல் ஆகாது என்று சொன்னான். பின்னொருவன், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக என்று வாழ்த்தி வழியனுப்பினான். உடனே நான் என் சொப்பனத்திலிருந்து கண் விழித்தேன்.

அறிவீனனை சந்தித்தல்.

மறுபடியும் நான் நித்திரை செய்து திரும்பவும் சொப்பனம் கண்டேன். நான் முன்னே கண்ட பிரயாணிகள் இருவரும் ஆனந்தமலைத் தொடர்களைக் கடந்து, உச்சிதப்பட்டணத்துக்குப் போகும் ராஜபாதையாய் நடந்து போனார்கள். அந்த மலை அடிவாரத்தில் ராஜபாதைக்கு இடது பக்கமாக ஏமாப்பு தேசம் என்னப்பட்ட ஒரு ராஜ்யம் இருக்கிறது. அங்கிருந்து ராஜபாதையில் வந்து சேர்ந்த ஒரு கோணலான வழி இருந்தது. அந்த இடத்தில் அவர்கள் ஒரு துடுக்குள்ள வாலிபனைச் சந்தித்தார்கள். அவனுக்கு **அறிவீனன்** என்று பேர். (அறிவீனன் என்பது, தங்களுடைய நற்கிரியைகளின் மூலமாய் இரட்சிக்கப்படலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற அறிவீனரைக் குறிக்கிறது)

கிறி :- கிறிஸ்தியான் அவனைச் சந்தித்தவுடனே, தம்பி! எவ்விடம் இருந்து, எவ்விடம் போகிறாய்? என்று கேட்டான்.

அறிவீனன் :- ஐயா! நான் இதோ இடதுபக்கத்தில் இருக்கிறதே, அந்த தேசத்தில் பிறந்து வளர்ந்தேன். இப்பொழுது மோட்ச பட்டணத்துக்கு பயணம் போகிறேன்.

கிறி :- மோட்ச பட்டணத்து வாசலுக்குள் நீ எப்படி பிரவேசிப்பாய்? அங்கே போன பின் உனக்கு சங்கடங்கள் நேரிட்டாலோ?

அறிவீ:- மற்ற நல்லவர்கள் புகுவது போல நானும் புகுந்து கொள்வேன்.

கிறி :- வாசலைத் திறந்து உன்னை உள்ளே சேர்த்துக் கொள்ளும்படியாக, நீ காண்பிக்கக் கூடிய தஸ்தாவேஜுகள் ஏதாவது உண்டா?

அறிவீ :- தஸ்தாவேஜு எனக்கு என்னத்துக்கு? என் ஆண்டவருடைய சித்தம் இன்னதென்று நான் அறிவேன். அவனவனுக்கு செலுத்தவேண்டியதை செலுத்திவிடுகிறேன். நான் ஜெபம் பண்ணுகிறேன், தபம் பண்ணுகிறேன், தசமபாக தானம் பண்ணுகிறேன். என் தர்மசகாயங்களுக்கு ஒரு குறைவுண்டோ? இப்போதும் என் ஜென்ம தேசத்தை மறந்து மோட்சலோக யாத்திரை செய்கிறேன். இப்படி இவைகள் எல்லாம் இருக்க தஸ்தாவேஜு எனக்கு என்னத்துக்கு?

கிறி :- ஆனால், நீ ராஜபாதையின் ஆரம்பத்தில் இருக்கிற திட்டிவாசல் வழியாய் வரவில்லையே, இதோ இந்த குறுக்குப் பாதையாய் அல்லவா வந்தாய். ஆகையினாலே நீ உன்னைப் பற்றி எப்படி எண்ணிக் கொண்டாலும் சரி, எனக்கு அச்சம் அச்சம் தான். கணக்கு ஒப்புவிக்க வேண்டிய கடைசி நாள் வரும்போது, மோட்ச பட்டணத்தில் நீ சேர இடங்கிடையாமல், திருடனும் கொள்ளைக்காரனுமாய் இருக்கிறாய் என்று உன் பேரில் குற்றஞ்சாட்டப்படும்.

அறிவீ :- துரைகளே! நீங்கள் எனக்கு முற்றிலும் அந்நியர், உங்களை நான் அறிய மாட்டேன். நீங்கள் உங்கள் நாட்டு மார்க்கத்தை அநுசரித்து நடவுங்கள், நான் என் நாட்டு மார்க்கத்தின் படி நடக்கிறேன். எல்லாம் நன்றாய் முடியும் என்று நம்புகிறேன். நீங்கள் ஒரு வாசலைப் பற்றி சொல்லுகிறீர்களே, அது எங்கள் நாட்டுக்கு அதிக தூரத்தில் இருக்கிறது என்பது உலகத்துக்கே தெரிந்த விசயம். எங்கள் நாட்டான் ஒருவனுக்கும் அதற்குப் போகும் பாதை தெரியவே தெரியாது என்று எண்ணுகிறேன். அது தெரிந்திருந்தாலும் சரி, தெரியாதிருந்தாலும் சரி, அதைப்பற்றி அக்கறை இல்லை. எங்கள் நாட்டில் இருந்து மோட்சலோகப் பாதையில் வந்து சேரும்படி, நீங்கள் பார்க்கிறதுபோல நேர்த்தியான ஒரு வழி, பசும்புல் மைதான வழியாக இருக்கிறதே அதுவே போதுமானது என்றான்.

கிறி :- அவன் தன் சுயபெருமைக்கேற்ற புத்திமான் போல் விளங்கினதைக் கிறிஸ்தியான் அறிந்துகொண்டு, தன் தோழனாகிய

திடநம்பிக்கையண்டை போய் மெதுவாக, "இவனைப் பார்க்கிலும் மூடனைக் குறித்து அதிக நம்பிக்கையாய் இருக்கலாம்" (நீதி 26 : 12) என்று காதுக்குள் கூறி விட்டு பின்னும் சொல்லுகின்றான் : "மூடன் வழியிலே நடக்கும்போதும் மதிகெட்டவனாக இருக்கிறான், தான் மூடன் என்று அவன் எல்லாருக்கும் சொல்லுகிறான்" உம்முடைய யோசனை என்ன? அவனோடு இன்னும் பேச்சுக் கொடுக்கலாமா? அல்லது தற்சமயத்துக்கு நாம் எட்டி நடந்து, இம்மட்டும் அவன் நம்மிடத்தில் கேட்ட போதனைகளை உணரும்படி விட்டுவிட்டு, மறுபடியும் நின்று அவனுடன் பேசி, படிப்படியாக அவனுக்கு நன்மை செய்யக் கூடுமா என்று பிரயத்தனம் செய்யலாமா? என்று கேட்டான். அதற்கு திடநம்பிக்கை :

அறிவீனன் கேட்டதை
ஆய்ந்தோய்ந்து பார்க்கட்டும்,
நல்லாலோசனைகளை
அல்லத்தட்டிவிட்டால்
மா மேலான லாபத்தை
காணாமலே போவான்,
மூடர் அனைவரையும்
ஏகன் படைத்தாலும்
மூடர் ஒருவரையும்
ரட்சியோம் என்கிறார்

என்று கவிபோல் சொல்லி, பின்னும் சொல்லுகின்றான்: எனக்குத் தோன்றுகிறபடி அவனுக்கு எல்லாவற்றையும் ஒரேமட்டமாய்ச் சொல்லிவிடுகிறது நல்லதல்ல, இவனைவிட்டுவிட்டு நாம் முந்திப்போய் விடுவோம். இவனுடைய தீராணிக்குத்தக்க அப்பால் கொஞ்சம் கொஞ்சமாய் இவனுக்குச் சொல்லலாம் என்றான்.

அப்படியே அவர்கள் இருவரும் முந்தினார்கள். அறிவீனன் தன் மட்டில் பிந்தி நடந்து போனான். அவர்கள் அவனைவிட்டுப் பிரிந்து சற்று தூரம் போகவே, பக்கத்தில் இருந்த இருட்டான ஒரு சந்துக்குள் சேர்ந்தார்கள். அங்கே ஒரு மனுஷனை ஏழு பிசாசுகள் கூடி, பலமான ஏழு கயிறுகளால் கட்டி இழுத்து, ஒரு பள்ளத்தாக்கின் சரிவில் முன்கண்ட வாசலுக்கு நேராய் கொண்டு போகிறதைப் பார்த்தார்கள். (மத் 12 : 45). பார்த்த உடனே கிறிஸ்தியான் பயந்து கிடுகிடுவென்று ஆடிவிட்டான். திடநம்பிக்கையும் திடுக்கிட்டுப்போனான். ஆனாலும் பிசாசுகள்

இழுத்துக் கொண்டு போகிறபோதே, இவன் பாதித்திய பட்டணத்தில் குடியிருந்த **மறுதலிப்பு** என்கிறவனாய் இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டு இவனை நான் அறிவேனோ என்று கிறிஸ்தியான் கூர்மையாய் கவனித்தான். என்றாலும் கையும் மெய்யுமாய் கண்டுபிடிக்கப்பட்ட திருடனைப்போல், தலை கவிழ்ந்துகொண்டு போனதால் கிறிஸ்தியான் அவனை இன்னான் என்று இனங்கண்டு பிடித்துக் கொள்ளவில்லை. அவன் சற்று தூரம் கடந்த பிற்பாடு திடநம்பிக்கை திரும்பிப்பார்க்கவே, அவனுடைய முதுகின் மேல்

வீண் மதவெறி கொண்டவன்
பாழ் நரகப்படுதோஷி

என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டான்! (மறுதலிப்பு : இது துன்பத்தில் கிறிஸ்து மார்க்கத்தை மறுதலித்துவிட்ட ஒரு பேர் கிறிஸ்தவனைக் குறிக்கிறது.)



"கைகளில் உளியையும், சுத்தியையும் வைத்து ஒரு பளபளப்பான பளிங்குக் கல்லை மிகவும் கடினமான முயற்சியுடன் ஒரு சிலையாக உருவாக்கிக் கொண்டிருந்த ஓர் சிற்பியின் செயலை ஒரு பிரசங்கி ஒரு சமயம் ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். "ஆ, நானும்கூடக் கடினமான இருதயங்களை உங்களைப் போன்று வெட்டித் திருத்தி உருவாக்க இனிமேல் ஆசிக்கின்றேன்" என்று சிற்பியைப் பார்த்து பிரசங்கி கூறினார். "நீங்களும் அவ்வாறே செய்யலாம்" என்று சிற்பி கூறினார். "எனைப் போன்று உங்கள் முழங்கால்களில் நின்று அவ்வாறு செய்வீர்களானால் உங்கள் காரியம் சித்தியாகும்" என்று அச்சிற்பி தொடர்ந்து சொன்னான்.

அக்கினி கடவுளின் புதல்வன் ஆண்டவர் இயேசுவை இதய இரட்சகராக ஏற்றுக் கொண்ட வரலாறு

ஒரு பார்சி குல மனிதரின் அனுபவ சாட்சி

ஆண்டவராகிய இயேசு இரட்சகரை தனது இதய நாயகராக ஏற்று அவரைப்பின்பற்ற தான் திட்டமாக தீர்மானித்த விபரம் குறித்து தரியூ கண்டாலவாலா என்ற பார்சி குலத்தை சேர்ந்த ஒரு ஐசுவரியமுள்ள மனிதர் தனது அனுபவ சாட்சியை நம்முடன் பகிர்ந்து கொள்ளுகின்றார்.

நான் அந்த இடத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்தபோது கண்ணீர் எனது கண்களிலிருந்து பெருக்கெடுத்தோடி என் கன்னங்களின் வழியாக உருண்டோடிற்று. கிட்டத்தட்ட ஒரு முழுமையான மணி நேரம் நான் அங்கு அழுது கொண்டிருந்தேன். எனினும், நான் எதற்காக அழுது கொண்டிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியாது.

பெண்கள் தான் பொதுவாக அழுவார்கள் என்ற தத்துவத்தை நான் உறுதியாக நம்பி அதை அடித்துக்கூறி வந்தவன் நான். ஆண்கள் அழவே மாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை. எனது தகப்பனாரின் மரணம், சவ ஊர்வலத்தின்போது கூட நான் அழவில்லை. ஆனால் இங்கு 3000 ஜனங்களுக்கும் அதிகமாக கூடியுள்ள கூட்டத்தின் மத்தியில் நான் அழுது கொண்டிருக்கின்றேன்.

நான் ஒரு கர்வம் மிகுந்த தற்பெருமைக்காரன். எனது குலத்தைக் குறித்து நான் மிகவும் பெருமை கொண்டிருந்தேன். வாழ்வின் எல்லா சுகபோகங்களும் எனக்கு திரளாயிருந்தது. எனது தகப்பனார் மிகவும் செல்வந்தனாக இருந்தார். எனது நண்பர்களோடு பட்டணத்தை சுற்றி இன்ப உலா வர வசதியாக எனது 18 ஆம் வயதில் சொந்த கார் வைத்திருந்தேன். எப்பொழுதும் மிகவும் நலமானவைகளையும், உத்தமமானவைகளையும் நம்பும் பார்சி குலத்தை நான் சேர்ந்தவன்.

ஆனால், இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது? தரியூ, உனது பெலன் எல்லாம் எங்கே சென்றது? யாரோ ஒருவர் இப்படி என்னை அந்த இடத்தில் கேட்பது போல எனக்கு தெரிந்தது. நான் கண்ணீர் சிந்தி அழுவதை யாராகிலும் பார்த்துவிடுவார்களோ என்று நான் எனக்குள்ளாக எண்ணி சஞ்சலமும் பயமும் அடைந்தேன்.

"CAMPUS CRUSADE FOR CHRIST" என்ற கிறிஸ்தவ ஸ்தாபனத்தினர் பம்பாய் நகரிலுள்ள ஆடம்பர பட்டணமான பாந்திராவில் அந்த 15 நாட்கள் சுவிசேஷ கூட்டங்களை 1978ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தின் ஈஸ்ட்டர் தினங்களில் ஒழுங்கு செய்திருந்தனர். பில் லோரி என்ற ஒரு சுவிசேஷகர் அந்தக் கூட்டங்களில் தேவனுடைய செய்திகளைக் கொடுத்து வந்தார். பம்பாய் நகரில் கத்தோலிக்கர்களின் தலைமை குருவானவர் கார்டினல் கிரேசியஸ் மேற்கண்ட கூட்டங்களில் பம்பாய் கத்தோலிக்கர்கள் ஒருவரும் கலந்துகொள்ளக் கூடாது என்ற ஒரு கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்திருந்தார். காரணம், இந்தக் கூட்டங்களையும், கூட்டங்களில் பாடும் பாடற்குழுவினர்களைக் குறித்தும் நிறைய கருத்து வேறுபாடும் ஒரு புறம் இருக்கத்தான் செய்தது.

பாந்திரா பட்டணத்திலுள்ள கூட்டத்தின் மேடைக்கு சுவிசேஷ குழுவினர் 3 டிரக் வண்டிகளில் வந்து இறங்கினர். பற்பல தேசங்களைச் சேர்ந்த 50 அங்கத்தினர்கள் அந்த குழுவில் இடம் பெற்றிருந்தனர். குழுவினர் வந்து இறங்கியதும் ஜனக்கூட்டம் பெருகத் தொடங்கியது.

நான் கூட்டத்தில் கலந்து கொண்ட அன்று நான்கு பேர்கள் தங்கள் வாழ்வின் அனுபவ சாட்சிகளை பகிர்ந்து கொண்டனர். அவர்களில் முன்னாள் உலக அழகிகளில் ஒருவரும் இடம் பெற்றிருந்தார்கள். அவளது படம் ஒரு பிரசித்திப் பெற்ற பத்திரிக்கையின் முகப்பு அட்டையை அலங்கரித்து சில சமயத்திற்கு முன்பு வெளி வந்தது எனக்குத் தெரியும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை 7 வருடங்களுக்கு முன்பாக அந்த அழகி எவ்விதமாக சந்தித்தேன் என்பதையும் அந்த ஆண்டவர் தனது வாழ்வை எவ்விதமாக முற்றிலுமாக மாற்றி அமைத்தார் என்பதைக் குறித்தும் அவள் கூட்டத்தினருக்கு தனது அனுபவத்தை விளக்கிக் கூறினாள்.

தங்களுடைய அனுபவ சாட்சிகளை மக்களுக்கு முன்பாக மேடையில் நின்று பகிர்ந்து கொண்டவர்கள் அனைவரும் அதிகமாக

கற்றுத் தேர்ந்த மேதாவிகளும் மேலைநாட்டின் செல்வந்தர்களாகவும் இருந்தனர். இளவயதினரான அவர்கள் எல்லாரும் இப்பொழுது முற்றுமாக மாற்றமடைந்த புது ஜீவிகளாக காணப்பட்டனர். தங்களுடைய வாழ்க்கையின் அற்புதமான புரட்சிகர மாற்றத்திற்கு ஒரே காரணம் தாங்கள் எல்லாரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்களுடைய வாழ்க்கையினுள் வரும்படியாக உருக்கமான மனதோடு அழைத்ததுதான் என்பதை அவர்கள் திட்டமும் தெளிவுமாக எடுத்துக் கூறினார்கள்.

பிரமிக்கத் தக்கதான ஆனந்த சந்தோசமும், பொங்கி வழியும் தேவ சமாதானமும் அந்த மக்களின் முகங்களில் ஜொலிப்பதை நான் எனது கண்களால் கண்டேன். அவர்களின் வாயில் இருந்து புறப்பட்ட வார்த்தைகள் கிருபை நிறைந்தவைகளாக இருந்தன. அவர்கள் எல்லாரும் மேலை நாடுகளில் இருந்து வந்தவர்களாயினும் மிகவும் எளிமையும், தாழ்மையும் உள்ளவர்களாக காணப்பட்டதுடன் அவர்களின் ஆடைகளும் கூட சாதாரணமானவைகளாகத்தான் இருந்தன.

அந்த மக்கள் தங்கள் வாழ்வில் பெற்று அனுபவிக்கின்ற சந்தோசமும், சமாதானமும் எனக்கு இல்லை என்பதை நான் துக்கத்துடன் கண்டுணர்ந்தேன். மனிதனின் பாவம் மாத்திரமேதான் அவனது மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் அவனிலிருந்து கொள்ளையாடிக் கொண்டு போய்விட்டது என்பதை அந்த மக்கள் திட்டமாக சுட்டிக்காட்டி பேசினார்கள். தேவனுக்கும் தனக்கும் உள்ள நெருக்கமான அந்நியோன்ய ஆனந்த உறவை மனிதன் தனது பாவத்தின் நிமித்தமாக இழந்துவிட்டான் என்ற காரியத்தை அந்த மக்கள் கூட்டத்தினருக்கு தெளிவாக எடுத்துக் கூறினார்கள். இழந்து போன அந்த பரலோக உறவை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக மீண்டும் தேவனோடு ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் அந்த தேவ மக்கள் விளக்கிக் கூறினார்கள். ஒருவர் பின் ஒருவராக அவர்கள் பகிர்ந்து கொண்ட அனுபவ சாட்சிகளை எல்லாம் நான் கருத்தோடு கவனித்தேன். அதைக் கவனித்துக் கொண்டிருந்த போது தேவன் என்னோடு பேசுவதை உணர்ந்தேன். இயேசு இரட்சரைக் குறித்து நான் அதிகமாக அறிந்து கொள்ள ஆசைப்பட்டேன்.

இதற்கிடையில் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட பில் லோரி சுவிசேஷகர், கத்தோலிக்கர்களின் தலைமை குருவானவர் கார்டினல்

கிரேசியஸ் என்பவரை சந்தித்து தனது கூட்டங்களின் மேலான தேவ நோக்கத்தை அவருக்கு விளக்கிக்கூறி அவரை சாந்தப்படுத்தினார். அவரும் மனமகிழ்ச்சியடைந்து தனது கத்தோலிக்கர்கள் யாவரும் பில்லோரி கூட்டங்களில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவிக்கவே திரளான கத்தோலிக்கர்களும் அந்த கூட்டங்களில் கலந்து கொண்டதால் பம்பாயில் நடைபெற்ற பெரும் கிறிஸ்தவ கூட்டங்களில் ஒன்றாக அது காணப்பட்டது.

கூட்டத்தில் பிரசிங்கிக்கப்பட்ட பிரசங்கத்தையும், அங்கு பகிர்ந்து கொள்ளப்பட்ட அனுபவ சாட்சிகளையும் நான் தொடர்ந்து கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை குறித்து பேசியவர்கள் அவர் திரும்பவும் உயிர்த்தெழுந்ததையும் அவர் இன்றும் ஜீவித்துக் கொண்டிருப்பதையும் ஆணித்தரமாக அடித்துக் கூறினார்கள். அத்துடன் அவர்கள் நின்றுவிடவில்லை. அந்த கிறிஸ்து இரட்சகரை தங்களது தனிப்பட்ட வாழ்வில் சுவைத்து, ருசித்து, அனுபவித்து, ஆனந்தித்து வருவதையும் மகிழ் கெம்பீரமாக சொன்னார்கள். அந்த மக்கள் பகிர்ந்து கொண்ட அநேக காரியங்களை என்னால் புரிந்து கொள்ள முடியாது போயினும் ஒரே ஒரு காரியத்தை நான் எனக்குள் நிச்சயித்துக் கொள்ள முடிந்தது. அதாவது நான் ஒரு பாவி என்றும் இயேசு இரட்சகரோடு எனது ஐக்கியத்தை சீராக்கிக் கொள்ளுதல் அத்தியந்த பிரதானமான கடமை என்பதையும் நான் அங்கு முழு நிச்சயமாக கண்டுணர்ந்து கொண்டேன்.

நான் அந்தக் கூட்டத்தில் அழுது கொண்டிருந்தபோது என்னைச் சுற்றி நான் கவனித்தபோது இன்னும் பலரும் தங்கள் கண்களில் கண்ணீருடன் இருப்பதை என்னால் பார்க்க முடிந்தது. ஒரு திரை அரங்கின் திரையில் காட்சிகளை நான் காண்பது போல எனது கடந்த கால பாவ வாழ்வின் காட்சிகளை எனது மனத்திரையில் நான் காணத் தொடங்கினேன். எனது கல்லூரி வாழ்வுக்கு பின்னர் நான் வாணிப கப்பலில் சேர்ந்து உலகத்தின் நாடுகளை சுற்றி வந்து மண்ணின் வாழ்க்கையை நன்கு அனுபவித்தேன். எனது மனம்போல வாழ்ந்தேன். எனது வாழ்வில் எல்லா பாவங்களும் இடம்பெற்றிருந்தன. போதை மருந்துகளுக்குக்கூட நான் இடம் கொடுத்திருந்தேன். எனினும், கடவுள் எனது பாவங்கள், அக்கிரமங்களுக்குத்தக்கதாக சரிக்கட்டி என்னை அழித்துப் போடாமல் இதுவரை என்னை பத்திரமாக பாதுகாத்து

வழிநடத்திக்கொண்டு வந்திருந்ததையும் இன்று நான் அவரை எனது இரட்சகராக சந்திக்கவும் தக்கதான ஒரு பாக்கிய நிலைமைக்கு அவர் என்னை அழைத்துக் கொண்டு வந்திருப்பதையும் நினைத்து உள்ளம் கசிந்தேன். டூமெக்ஸ் என்ற கம்பெனியில் நான் சேர்ந்தபோது எனது மனைவி உருசிலாவை கண்டுபிடித்தேன். அவளும் இப்பொழுது என்னோடு கூட இந்த கூட்டத்திற்கு வந்திருந்தாள்.

கூட்டத்தின் முடிவில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு நான் நெருங்கிய ஐக்கிய சவகாசம் வைத்துக் கொள்ளத் தீர்மானித்தேன். அதற்கப்பால் நான் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தேன். இதற்கிடையில் தேவ அன்பால் எனக்கு சில நல்ல அருமையான ஆவிக்குரிய கிறிஸ்தவ புத்தகங்களும் படிப்பதற்கு கிடைத்தன. அப்படி நான் வாங்கிப்படித்த முதலாவது புத்தகம் **"உனது பொக்கிஷம் எங்கே உள்ளது?"** என்ற புத்தகமாகும். அதின் ஆக்கியோன் உங்களில் பலருக்கும் தெரிந்த பெயரான "வில்லியம் மாக்டானல்ட்" என்பதாகும். அந்த புத்தகத்தின் மூலமாக தேவன் என்னோடு "உனது பொக்கிஷம் பூமியிலா அல்லது பரலோகத்திலா எங்கே இருக்கின்றது?" என்று சவால் கொடுத்து பேசினார். இறுதியாக நான் என் அன்பின் ஆண்டவரிடம் "ஆண்டவரே, இதோ உமது அடிமை, நீரே என் கர்த்தாவும் இரட்சகருமாக இருக்க விரும்புகின்றேன்" என்று கூறினேன். எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து இந்த வார்த்தைகள் புறப்பட்ட மாத்திரத்தில் எல்லா புத்திக்கும் மேலான பரலோக தேவ சமாதானம் எனது இருதயத்தை நிரப்பிவிட்டது.

நான் ஆண்டவர் இயேசுவின் சீடனாகிவிட்டேன் என்ற செய்தியை பார்சி குலத்தை சேர்ந்தவரான எனது தகப்பனார் கேள்விப்பட்டதும் அழுது, அங்கலாய்த்து மார்பிலே அடித்து புலம்பவில்லை. காரணம், எனது தந்தை ஒரு ஞானமுள்ள திறந்த உள்ளம் படைத்த மனிதர். பொதுவாக, பார்சி வகுப்பை சேர்ந்தவர்கள் இந்தவிதமான வெகு பொறுமைசாலிகளாகவே இருப்பார்கள்.

நான் கர்த்தர் இயேசுவுக்குள் மறுபடியும் பிறந்ததின் பின்னர் அவரில் வளர்ந்து வருவது என்பது எனக்கு ஒரு கடுமையான சவாலாக இருந்தது. எனினும், தேவனுடைய பரிசுத்த வேதாகமம் எனக்கு வழிகாட்டியும், தோழனுமாக அமைந்தது. பின் நாட்களில் எனது மனைவியும் ஆண்டவர் இயேசுவின் அடிமையானாள்.

சில ஆண்டுகளுக்கு பின்னர் நான் இந்தியாவைவிட்டு ஓமன் நாட்டிற்குச் சென்று அங்கு 16 ஆண்டுகள் வேலை செய்தேன். அங்கிருக்கும்போது நான் ஞானஸ்தானத்தின் மூலமாக தேவன் மேல் உள்ள எனது விசுவாசத்தை வெளிப்படுத்தினேன்.

ஆண்டவர் இயேசு இல்லாமல் நான் வாழ்ந்த 48 ஆண்டு கால உலக வாழ்க்கையுடன் அருமை இரட்சகரை எனது இதய நாயகராக ஏற்று அவரது பரலோக அன்பில் மகிழ்ந்து களிகூர்ந்து வாழ்ந்து வரும் எனது 22 ஆண்டு கால வாழ்வை நான் ஒப்பிட்டுப் பார்க்கின்றேன். ஆ, எத்தனை பெரிய ஆச்சரிய, ஆனந்த மாறுதல் நிகழ்ந்துள்ளது! ஒரு மெய் கிறிஸ்தவனாக இந்த உலகத்தில் வாழ்வது என்பது மிகவும் கஷ்டமான ஒரு காரியமாகும். மெய்யாகவே, தினமும் சிலுவை சுமக்கும் ஒரு அனுபவம் அது. சுயத்தை சிலுவையில் அறைந்து கொல்லும் வாழ்க்கை அது. சுயத்தை சிலுவையில் அறைவது என்பது மிகவும் வேதனையான கண்ணீரின் அனுபவமாகும். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சந்தோசம், சமாதானம், பேரானந்தமான ஒரு வாழ்க்கை மாத்திரமல்ல, அது தன்னையே மற்றவர்களுக்காக கொடுத்துவிடும் ஒரு வாழ்க்கையுமாகும். அதின் அலங்காரம் என்னவென்றால், தேவன் எனக்கு கொடுத்ததை நான் மற்றவர்களுக்கு கொடுக்கின்றேன். எனது வாழ்க்கை என் ஆண்டவருக்கு சொந்தமானது. அப்படியிருக்க, நான் செய்யும் எந்த ஒரு தியாக அர்ப்பணிப்பும் அத்தனை பெரியதாகிவிட முடியாது.

இதுதான் விசுவாச வாழ்க்கை. ஆண்டவர் இயேசுவின் சீடனாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பரவசமான அனுபவம் இது. அதற்காக எனக்கு பாடுகள், போராட்டங்கள், பிரச்சனைகள் இல்லை என்று நான் இங்கே கூற வரவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக எனது பிரச்சினைகள், துயரங்சள் யாவுக்கும் பரிகாரமும், விடையும் உள்ளது. நிச்சயமற்ற கலக்கமான உலக வாழ்வின் மத்தியிலும் எனக்கு ஆனந்தமான நம்பிக்கை, முழுமையான பாதுகாவல், பூரண திருப்தி, நிறைவான தேவ சமாதானம் எனக்கு உண்டு. இந்த பரவசமான வாழ்க்கை எக்காள தொனி கேட்கும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும். இந்த ஆச்சரியமான பரலோக மாற்றங்களை எனது வாழ்வில் நிகழ்த்தியவர் என் இயேசு ஆவார். அவருடைய இரக்க கிருபைகளுக்காக நான் அவருக்கு நன்றி ஏறெடுக்கின்றேன்.

22 வருடங்களுக்கு முன்பாக நான் எனது பாவத்தின் பாரத்தின் காரணமாக கண்ணீர் சிந்தி கதறி அழுதேன். ஆண்டவரின் குறிக்கப்பட்ட வேளை வரும்போது நான் இந்த எனது தேகத்தை விட்டுப் பிரிந்து என் ஆண்டவர் இயேசு இரட்சகரோடு பரலோகில் என்றுமுள்ள சதாகாலங்களிலும் வாழ்வதற்காக பாடிப் பறந்து செல்லுவேன் என்பதை எண்ணி இன்று நான் ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றேன். ஆம், அந்த அன்பரின் மோட்ச வீட்டின் அழைப்பின் குரலை ஆசை ஆவலாக தினமும் எதிர்நோக்கி பூரிப்போடு காத்துக் கொண்டிருக்கின்றேன்.

தரியூ கண்டாலவாலா பின்பற்றிய பார்சி மார்க்கம் குறித்து சில வரிகள்.

பார்சி மார்க்கத்தை ஷோரஸ்ட்டர் என்பவர் தோற்றுவித்தார். அவர் பெர்சியா தேசத்தில் பிறந்தவர். பார்சி மக்கள் இப்பொழுது இந்தியாவில் 1 இலட்சம் பேர் இருக்கின்றனர். இந்திய சமுதாயத்துக்கு பார்சி மக்கள் பெரும் பொக்கிஷம் போன்றவர்கள் என்றே சொல்ல வேண்டும். அரசியல், விஞ்ஞானம், சட்டம் போன்ற துறைகளிலும் விசேஷமாக ஈகையிலும் பார்சி மக்கள் சிறந்து விளங்குகின்றனர். அவர்கள் பெரும் கொடையாளிகள்.

பார்சிகள் தங்களில் இறந்தவர்களை புதைப்பதோ அல்லது சுடுவதோ கிடையாது. அதற்கு மாறாக இறந்தவர்களின் சடலங்களை மாமிசம் உண்ணும் பருந்துகள், கழுகுகள் போன்றவைகளுக்கு இரையாகும்படி "அமைதி கோபுரம்" என்ற இடத்தில் அப்படியே வைத்துவிடுவார்கள். இவ்விதமாக பார்சிகள் தங்கள் மரணத்திலும் தங்கள் ஈகை, கொடைத் தன்மையை நிலைநாட்டி நிற்கின்றனர்.

பார்சிகள் சிருஷ்டி கர்த்தாவாகிய ஒரு கடவுளை நம்புகின்றனர். மீட்பு அல்லது இரட்சிப்பை மனிதன் தனது பிரயாசத்தால் பெற்றுக் கொள்ள இயலாது. அது முற்றுமாக கடவுளின் இரக்க புண்ணியத்தால்

கிடைக்கக் கூடிய ஒன்று என்று நம்புகின்றார்கள். மோட்சம், நரகம் என்ற இரு நிலைகள் இருப்பதையும் அவர்கள் விசுவாசிக்கின்றனர். ஆனால், அவைகள் உலகத்திலேயேதானே இருப்பதாகவும் கூறுகின்றனர்.

பார்சிகள் நெருப்புக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றனர். பார்சிகளின் வேதம் நெருப்பை "கடவுளின் குமாரன்" என்று அழைக்கின்றது. கண்களால் காண முடியாத கடவுளுடைய உருவத்தை அக்கினி என்ற உருவத்தில் காண்பதாக அவர்கள் கருதுகின்றனர். பார்சிகளின் தொழுகை ஸ்தலங்கள் "அக்கினி கோவில்கள்" என்றே அழைக்கப்படுகின்றன. அந்த அக்கினி கோவிலின் மையப்பகுதியில் ஒரு பெரிய இரும்பு அடுப்பு இரவும், பகலும், காலாகாலங்களாக எரிந்து கொண்டே இருக்கின்றது. விறகு மற்றும் வாசனை திரவியங்கள் அந்த அடுப்பை இராப்பகலாக எரியப்பண்ணிக்கொண்டே இருக்கின்றது. எந்த ஒரு சூழ்நிலையிலும் அது அணைய அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நெருப்பானது அவர்கள் மதம் தோற்றுவிக்கப்பட்ட பெர்சியா என்று அழைக்கப்படும் ஈரானிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். அவர்களது அக்கினி கோவில்களில் எந்த ஒரு விக்கிரகங்களோ, உருவச்சிலைகளோ இருப்பதில்லை. பார்சி அல்லாத எந்த ஒரு மதத்தவரையும் அக்கினி கோவிலுக்குள் அவர்கள் ஒருக்காலும் அனுமதிப்பதில்லை.

பார்சிகள் தூதர்களுக்கு வணக்கம் தெரிவிக்கின்றனர். முக்கியமாக மனச்சாட்சி என்ற தூதனுக்கு பெரும் மரியாதை செலுத்துகின்றார்கள். பார்சிகள் இறந்து போன தங்கள் இனஜனபெந்துக்களின் ஆவிகளுக்கும் மரியாதை செலுத்துகின்றனர். தங்களுடைய புனித நாட்களான "முக்தாட்" என்ற நாட்களில் சூரிய உதயத்தின் போது அக்கினி கோவிலில் குடும்பமாக கூடி வந்து இறந்துபோன தங்கள் இனத்தவரின் ஆவிகளுக்கு வணக்கம் தெரிவித்து மரியாதை செலுத்துகின்றார்கள்.

பார்சிகள் "மீட்பு" அல்லது "மரணத்துக்கு பின்னர்" போன்ற காரியங்களுக்கு வெகு அபூர்வமாகவே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். "தூய்மையான எண்ணங்கள்" "தூய்மையான வார்த்தைகள்" "தூய்மையான செயல்கள்" போன்ற மூன்று வார்த்தைகளே அவர்களது மதத்தின் அடிப்படை கொள்கைகளாக உள்ளன. பார்சி மக்களின் வீடுகளிலுள்ள குளிர்பதன பெட்டிகளிலும் குடும்பத்தினரில் ஆண் மக்கள் போடும் சட்டைகளிலும் மேற்கண்ட மூன்று வார்த்தைகள் காணப்படுகின்றன.

வேதாகமத்தில் பார்சிகள்

இஸ்ரவேலுக்கு தயை பாராட்டிய பெர்சிய ராஜாக்களை (பார்சி ராஜாக்களை) குறித்து நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கின்றோம்.

பெர்சிய ராஜாக்களான கோரேஸ், தரியு போன்றவர்கள் தானியேலை பாபிலோன் தேசத்திலே மிகவும் உயர்ந்த ஸ்தானத்துக்கு உயர்த்தியவர்கள் ஆவார்கள். எஸ்தர் மற்றும் மொர்தெகாய்க்கு அனுசரணையாக இருந்து தனது நாடுகளிலுள்ள யூத மக்களை பூண்டோடு வேர் அறுத்து நிர்மூலமாக்க எண்ணிய கொடிய ஆமானுடைய சதித்திட்டத்திலிருந்து யூத ஜனத்தை கண்ணின் மணி போல காத்த பெருமை ஆகாஸ்வேரு என்ற பெர்சிய ராஜாவையே சாரும். அவர் 127 நாடுகளை அரசாட்சி செய்திருக்கின்றார். (எஸ்தர் 1 : 1)

சிறை பிடிக்கப்பட்ட யூத ஜனங்களை விடுவித்து அவர்கள் தங்கள் தேசத்திற்குச் சென்று இடிக்கப்பட்டு கிடந்த எருசலேம் தேவாலயத்தை திரும்பவும் எடுத்துக்கட்டி கர்த்தருக்கு ஆராதனை செய்ய அனுமதித்து ஆலயம் கட்ட தேவையான ஏராளமான மரங்கள் மற்றும் பொருட்களைக் கொடுத்து உதவி செய்ததுடன் அரசாங்கத்துக்கு வரி செலுத்துவதிலிருந்தும் அவர்களுக்கு விலக்கு அளித்த பெருமையும் கோரேஸ், தரியு, அர்தசஷ்டா என்ற மூன்று பெர்சிய ராஜாக்களையே சேரும்.

"என் மேய்ப்பன்" "நான் அபிஷேகம் பண்ணினவன்" (ஏசாயா 44 : 28, 45 : 1) என்று தேவன் பழைய ஏற்பாட்டில் ஒரு புறஜாதியானை அத்தனையாக மேன்மைப்படுத்தி, கனப்படுத்தி குறிப்பிடுகின்றார் என்றால் அது பெர்சிய ராஜாவாகிய கோரேசையன்றி வேறு யாருமில்லை.



என் ஆத்துமாவே, அமர்ந்திரு! கலங்கி அழாதே
எல்லாவற்றையும் காணும் கண்களுக்கு முன்பாக
உன் வெறுமையான பாழ் வனாந்தரத்தை விரித்து வை.
காத்திரு! நம்பிக்கை இழந்து போவதுபோல் தோன்றினும்
தேவன் வந்து உனக்காய் பரிதபித்து உன் வறண்ட பூமியை
ஒளி, ஜீவன், புதிய ஆகாயம் இவற்றால் நிரப்புவார்.

ஆ, சாத்தானாம் பிசாசு எத்தனை தந்திரசாலி பாருங்கள்!

கிறிஸ்தவ பத்திரிக்கைகளில் உலகச் செய்திகள்

அரசாங்கத்தின் தபால் சலுகைகள் பெறும் கிறிஸ்தவ பத்திரிக்கைகள் எல்லாம் இன்று தங்கள் பத்திரிக்கைகளில் கட்டாயம் உலகச் செய்திகள் எழுதி ஆகவேண்டும் என்ற ஒரு நிபந்தனையை தபால் துறை கொண்டு வந்துள்ளது. நாடு சுதந்திரம் பெற்று 53 ஆண்டு கால சுதந்திர இந்திய தேசத்தில் ஒருக்காலும் இல்லாதவிதத்தில் இப்பொழுது இந்த நூதனமான சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை ஏற்று தபால் துறையின் குறைந்த கட்டண முத்திரை சலுகை பெறுவதற்காக அரசாங்கத்தில் பதிவு செய்து கொண்ட கிறிஸ்தவ பத்திரிக்கைகள் பெரும்பாலானவைகள் தங்கள் பத்திரிக்கைகளில் இப்பொழுது உலகச் செய்திகள் எழுதி வருகின்றன. தரமான நல்ல ஆவிக்குரிய கிறிஸ்தவ பத்திரிக்கைகள் கூட உலகச் செய்திகள் எழுதி வருகின்றன.

ஒரு கிறிஸ்தவ பத்திரிக்கையில் உலகச் செய்திகள் எப்பொழுது வெளி வந்துவிட்டதோ அப்பொழுதே அதின் ஆவிக்குரிய கூர்மை முழுமையாக மழுங்கிப்போய்விடும். பத்திரிக்கையில் அச்சிடப்பட்ட ஆவிக்குரிய அருமையான செய்திகளை வாசித்து பரவசமடைந்த ஒரு தேவ பிள்ளை அதைத் தொடர்ந்து அங்கு காணப்படும் உலகச் செய்திகளை படிக்கும்போது அது வாசித்த ஆவிக்குரிய செய்திகள் இறக்கைகளை தங்களுக்கு உண்டுபண்ணிக்கொண்டு ஆகாய மார்க்கமாக பறந்து போய்விடும். தேவ செய்திகளும், உலக செய்திகளும் எப்படி ஒருமித்து வாழ முடியும்? ஒளிக்கும் இருளுக்கும் சம்பந்தம் ஏது?

கிறிஸ்தவ பத்திரிக்கைகளில் உலகச் செய்திகள்! அப்படியானால் நாம் அதை எப்படி கிறிஸ்தவ பத்திரிக்கையாக ஏற்றுக்கொள்ள இயலும்! ஆ, சாத்தானாம் பிசாசு எத்தனை தந்திரசாலி பாருங்கள், சாத்தானுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே (2 கொரி 2 : 11) என்று அப்போஸ்தலன் அருமையாக கோடிட்டுக் காட்டினார்.

கிறிஸ்தவ பத்திரிக்கைகள் தற்பொழுது கொஞ்சமாக உலகச் செய்திகள் தங்கள் பத்திரிக்கைகளின் கடைசி பக்கங்களில் எழுதி வருகின்றன. இனி வருங்காலத்தில் பாதிக்கு மேல் பக்கங்களில் அதாவது 51 % உலகச் செய்திகள் அது எழுதியே தீர வேண்டும் என்ற சட்டம் வரவே போகின்றது. தபால் துறை அதிகாரிகள் அதை இப்பொழுதே சில கிறிஸ்தவ பத்திரிக்கைகளுக்கு வலியுறுத்த தொடங்கியுள்ளனராம்.

முத்திரை அதிகம் ஒட்டினாலும் பரவாயில்லை, தங்கள் கிறிஸ்தவ பத்திரிக்கைகளில் உலகச் செய்திகள் எழுதப் போவதே இல்லை என்ற தேவ வைராக்கியத்தில் தங்களை காத்துக் கொண்ட சில கிறிஸ்தவ பத்திரிக்கைகள் உள்ளன. கர்த்தருக்கு துதி செலுத்துவோம்.

சாத்தானாம் பிசாசு தூரா சமபூமியில் நிறுத்தின மேற்கண்ட பொற்சிலையை தாழ விழுந்து வணங்காமல் தங்களை காத்து வரும் கிறிஸ்தவ பத்திரிக்கைகளை கர்த்தர் கடைசி வரை கைவிடாமல் காத்துக் கொள்ள நாம் ஜெபிப்பதுடன் தங்கள் கிறிஸ்தவ பத்திரிக்கைகளில் உலகச் செய்தி எழுதி வரும் பத்திரிக்கைகளும் இனி அவைகளை எழுதாமல் தங்களைக்காத்து அதின் காரணமாக கூடுதலான பணத்தேவைகள் எழுந்தாலும் தங்கள் ஆண்டவர் அதை சந்திக்க வல்லவர் என்ற அசைக்க முடியாத நம்பிக்கைக்குள் வந்து தங்கள் தேவனை கனம்பண்ண நாம் ஜெபிப்போமாக.

சகலவித சந்தோசங்களுக்கும், மனமகிழ்ச்சிகளுக்கும் உன்னைக் கொண்டு செல்லும் மிகச் சுலபமானதும், மிக நிச்சயமுமான பாதை இதுவேதான் :-

உனது வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு காரியத்துக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்தி அவரைத் துதிப்பதை ஒரு திட்டமான குறிக்கோளாக எப்பொழுதும் மனதில் வைத்துக்கொள். உனது வாழ்வைத் தாக்கும் எந்த ஒரு பெருந்துன்பத்திற்காகவும் கர்த்தருக்கு நன்றி கூறி அவரை ஸ்தோத்திரிக்கும்போது நீ அதினை மெய்யாகவே ஒரு ஆசீர்வாதமாக மாற்றி விடுகின்றாய்.

உங்கள் உருக்கமான ஜெபங்கள் தேவை

கர்த்தர் கிருபை கூர்ந்தால், இந்த இதழ் உங்கள் கரங்களில் வந்து கிடைக்கும் போது சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் தேவ ஊழியத்தின் பாதையில் நமது இந்திய தேசத்தின் வடகோடி எல்லையான இமயம் நோக்கி பயணப்பட்டு சென்று கொண்டிருப்போம்.

இந்த தேவ ஊழியத்தின் ஆசீர்வாதத்திற்காக கர்த்தருடைய பிள்ளைகளாகிய நீங்கள் அதிகமாக ஜெபித்து வந்திருக்கின்றீர்கள். நாங்களும் மிகுதியான போராட்ட ஜெபங்களோடும் மெய்யான ஆத்தும பாரத்தோடும் கர்த்தர் இயேசுவை முன்வைத்து கடந்து செல்லுகின்றோம்.

ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த தேவ ஊழியங்கள் மிகுந்த ஆபத்தும் போராட்டங்களும், சிக்கல்களும் நிறைந்தவை என்பதை உங்களில் எத்தனை பேர் புரிந்து கொண்டிருக்கின்றீர்களோ என்பது எனக்குத் தெரியாது.

இமயத்தில் நாங்கள் பயணப்பட்டுச் செல்லும் மரண நிழலின் பள்ளத்தாக்குப் பாதைகள் எங்களுக்கு பெருஞ்சவாலாக முன் நிற்கின்றன. கெடு பாதாளங்களுக்கு மேல் கொண்டை உச்சிகளில் வலது, இடது பக்கங்களில் இடமில்லாத இடுக்கமான இமயமலை ரஸ்தாக்களில் பேருந்து செல்லும் வேளைகளில் நாங்கள் எங்கள் கண்களை மூடி பரத்துக்கு நேராக எங்கள் இருதயங்களை ஏறெடுத்து திரும்பவும் ஜீவனுள்ளோர் தேசத்திலே தேவ மக்களாகிய உங்களை சந்திக்கும் ஒரு பாக்கியத்தை தந்தருளும்படியாக மன்றாடிக்கொண்டே செல்லுகின்றோம்.

அங்கு செல்லும் பேருந்துகளில் சுத்தமற்ற, அநாகரீகமான மக்களோடு நாங்கள் அமர்ந்து எங்கள் மூட்டை முடிச்சுகளுடன் பிரயாணம் செய்வது என்பது ஒரு நரக வேதனையான அனுபவமாகும். பேருந்துக்குள்ளேயே ஆடுமாடுகளை ஏற்றிக்கொண்டு பயணிக்கின்றனர். பேருந்துக்குள்ளேயே எச்சிலை துப்புவார்கள். அவசரம் ஏற்பட்டால் அமைதியாக சிறுநீர் கழிப்பவர்களும் உண்டு. கட்டுக்கதையாக உங்களுக்கு தெரியலாம். ஆனால், என் கண்கள் கண்டதை இங்கு எழுதுகின்றேன். நமது கால்களை கடந்து சிறுநீர் சென்று கொண்டிருக்கும். அவ்வப்போது

பயணிகளிடமிருந்து துர்க்கந்தமான நாற்றம் எழும்பிக் கொண்டிருக்கும். பேருந்தினுள் வாந்தி எடுப்பது சர்வசாதாரணம். இவ்விதமான சஞ்சலங்கள் நிறைந்த பயணங்களில் சகோதரனும் நானும் பட்ட பாடுகள் கர்த்தர் ஒருவருக்கே தெரியும்.

நாங்கள் செல்லும் இமயமலைப்பட்டணங்களில் நாங்கள் தங்கும் இடங்களில் படும் பாடுகளைக் குறித்து ஒரு பெரிய சோகக்கதையே எழுதலாம். தனியார் லாட்ஜ்களில் படுக்கும் கட்டில், கழிப்பறை வசதிகள் எல்லாம் மகா மோசமாகும். கழிப்பறைக்குள் செல்லும் ஒவ்வொரு தடவையும் நாங்கள் அதை முதலில் சுத்தம் செய்வது எங்களுக்கு ஒரு வேதனையான கண்ணீரின் அனுபவமாகும். அதை பயன்படுத்தியவர்கள் மனிதர்களா அல்லது விலங்கினங்களா என்று நாம் நினைக்கத் தோன்றும். அறையின் மின் விளக்குகள் மின்மினி பூச்சிகள் போல எரியும். அந்த வெளிச்சத்தின் உதவியால் படிப்பதோ அல்லது எழுதுவதோ கடினமாகும்.

எங்களுக்கு கிடைக்கும் ஆகாரங்கள் பெரும்பாலும் எங்களுக்கு ஒத்துக் கொள்ளுவதில்லை. எனவே, ஆகாரம் சாப்பிடாமல் பசி பட்டினியோடு இருக்கவே நேரிடுகின்றது. இரவில் போதுமான ஆகாரமின்றி நாங்கள் படுக்கைக்குச் சென்ற இரவுகள் அநேகம்.

அத்துடன், முன்பு போல நாங்கள் இந்த நாட்களில் சுயாதீனத்துடன் சுதந்திரமாக கர்த்தருடைய பிரசுரங்களை மக்களுக்கு கொடுத்து ஊழியம் செய்வது என்பது அத்தனை இலேசான காரியம் அல்ல. அது உங்களுக்கும் தெரிந்த ஒன்றுதான். பலாத்கார மதமாற்றம், தீவிர மதப்பிரச்சாரம் என்ற கண்ணோட்டங்களில் மக்கள் எங்களது செயலைப் பார்க்கின்றனர். மிகவும் விவேகத்துடன் தனிப்பட்ட ஆத்துமாக்களுக்கே சுவிசேஷ பிரசுரங்களை வழங்குகின்றோம். சகோதரன் நார்ட்டன் தேவனுடைய பிரதிகளை கொடுக்கும் போது நான் என் வசமிருக்கும் பிரசுரங்களை வெளியே காண்பிப்பதில்லை. அப்படியே, நான் கொடுக்கும்போது அவர்கள் தன்னிடமிருக்கும் பிரதிகளை மறைவாக வைத்துக் கொள்வார்கள். இருவரும் ஒரே நேரத்தில் கொடுத்தால் எங்களை மதப்பிரச்சாரக்காரர்கள் என்று துரிதமாக அடையாளம் காணாமலிருக்கும்படியாக நாங்கள் இப்படிச் செய்கின்றோம்.

நாங்கள், கர்த்தர் இயேசுவுக்காக மேற்கொள்ளும் இந்த வடமாநில தேவ ஊழியம் எத்தனை கஷ்டம், கண்ணீர், பாடுகள் நிறைந்தவை

என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்த வரிகளை உங்களுக்கு எழுதலானேன்.

சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட இடங்களுக்கு அது திரும்ப, திரும்ப அறிவிக்கப்பட்டு வருகின்றது. ஆனால், இந்தவிதமான கடையாந்தர இடங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க யாரும் முன்வருவது கிடையாது. நாசமும், மோசமும் தங்களது செட்டைகளை விரித்துப்படுத்திருக்கும் இந்த பயங்கரமான இமயமலைப் பகுதிகளுக்கு தங்கள் உயிரை கர்த்தருக்காக அர்ப்பணிப்பவர்கள் மாத்திரமே வர இயலும். அந்த பாக்கியத்தை பாவிகளாகிய எங்களுக்குத் தர சித்தம் கொண்ட கர்த்தருக்கு நாங்கள் துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றோம்.

பாவிகளாகிய நாங்கள் தகுதியுடையவர்கள் என்று எண்ணி நம் அருமை இரட்சகர் இயேசு எங்கள் கரங்களில் ஒப்புவித்துள்ள இந்த பொறுப்பான தேவ ஊழியத்தை மிகுந்த ஜெபத்தோடும், மெய்யான ஆத்தும பாரத்தோடும், தைரியத்தோடும் செய்ய, கர்த்தர் எங்களுக்கு உதவி செய்ய நீங்கள் ஜெபிப்பதுடன் நாங்கள் கொடுக்கக் கூடிய ஒவ்வொரு சுவிசேஷ பிரதியும் ஒவ்வொரு ஆத்துமாவை ஆண்டவரண்டை அழைத்து வரவும் அன்பாக மன்றாடிக் கொள்ளுங்கள். அதற்கான பிரதிபலன் பரலோகில் உங்களுக்கு கட்டாயம் உள்ளது.

சிநேகிதனே, உன் உலக வாழ்க்கையின் சம்பவங்கள் படம்போல் உன் மறுவாழ்க்கையிலே தோற்றமளிக்கும். அதுவே நரகத்தின் வேதனைகளை உனக்கு அதிகரிக்கச் செய்யும். நீ செய்துள்ள இரகசிய பாவங்கள், உன்னால் இடருக்குள்ளாக்கப்பட்ட ஏழை மக்கள், உன்னால் வஞ்சிக்கப்பட்ட உள்ளங்கள், நீ உன் பணத்தையும், சுகத்தையும், வாழ்க்கையையும் விரயமாக்கியது யாவும் உன் எண்ணத்தில் வந்து கொண்டேயிருக்கும். மேலும் உனக்குச் சுவிசேஷம் கூறப்பட்ட சந்தர்ப்பங்களும், நீ இரட்சிப்பை சுதந்தரித்துக் கொள்ள உனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகளும் உன் கண்முன்னே தோற்றமளிக்கும். தேவ ஊழியர்கள் உன்னோடு எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் நீ உன் இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டே வீட்டுக்குத் திரும்பிச் சென்றாயே, இவைகளெல்லாம் உன் எண்ணத்தில் தோன்றும். எத்தனை வேதனையான அனுவபம்!

OSWALD J. SMITH

ஆண்டவரே, என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்.

எனது 38-வது பிறந்த நாளாகிய 1927-ம் வருடம் நவம்பர் மாதம் 8-ம் தேதியன்று நான் பின்வருமாறு ஜெபித்தேன். அதாவது "ஆண்டவரே, என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்." என் ஊழியம் எனக்குமுன் இருக்கவில்லை. நாம் விரும்பிச் செய்யும் மற்ற அனேக காரியங்கள் எனக்கு முக்கியமானதாகத் தோன்றவில்லை.

தேவனுடையு பார்வையில் என் சொந்த அந்தரங்க ஜீவியம் எப்படிக் காணப்படுகிறது என்பதே எனக்குப் பிரதானமாயும், அதுவே உண்மையில் பிரயோஜனமுள்ளதாயும் இருந்தது. என் வாசிப்பு அறையில் அந்நாளில் நான் அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருக்கையில் நான் மன்றாடி ஆவியில் விண்ணப்பம் செய்ததாவது, "ஆண்டவரே, என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்" என்பதே.

உண்மையும் சுத்தமுமான இதயம் தேவை,
இருள் சூழாத பிரகாசமான இதயம்,
உமக்கொப்பானதும், தெய்வீகமானதும், தூய்மையானதுமான
சுத்த இருதயத்தை எனக்கருளும் கர்த்தாவே.

இதற்கு முன் ஒருபொழுதும் கண்டிராதபடி நான் செய்யும் வேலையும், நான் வாசிக்கும் புத்தகங்களும், நான் செய்யும் பிரசங்கங்களும், அதை கேட்க குழுமிவரும் ஆட்களும், அவைகளினால் அடையும் சித்தியும் எனக்குப் பிரமாதமாய்த் தோன்றவில்லை. அதற்கு மாறாக என் சொந்த வாழ்க்கையும், என் மனதின் நினைவும், என் இருதயத்தின் தூய்மையும், நீதி நெறியான என் நடக்கையும் ஒரே வார்த்தையில் கூறவேண்டுமானால், தேவாவியின் துணையினால் கிறிஸ்துவின் சாயலாக நான் மறுரூபமாகும் காரியமே எனக்கு மகாபெரிய காரியமாகத் தோன்றிற்று. "ஆ, தேவனோடு நான் நெருங்கி ஜீவிக்க வேண்டுமே" என்ற சொற்கள் முன் ஒரு நாளும் நினைத்திராவண்ணம் நூதனக் கருத்துடன் மிகவும் ஆழமாய் என் மனதில் பதிந்தது. அப்படிக்கொத்த ஒரு அனுபவத்தை ஆசித்து என்னுள்ளம் கதறலாயிற்று. அவரை அறிந்து கொள்ள வேண்டும் என்றிருக்கிறேன் என்று பிரதான அப்போஸ்தலன் பிரார்த்தித்தான். மேலும் அவன் "கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார்" என்றும், "கிறிஸ்துவே எனக்குள பிழைத்திருக்கிறார்" என்றும் பகர்ந்தான். ஆம், நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஆனால் நான்

அப்படிச் செய்யமுடியுமா? என் ஊழியம், என் உடமை இவற்றைப் பார்க்கிலும் நானே தேவனுக்கு மிகவும் மேன்மையாய் இருக்கிறேன் அல்லவா? எனது பணிவிடையை மட்டும் அல்ல, என்னையே தேவன் விரும்புகிறார்.

அதன் பின்னர் ஜெபிக்கும்படியாக அவர் என்னை வழிநடத்தினார். அவருடைய இருதயத்திற்கு என்னை ஏற்றவனாகக் கூடியதாக அவ்விண்ணப்பங்கள் இருந்தன. "ஆண்டவரே, இதோ என் கரங்கள் ; அவைகளை உமக்கு அர்ப்பணஞ்செய்கிறேன். உம்மைக் கனவீனப் படுத்தக்கூடிய யாதொன்றையும் அவைகள் செய்யாதபடியும், நீர் தொட விரும்பாத எதையும் தீண்டாதபடியும் அவைகள் காக்கப்படுவதாக. இதோ என் பாதங்கள்! ஆண்டவரே அவைகளை உமக்குப் படைக்கிறேன். நீர் காணப்படாத இடங்களுக்கு அவைகள் செல்லாமலிருக்கட்டும். ஆண்டவரே, இதோ என் கண்கள், உமது பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துவதொன்றையும் ஒருபோதும் அவைகள் ஏறிட்டுப் பார்க்கவேண்டாம். உமது நாமத்திற்கு அவமதிப்பானதொன்றையும் என் செவிகள் கேட்கவேண்டாம். நீர் கேட்க விரும்பாத எதையும் பேச என் வாய் திறவாதிருப்பதாக. உமது பிரசன்னத்தை அறிந்து பிழைப்பதைப் பாதிக்கக்கூடிய யாதொரு சிந்தனைக்கும், மனோபாவனைக்கும் என் மனம் இடங்கொடாதிருப்பதாக. உம்மால் தூண்டப்படாத எந்த உணர்ச்சிக்கும் ஊக்கமளிக்காமலும், எவ்வித பாசத்திலும் பற்று வைக்காமலும் என் இருதயம், காக்கப்படுவதாக" ஆமென், என்பதே என் ஜெபம்.

ஆண்டவரே சகலத்தையும் படைக்கிறேன்
நண்பர், காலம், உலக செல்வங்கள்
ஆத்மா சரீரம் உமக்கே சொந்தம்,
முற்றும் என்றும் உமக்கே சொந்தம்.

சிதறப்படாத எனது முழு சிந்தையும் தேவன் பேரிலேயே நிலை நிறுத்தப்பட அவர் எதிர்பார்க்கிறதாக நான் கண்டேன். ஏனையவை அடுத்த ஸ்தானத்திலேயே அமைய வேண்டும். நண்பர், அருமையானவர், குடும்பம், பணம், வேலை முதலியவை நியாயமானவைகளேயாயினும், இவை யாவும் கிறிஸ்துவுக்கே முதல் இடத்தை அளிக்க வேண்டும். இரவு பகலாக என் முழுக்கவனமும் அவர் பேரிலேயே. ஆம், அவர் சார்பாக எனது மனோநிலை இப்படிக் கொத்ததாகவே இருக்க வேண்டும். அப்பொழுது மாத்திரம் அவர் என்னை ஆசீர்வதித்து பிரயோகிக்கக் கூடியதாயிருக்கும். அப்பொழுதே அவருடைய நேசமுள்ள இருதயத்தை நான் திருப்தி செய்யக்கூடும். தேவனோடு எனக்குள்ள உறவின் இடையில் எந்த ஆளும், எந்த காரியமும் நுழையக்கூடாது என்று கண்டேன். மனைவியின் நேசத்தில் கணவன் முதல்

இடம் பெறுவதுபோல, எனது இருதயத்தில் தேவனே பிராதான ஸ்தானம் பெற வேண்டும். விவாகத்தில் இணைக்கப்பட்டவருள் யாதாமொருவர், அடுத்தவர் பால் தன் முழுக்கவனத்தைச் செலுத்தத் தவறுகையில் விவாகமானது பாக்கியமற்றதாகிறது போன்று தேவனோடிருக்கும் எனது ஐக்கியமும், எனது சிதைவுபடாத பக்தியினாலேயே பூரணமடையக்கூடியது. இடைவிடாமல் நான் அவருக்கே காத்திருக்க அவர் எதிர்பார்க்கிறார்.

எல்லாம் இயேசுவுக்கே
மீட்கப்பட்ட வல்லமை யாவும் இயேசுவுக்கே,
என் நினைவு, வார்த்தை, செய்கை
என் நாட்கள் நேரம் யாவும் இயேசுவுக்கே.

அந்நாளில் அவர் என்னிடம் கேட்டதை மற்றெல்லாரிடமும் கேட்கிறார். அவருக்கு நம்மேல் உள்ள உரிமையை மறுக்க நாம் துணிவோமா? தமக்கென்று கேட்கும் நமது கவனத்தைப்பெற பாத்திரமான வேறொன்று இவ்வுலகில் உண்டோ? இல்லையானால் அவர் கேட்பவற்றை அவருக்களிக்க ஏன் தயங்குகிறோம்? தேவனுக்கு புறம்பே மெய்யான இன்பத்தை நாம் கண்டடைய முடியுமோ? பொருட்களினால் நாம் பாக்கியராய் இருக்கமுடியுமா? அழியும் பொருட்கள் நம்மைத் திருப்தி செய்கின்றனவா? ஒருவனுடைய ஜீவன் அவன் செல்வப்பெருக்கத்தில் இல்லை. *(லூக்கா 12 : 15)* தமக்கென்றே தேவன் நம்மைப் படைத்தார். நமது கூட்டுறவையும் ஐக்கியத்தையும் அவர் வாஞ்சிக்கிறார். பொல்லாததும் மாறுபாடுமான சந்ததியாராகிய இவ்வுலகத்தாரின் மத்தியிலேயே நாம் அவருடன் நிமிடம் நிமிடமாக இடைவிடாமல் சஞ்சரிக்க வேண்டும். பிரிந்தவர்களாயும் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்களாயும் வாழுகிறவர்ளை வெறுக்கிற உலகம் இது. அத்ன் கடவுள் சாத்தானாய் இருக்கிறான். பரிசுத்தவான்களாகிய பிரெயினார்ட், பிளட்சர் முதலியோர் இவ்வுலகில் தேவனோடு வாழ்ந்த பிரகாரமாக நான் தேவனுடன் சஞ்சரிக்க நாடினேன். நமது ஆண்டவரை சிலுவையில் அறைந்த இவ்வுலகில் அந்நியரும், பரதேசிகளுமாய் இருப்பதுதான், அவர் நம்மைப் பற்றிக்கொண்டுள்ள நோக்கமும், சித்தமுமாம். அப்படியிருக்க, எங்ஙனம் நாம் அவரை ஏமாறச்செய்து அவருடைய புனிதமான அங்கீகாரத்தைப் பெறாமல் போகத் துணிவோம்?

நாம் சமூலமாய் அவருக்கே சொந்தமானவர்களாய் இருக்கத் தேவன் வாஞ்சிக்கிறார். ஆகவே, நாம் முற்றும் அவருக்குரியவர் களாவென்று நம்மை விசாரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பாகம் மாத்திரமல்ல, நூற்றுக்கு நூறு நம்மை அவருக்குத் தத்தஞ்செய்து இருக்கிறோமா? சமூலமாய் நம்மையே அவருக்குப் படைத்துவிட்டோமா? இப்பிரபஞ்சத்திலிருந்தும், நமது குடும்பம் வீடு என்பவையிலிருந்தும்,

"மாம்சம்" என்று சொல்லக் கூடியவையினின்றும் நம்மை விலக்கி, நமது முழுக்கவனத்தையும், சிந்தையையும், அவர் பேரிலேயே செலுத்தும்படியாக அவற்றை அடியோடே மறந்துவிடச் செய்யும்படிக்கு அவரை வேண்டிக் கொள்வோமாக. நமது மாம்சத்திற்கடுத்த பல காரியங்கள் நியாயமான வைகளேயாகும். ஆயினும் நாம் முற்றிலும் தேவனுடையவர்களா யிருப்பதற்காக, சில வேளைகளில் தேவனுடைய ராஜ்ய சம்பந்தமான ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக, நீண்ட காலமாய் நமக்கருமையானவர் களினின்று பிரிந்திருக்க நேரிட்டாலும், அவ்வேளைகளில் நமக்கு நியாயமான சரீர பந்துத்துவங்களை மறுத்துவிட மனமுள்ளவர்களாய் இருக்கிறோமா? அவருடைய கிருபையினால் உலகம் மாம்சமென் பவற்றினின்று அறவே நாம் விலகி இருக்கவும், உள்ளத்தில் வாசம் செய்யும் அவருடைய ஆவியின் பெலத்தால் அவருக்காக மட்டுமே பிழைத்திருக்கவும் இயேசுவையே நமக்கு போதுமானவராகக் கண்டுகொண்டதினால் உள்ளம் பொங்கி "இயேசு என்னைத் திருப்தி செய்கிறார்", என்று போற்றி அவரைப் புகழவும் கூடுமோ? இதுவே அவர் எனக்குப் போதித்த காரியம். இதுவே நாம் சமூலமும் தேவனுடையவர் களாயிருந்து அவருடைய இருதயத்திற்கு உகந்தவர்களாயிருக்க வேண்டும் என்பதற்கு விளக்கமாகும்.

அப்படியானால் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாக இருப்பதென்றால் அவரையே முதல் ஸ்தானத்தில் நிறுத்தி, ஒவ்வொரு வினாடியும் அவருடன் வழிநடந்து, அவருக்குப் பிரியமில்லாத ஒன்றிலும் ஈடுபடாமலிந்து, அவரைத் துக்கப்படுத்துகிறதொன்றிற்கும் இடந்தராமல் இருப்பதாகும். மேலும் அவருக்கு முன்பாக நீதியும் பரிசுத்தமுமாக ஜீவிக்க, சிதைவுபடாத நமது முழு நாட்டத்தையும் அவர் மேலேயே இருத்தி எல்லாவற்றிற்கும் மேலாக அவரில் அன்புகூர்ந்திருப்பதுமேயாகும்.

தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாக இருந்தான் என்று நாம் அறிவோம். அவனுடைய தவறுதலுக்குப் பின்னும் தாவீது அப்படிப்பட்டவனாக இருக்கக்கூடுமானால், நீயும் நானும் ஏன் அப்படி இருக்க முடியாது. தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது என்று தானியேல் தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டான். *(தானியேல் 1 : 8)* நாமும் தானியேலைப் போலிருப்போமாக, அப்பொழுது கர்த்தர் பெலனளிப்பார்.

இவ்வண்ணமாய் நாம் கிறிஸ்துவின் சாயலில் உருவாகுகிறோம். அதுவே தேவன் நம்மைக் குறித்துக் கொண்டுள்ள அதி உன்னத நோக்கமாகும். நாம் அவருடைய குமாரனைப் போலிருந்து அவர் சாயலாக மறுரூபமாகவேண்டும். பத்து வருடங்கள் ஒருவன் கிறிஸ்தவனாயிருந்தும் இன்னும் அவன் குணப்பட்டபோது இருந்ததைவிடச் சற்றும் அதிகமாய்க் கிறிஸ்துவின் சாயலையடையாதிருந்தால் அது மிகவும் துக்கிக்க வேண்டிய

DEVA EKKALAM

REGISTERED NEWS PAPER
Regn. No. M : 8850 / 1970

காரியமே. ஆனால் சிலர் இரட்சிப்பின் அனுபவமடைந்து ஆறு மாதமேயாயினும் அவர்கள் ஆறு வருடகாலக் கிறிஸ்தவர்களைக் காட்டிலும் மேலாகக் கிறிஸ்துவைப் போலிருக்கின்றனர். அவருடைய சமூகத்தில் நீண்டநேரம் தரித்திருக்கிறவர்கள் மட்டுமே அவரை போலாகக்கூடும். தங்கள் முழு மனதையும் அவருக்கு அர்ப்பணம் செய்கின்றவர்கள் மட்டுமே அவரை உண்மையில் அறிந்துக் கொள்ளக்கூடும்.

அவரிடமிருந்து சிறந்ததைப் பெற்றுக்கொள்ளும்படியாக நம்முடைய சிறந்தவற்றை அவருக்கு அளிக்க முன்வர வேண்டும். அவருடைய உள்ளத்திற்கு உகந்த புருஷரும் ஸ்திரீகளுமாயிருப்பதற்காக, நமது அரைகுறை பக்தியை அல்ல, பரிபூரண பக்தியை அவருக்குச் செலுத்துவோமாக. வெற்றிபெற நாம் சரணடைய வேண்டும். பிழைக்க நாம் மரிக்க வேண்டும். பெற்றுக் கொள்ள நாம் கொடுக்க வேண்டும்.

ஆ! இப்படிப்பட்ட வாழ்க்கையினால் வரும் இன்பம் எப்பேர்க் கொத்தது! இம்மையில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை. இவ்வுலகில் நாம் பெறும் சித்தி அனைத்தும் அதற்கு ஈடு செய்யமாட்டாது. அவர் பள்ளத்தாக்கின் "லீலி மலர்", "பிரகாசமான விடிவெள்ளி", "சாரோனின் ரோஜா", "பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்", "அவர் குறையிலா நிறையழகர்". சிநேகிதர் இப்படிப்பட்டவர்களாக இருக்க முடியாது. நமக்கு மிகவும் அருமையானவர்கள் காரியத்திலும் நாம் ஏமாறுகிறோம். செல்வம் நமக்குத் தாங்கமுடியாதப் பாரங்களைக் கொண்டுவரும். ஆனால் அவர் நம்மைத் திருப்தி செய்கிறார். தேவன் ஒருபொழுதும் மோசம் போக்குகிறவர் அல்ல. அவருடன் சேர்ந்து வழிநடப்பது, இவ்வுலகில் நமக்குக் கிட்டும் இன்பகரமான பாக்கியமே. சகலமும் செம்மையாய் இருக்கிறதென்றும், தேவனுக்கும் நமக்கும் இடையில் ஒன்றும் இல்லை என்றும், எந்தப்பாவமாகிய கறுத்த மேகமும் அவர் முகத்தை நமக்கு மறைக்கவில்லை என்றும் அறிவது, ஆம், அதுவே, மாட்சியான மோட்ச பாக்கியமாகும்.

அப்படியானால் அதற்காக ஜெபிப்போம், அதை விரும்புவோம், அவ்வாறே ஜீவிப்போம். "ஆண்டவரே, என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்".

Edited and Published by N. Samuel

MAILING ADDRESS : N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

CPP